மங்கை

அணா எட்

டிசம்பர் 194

பெண்களின் மாதப் பத்திரிகை



பஞ்சாபின் ஆதி குடிகள்

6 JAN 1949
MADRAS

கலியாண விசேஷங்களுக்கும்
திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த
எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகள்



கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி. லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை
4. ஸ்ரீ பால முருகன் அண் கோ. 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ். 119 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுக்கல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ. ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு
7. N.S, குப்புசாமி, N. A. K. சுப்பய்யர் ஜவுளி வியாபாரம், தென்கரை, பெரியகுளம்
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
9. M/S ராஜா அண்டு கோ. மதராஸ் அண்டு ஆந்திரா Dt.
10. M. R சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசுவாமி பிள்ளை வீதி பொள்ளாச்சி

(N. B.) *40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும், பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்,*

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல். — 32, லக்ஷ்மிபுரம் 3-வது தெரு, மதுரை.

உங்கள் பாப்பா!

போக்கிரித்தனம் செய்கிறதா?
பள்ளிக்குப் போகமாட்டே
னென்கிறதா?

"அதெல்லாமில்லை "பாப்பா" வாங்கிக் கொடு என்று அடம்பிடிக்கிறது" என்று தானே சொல்லுகிறீர்கள்!

அது தான் இன்றையத் தமிழ் நாட்டுக் குழந்தைகளின் வழக்கமாச்சே! பேசாமல் உங்கள் பாப்பாவின் முழு விலாசத்துடன் ரூபாய் மூன்று M. O. மூலம் அனுப்பி விடுங்கள் ஒரு வருஷத்திற்கு உங்கள் பாப்பாவைத் தேடி ஒவ்வொரு மாதமும் வந்து சேர்ந்து விடும் பாப்பா.

அப்புறம்?

அப்புறமென்ன? உங்கள் பாப்பா எதிர் காலத்தில் உலகப் பிரசித்தி பெற்ற மனிதராகிவிடப்போகிறது.

ரொம்ப சந்தோஷம், வணக்கம்.
விலாசம் என்ன தெரியுமா?

பாப்பா பத்திரிகாலயம்

115-E, மோபரீஸ் ரோடு

ராயப்பேட்டை :: சென்னை 14

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 5

நமது லட்சியம்	...	தலையங்கம்	5
பெண்களும் யோக ஆசனமும்	...	சிதாலக்ஷ்மி குமாரஸ்வாமி	7
காணி நிலம்	...	ய. லக்ஷ்மி நாராயணன்	12
சுதந்திரம்	...	"சக்திவாணி"	17
பர்ணங்கள்	...	"லக்ஷ்மி"	19
அதிசயப் பிறவி	...	ஸ்ரீமதி கிரி	24
பிரச்னை	...	ஸ்ரீமதி உஷாதேவி மித்ரா	27
பெற்றோர் பொறுப்பு	...	மு. அருணாசலம்	33
அல்லி	...	"விஜி"	37
எருக்கு	...	"டாக்டர்"	40
குளிர்ச்சி	...	டி. எம். கிருஷ்ணசாமி	42
அறுசுவை	...	சரஸி	43
அழகும் அதிருஷ்டமும்	...	சகுந்தலா ராஜன்	45
தனிமையின் இனிமை	...	ஸ்ரீமதி வி. ராமன்	50
குடும்ப வாழ்க்கை	...	எஸ். விசாலாக்ஷி	54
புக்கத்தின் நாட்டுப் பெண்	...	ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாஸன்	55
அழகுக் குறிப்பு	...	'கண்ணாடி'	60
மனத்தின் பொருள்	...	ராஜேந்திரம் இந்திரா	62
பள்ளிக்கூடங்களுக்கு ஒரு யோசனை	...	'பெண்மணி'	71
ராஜகுமாரன் கருணாகரன்	...	காமு	73
குழந்தைகள் விளையாட்டு	...	'குஞ்சலம்'	78
கலை விருந்து	...		79

✲

1947 டிசம்பர்

நீங்கள் நேரில் வந்து
பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2 | சென்னை, டிசம்பர் 1947 | பகுதி 5

நமது லக்ஷ்யம்

சுதந்திர இந்தியாவின் தந்தையும் நமது வழி காட்டியுமான மகாத்மா காந்தியடிகளை வணங்குகிறோம்.

இந்தியப் பெண்களுக்குப் புத்துயிர் கொடுத்து தேசியப் போராட்டத்தில் பெரும் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் நம்மை நடத்திச் சென்ற அவருக்கு நாம் மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

பிரெஞ்சுப் புரட்சி ஏழைகளின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டு. பிரிட்டிஷாருடன் நாம் செய்த போராட்டமும் அத்தகையதே. இன்று சுதந்திர இந்தியாவில் எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நின்று பணியாற்றிய அகில இந்திய மாதர் மகாநாட்டில் முந்திய வருஷங்களில் தலைமை தாங்கியவர்களில் ஒருவர் மத்திய அரசாங்க மந்திரி சபையில் அங்கம் வகிக்கிறார். மற்றொருவர் நமது பிரதிநிதியாக சோவியத் ருஷ்யாவில் இருந்து வருகிறார். இன்னுமொருவர் ஒரு மாகாணத்தின் கவர்னராகவும் இருந்து வருகிறார். இது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

எதிர் காலத்தைப்பற்றி நாம் நன்றாகச் சிந்தித்து செய்ய வேண்டிய வேலைகளுக்கு திட்டம் அமைக்க வேண்டிய தருணம் இது. புது அரசியல் வகுக்கப் பட்டவுடன் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை யளிக்கப் படும். அப்பொழுது சுமார் 10 கோடி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும். சுதந்திரம் வந்து விட்டது. இன்னும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்படவில்லை. இத் துறைகளில் தகுந்த அளவுக்குப் பணியாற்றுவதே நமது கடமையும் லக்ஷ்யமுமாகும்.

நமது லக்ஷ்யம் சித்தி பெற வேண்டுமானால் அதற்கு சக்தி வாய்ந்த ஆயுதம் வேண்டும். சரியான கல்விதான் அந்த சக்தியுள்ள ஆயுதம். இப்போதைய கல்வி முறை அடியோடு மாற்றப்படவேண்டும். புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் வகையில் நல்ல கல்வி முறை ஏற்பட வேண்டும். நம் குழந்தைகளை தற்காலக் கல்விக் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்க வேண்டுமானால் வார்தா கல்வித் திட்டமே சாலச் சிறந்தது.

ஸ்ரீமதி அநுசூயாபாய் காளே

நாட்டின் பொருளாதார சீர்கேட்டைத் தவிர்க்க வேண்டுமானால் ஜனத்தொகை அபிவிருத்தியைக் கட்டுப் படுத்த் வேண்டும். இத்துறையில் பெண்களுக்கு மகத்தான பொறுப்பு உண்டு.

சமூக க்ஷேமாபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடத்த மாகாண மத்திய சர்க்கார்களில் ஒரு தனி இலாகா ஏற்படுத்தி அதைப் பெண்களே நிர்வகிக்க வேண்டும்.

இன்று நம் முன்னுள்ள பிரச்னைகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன. நாடு பிரிக்கப் பட்டதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டியது அவசியமாகிவிட்டது. இதனால் இந்தியாவின் ஐக்கியம் சிதைந்துவிட்டது.

எதிர்கால இந்தியாவில், பெண்கள் பொது வாழ்வில் எல்லாத் துறைகளிலும் நிறையப் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நமக்கும் நம் நாட்டுக்கும் தகுந்த முறையில் நாம் பணியாற்ற முடியும். இவ்வகையில் சர்க்காரின் ஆதரவு முக்கியமாகும். இதுவரை நாம் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து உழைத்ததைப் போலவே எதிர்காலத்திலும் இன்னும் அதிகப் பொறுப்புணர்ச்சியுடனும் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

நாம் சக்தியின் அம்சமாகக் கருதப்படுகிறோம். ஆகவே நமது சக்தியை இந்த நாட்டின் நலத்துக்காகப் பணியாற்றுவதில் ஈடுபடுவதன் மூலம் அபிவிருத்தி செய்து கொள்ளுவோம். இந்தப் பணியில் நாம் வெற்றி காண இறைவன் அருள் புரிவாராக.

சமானமாக வாழ்வோம்!

மாதர்தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த
வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே!

—பாரதியார்

பெண்களும் யோகாசனமும்

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

5

தனுராசனம்

ஒரு வேளை உண்பவன் யோகி,
இருவேளை உண்பவன் போகி,
மூணுவேளை உண்பவன் ரோகி

என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மூன்று வேளையல்ல, நான்கு, ஐந்து தடவை உண்ணும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. நாக்கின் ஷோக்கிற்கும், நாகரீகத்திற்கும் பலியானவர்கள், காலையில் எழுந்திருந்ததும், பல்லைக் கூடத் துலக்காமல் 'பெட் காபி' முதற் கொண்டு, தாட்சண்ய காப்பிகள் வரை சாப்பிட்டு வயிற்றிற்கு தீங்கிழைப்பது கணக்கில்லை. புருஷர்களோ நாம் கொடுப்பதை சாப்பிட்டு, வெளி வேலைகளுக்குப் போய் விடுகிறார்கள். சில புருஷர்கள் வெளியிலும் ஒரு கை பார்த்து விடுவதுண்டு. ஆனால் நம் சகோதரிகளோ வீட்டில் சர்வ சுதந்திரமாய் நினைத்த போது சாப்பிட சௌகரியமிருக்கிறது. அதுவும் காப்பி டிகாக்ஷனை எப்பொழுதும் அடுப்பங்கரையில் வைத்துக் கொண்டு, சாப்பிட்டுக் கொண்டே வேலைகளை செய்யும் சகோதரிகளைப் பார்த்திருக்கிறேன். பாவம்! அவர்களுக்கு கடைசியில் நேருவது என்ன? பசியின்மை, நரம்புத் தளர்ச்சி, பலஹீனம் முதலியன.

காரணம் என்ன?

காப்பி காரணம் ஒரு பக்கம் இருந்தாலும், கணக்கு வழக்கில்லாமல் வயிற்றிற்கு வேலை



தனுராசனம்

கொடுப்பதினுல் தான், அநேக வியாதிக்கு காரணமாகிறது. சாதாரணமாக ஒரு கடலையைக் கடித்து சாப்பிட்டாலும் கூட, அது இரைப்பையை அடைந்த தும், அது உணர்ச்சி அடைந்து, அதை ஜீரணிக்க காஸ்டிரிக் ரசம் கக்கி, கூழ் ஆக்க முயற்சி நடக்கிறது. பிறகு தான் சிறு குடலுக்குள் தள்ளப்படுகிறது. ஒரு கடலைக்கே இந்த நிலை என்ருல் வயிறு நிறைய சாப்பிடும் போது இரைப்பை எவ்வளவு வேலை செய்தாக வேண்டும். நாம் சாப்பிட்ட ஆகாரத்தை ஒரு மணி நேரத்திற்குள் கலந்து கூழ் போல் ஆக்கி சிறுகுடலுக்கு தள்ளி விடுகிறது. திரும்ப அது ஓய்வு எடுத்துக் கொண்டு 4 மணி நேரத்திற்கு பிறகு தான் வேலை செய்ய தயாராய் இருக்கும். கனத்த ஆகாரமாய் இருந்தால், குறைந்தது 5 அல்லது 6 மணி நேரம் பிறகு தான் வேறு ஆகாரம் எடுக்க வேண்டும். இதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் ஒரு நாளுக்கு காலை, மத்தியானம், இரவு தவிர மற்ற நேரங்களில் வாயசைக்க மாட்டோம். தாட்சண்யத்திற்கும், சிநேகத்திற்கும் நாம் பயந்தால், நம் வயிறு கேட்க வேண்டுமல்லவா?

அப்பாவி வயிறு

பகல் முழுதும் நன்ருய் வேலை செய்து விட்டு, இரவில் படுத்துத் தூங்கும் வேலைக்காரனைத் தூங்க விடாமல், எழுப்பி எழுப்பி வேலை வாங்கினுல், அவன் மறு நாள் வேலை செய்வானு? இந்த வேலையே வேண்டாம் என்று போய் விடுவான். பாவம், அப்பாவி வயிறு! எங்கு போக முடியும்! நம்முடைய சரீரத்தில்தான் சிறைப் பட்டிருக்கிறதே. தள்ளிக் கொண்டே இருக்கும் ஆகாரத்தை தன்னுல் கூடுமானவரை சக்தி உள்ள மட்டும் ஜீரணிக்கிறது. முடியாமல் போகும் போது ஆகாரம் ஜீரணமாகாமல் தேங்கி, அழுகி, நாற்றம் உண்டாகி, வயிற்றுப் புண், விஷ ஜுரம் முதலிய கொடிய நோய்களுக்குக் காரணமாகிறது. ஆரம்பத்தில் வயிறு திம்மென்றிருத்தல், பசியின்மை, அருசி, முதலியன உண்டாகும். சிலருக்கு வாய் நாற்றம் பொறுக்க முடியாது. இதை யடக்க ஏலம், லவங்கம், ஜிண்டான், சூயிங்கம் பெப்பர்மிண்ட் முதலியவைகளை மென்று கொண்டே இருப்பார்கள். அவர்கள் பேசும் போது இவைகளின் வாசனை ஒரு பக்கம் கம் மென்று அடிக்க, நாற்றம் ஒரு பக்கம் ஆளைத் தூர ஒதுங்கச் செய்யும். இவையெல்லாம் வயிற்றுக்கு இழைக்கும் கொடுமையின்பலன்.

சிலருக்கு எது சாப்பிட்டாலும் அஜீரணம். காரணம் முன்பு சொன்னதுதான். சாப்பிட்ட ஆகாரம் தள்ளுவதால், புதிதாக வந்த ஆகாரத்தை ஜீரணம் செய்ய, ஒன்றுக்குப் பாதியாக ஜீரணித்துப் பழைய ஆகாரத்தை சிறு குடலுக்குள் தள்ளி விடுகிறது. அதனுல்தான் அஜீரணம், பேதி எல்லாம்.

ஆனுல் இவைகளுக்கு எல்லாம் நாம் செய்வதென்ன? டாக்டரை நாடுவதுதான். வேலை செய்யச் சக்தி அற்றுக் களைத்திருக்கும், இரைப்பைக்குத் தீபன வஸ்துக்களைக் கொடுத்து வேலை செய்யச் செய்கிருர் டாக்டர். அம் மருந்து உட்சென்றதும் முன்னிலும் தீவிரமாய் இரைப்பைவேலை செய்யத் துடங்குகிறது. உடனே நம் டாக்டர் கொடுத்த மருந்து நன்ருய் வேலை செய்கிறது என்று சொல்லி நிறையச் சாப்பிட ஆரம்

பிக்கிறேம். ஆனல் மருந்து தீர்ந்த பிறகோ முன்பைவிடக் கோளாறுகள் பன் மடங்கு அதிகம் உண்டாகிறது.

நாட்டு வைத்திய நம்பிக்கைக் குறைவு

நமது துரதிருஷ்ட வசத்தால் நாட்டு வைத்தியர்களிடம் நாம் மதித்துப் போவதுமில்லை. அதில் நம்பிக்கை வரவரக் குறைந்தும் வருகிறது. காரணம், கண்டவர்களெல்லாம் வைத்தியர்களென்று கிளம்பி விடுவதினுல்தான். அப்படியும் நல்ல வைத்தியர்களிடம் போனல் அவர் ஏதாவது கஷாயம், லேகியம் கொடுத்து, கூடப் பத்தியமும் இருக்கச் சொல்லுவார். பத்தியத்திற்கும், பட்டினிக்கும் பயந்துதானே நாம்சுலபமான மேல்நாட்டு வைத்திய முறையை நாடுகிறேம். அதற்குப் பதில் மிளகு, சுக்குக் கஷாயம் போட்டுச் சாப்பிட்டு, 2 வேளை சாப்பிட்டால் எந்த உதவியும் வேண்டாமே.

தொந்தி கரைய

வெளியில் அதிகமாய்ச் சுற்றித் திரியும் வேலை பெண்களுக்கு இல்லாததால் சிலருக்குச் சுலபமாய்க் கொழுப்பு சேர்ந்து விடும். இந்தக் கொழுப்புக்குப் புகலிடம், வயிறு, தொடை ப்ருஷ்டபாகம் தான். அதிகக் கொழுப்புள்ள பாகத்தில் ரத்தோட்டம் நன்ருய் இருக்காது. நாளடைவில் அங்குள்ள பொடி ரத்த நாளங்கள் தம் வேலையை ஒழுங்காய்ச் செய்யாமல் மழுங்கிப் போகிறது. பிறகு அங்கு நோய்கள் உண்டாக ஏதுவாகிறது. முக்கியமாக வயிற்றில் கொழுப்பு சேருவதால் எல்லா வியாதிகளுக்குமே பிறப்பிடமாகிறது. சிலர் இதைக் கரைக்க ஊசி, மருந்து, பட்டினி எல்லாம் செய்கிருர்கள். பலனே பூஜ்யம்தான். கொழுப்பைக் கரைக்க வேண்டி மருந்து சாப்பிடப்போய் அம்மருந்தின் சக்தியினல் இன்னும் புதிது புதிதான நோய்களை அடைந்தவர்களுக்குக் கணக்கில்லை. இவர்களுக்கெல்லாம் சஞ்சீவி தனுராசனமே.

விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?

இக்காலத்தில் ஒல்லியாய், காற்றில் அசையும் கொடி போல இருப்பதுதான் அழகு, நாகரிகம் என்று எண்ணுகிருர்கள். சிலர் இயற்கையாகவே அவ்விதம் இருக்கிருர்கள். அவர்கள் என்ன தான் சாப்பிட்டாலும், தேகப் பயிற்சி செய்தாலும் கனக்க மாட்டார்கள். அவர்களுடைய பிறவியே அதுதான். விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? மனிதப் பிறவியில் பல ரகம் உண்டு. இவைகளெல்லாம் குடும்ப பரம்பரைப்படிதான் வரும். மெல்லிய சரீரம் படைத்த குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒல்லியாய இருப்பார்கள். கனத்த சரீரமுடைய பரம்பரையில் பிறந்தவர்கள் கனமாய்த்தான் இருப்பார்கள். அவர்களைப் பூசக்காய்ப் போலக் கனக்கவோ, இவர்களை புடலங்காய் போல மெலியவோ செய்ய முடியாது. ஆனல் இருவர்க்கத்தாரும் நல்ல திடகாத்திர சரீரிகளாக வேண்டுமானல் தேகாப்பியாசம் செய்வதினல் தான் முடியும். சதைப்பற்றே இல்லாமல், தாடை ஒட்டி, நரம்புகள் தெரிய, எலும்பும் தோலுமாக இல்லாமல், கொஞ்சம் நிதானமான சதைப்பற்றுடன் ஆரோக்கியமாக இருக்க ஆசனங்கள் செய்வதினல் முடியும்.

கனத்த சரீரிகளிலும் பல விதம் இருக்கிறார்கள். நல்ல உழைப்பாலும், தேகாப்பியாசங்களாலும் சதைகள் இறுகி, கட்டோடும் இருப்பார்கள். இவர்களுடைய உடல் கொஞ்சம் கனமாக இருந்தாலும் நல்ல உடலே. ஆனால் தொங்கி இருக்கக் கூடாது. வெறும் சதை மண்டலங்களாக கொள, கொள வென்று பலூன் காற்று ஊதினாற் போல் இருப்பவர்களுக்கு ஆசனம் கை கண்ட பலன். அவைகளைக் கூடுமானவரை கரைத்து கட்டுள்ள சரீரமாக்கு வது ஆசனமே. சிலருக்கு வயிறும், ப்ருஷ்டமும், தொடைகளும் சேர்ந்து செக்குப் போல பெருத்து, பார்க்க யானை போல இருப்பார்கள். ஆனால் புஜத்தை நோக்கிடிலோ பூனை போல் குறுகி கோபுரம் போல் குவிந் திருக்கும். இவர்களுடைய அன்றாட வாழ்க்கை நரக வேதனைதான். இவர்கள் சுமக் கும் சதைகளுக்கு ரத்தம் பாய்ச்ச முடியாமல் இருதயம் திணறும். கொஞ்சம் ஆடி, அசைந்து வேலை செய்தாலும் இருதயம் வேலை செய்ய முடியா மல் திக்கு முக்காடும். ஆயாசம் ஏற்படும். வேலை செய்தால் ஆயாசம் ஏற்படுகிறதே என்று உட்கார்ந்தே இருந்தால், இன் னும் அதிகச் சதை உண்டாகும். இவர்களுக்கெல்லாம் விமோ சனம் தனுராசனம் தவிற வேறில்லை.

செய்யும் முறை:—விரிப்பில் குப்புறப் படுத்துக்கொள்ளவும். கைகள் பக்கத்தில் ஒட்டியவாறு இருக்கவேண்டும். முகத்தை விரிப்பில் வைத்து, உடலைத் தளர்த்தவும். இரண்டு கால்களை யும் அகட்டி, பின்னுக்கு முட்டி வரை மடித்து சித்திரத்தில் உள்ளபடி, இரண்டு கைகளால், இரண்டு கால்களின் பாதத் தருகில் நன்றாய்ப் பிடித்துக் கொள்ளவும். மூச்சைப் பிடித்து கால்களை உதைத்து மேல் எழும்ப கைகள் விடாமல் இழுத்து, முகத்தைத் தூக்கி, முதுகைப் பின் பக்கம் கூடுமானவரை வளைக்க வும். இது செய்யும்போது வில்லை ஞாபகத்தில் வைத்துச் செய்ய வேண்டும். உடலை வில்லாகவும் கைகளை நாணாகவும் பாவிக்க வேண்டும். இது சரியாய் வந்தது என்பதற்கு அடையாளம், சரீரம் வயிற்றின் மேல் நிற்ப தாகத் தோன்றும். இந் நிலையில் 2, 3 விநாடி இருந்து பிறகு கழட்டி பழைய நிலைக்கு வந்து இளைப்பாற்றிக்கொள்ளவும். இம் மாதிரி மூன்றிலிருந்து ஆறு தடவை செய்யவும்.

இம்மாதிரி செய்தபின், இந் நிலையிலேயே படகைப் போல முன்னுக்கும், பின்னுக்குமாக ஆட்டவேண்டும். இம்மாதிரி மூன்றிலிருந்து, ஆறுதடவையும், பக்கவாட்டில் வலது இடது புற மாகச் சாய்ந்து, மூன்றிலிருந்து ஆறு தடவையும் செய்யவும்.

இவைகளெல்லாம் வந்த பின் கால்களை அகட்டாமல் ஒட்டிய வாறே தூக்க முயற்சிக்க வேண் டும்.

அதிக கனமுடையவர்களுக்கு இது கஷ்டமாய் இருக்கும். ஆனால் அவர்கள்தான் கட்டாயம் செய்யவேண்டியது. காலைப் பின்னுக்கு மடித்து கைகளால் பிடிக்க சிலருக்கு எட்டாது. ஒரு காலை வளைத்துப் பிடித்தால், மற்றொருகால் பிடிக்க எட்டாது. சதைகள் அதிகம் வளர்ந்து தடையாய் இருப்பதே இதற்குக் காரணம். வரவில்லை என்று

விட்டுவிடக்கூடாது. ஒவ்வொரு சிறு முயற்சிக்கும் பயன் உண்டு முதலில் கால்களைக் கைகளால் பிடித்து விட்டால் பிறகு துடைகள் மேலே எழும்பாது. தினமும் முயற்சியுடன் பயிற்சி செய்தால் வரும். மூச்சை, நாம் பழகும் போது சௌகரியப்படி, விடவும், இழுக்கவும் செய்யலாம்.

சில சகோதரிகள், "என் அம்மா! எப்பொழுதும் அது கூடாது, இது கூடாது என்று தள்ளி வைத்துக் கொண்டும், கையைக் காலை மடக்கி தேகத்திற்கு, தினமும் சிரமம் கொடுத்துக் கொண்டும், எப்பொழுதோ வரும் வியாதிக்காக கஷ்டப்படுவானேன்? வியாதி வந்தால் மருந்து சாப்பிட்டு விட்டால் போகிறது" என்று சோம்பேறி வேதாந்தம் பேசுகிறார்கள். இவர்கள் என்னிடமே இம்மாதிரி பிரசாரம் செய்பவர்கள், இப்படி மற்றவர்களிடமும் பிரசாரம் செய்யாமல் இருக்கவேண்டுமே என்று பயமும், அவர்களின் அறியாமைக்கு வருத்தமும் தோன்றுகிறது.

நம் முன்னோர்கள் இதையெல்லாம் அறிந்துதான், உடற்பயிற்சியைத் தெய்வ வழிபாட்டுடன் இணைத்து விட்டார்கள் போலும். விநாயகரைக் கும்பிடும் போது இருகாதுகளையும் பிடித்துத் தோப்புக்கரணம் போடுதல், சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தல், 108 தடவை நவக்கிரக பிரதக்ஷிணை செய்தல், கோவில் பிரகாரங்களை சுற்றுதல், அதிகாலையில் பஜனை கோஷ்டியுடன் ஊர்வலம் வரல், முதலிய தேகப் பயிற்சிகளைப் பக்தி சிரத்தையாக செய்யும்படி செய்துவிட்டார்கள். இந்தக் காலத்திலோ அப்படிச் செய்பவர்கள் சிலரே.

பலன்: இவ்வாசனம் செய்யும்போது வயிறு நன்ருய் அமுங்கி, நசுங்குவதால், சரியான ரத்த போஷணையின்றி சோம்பிக்கிடந்த நரம்புகள் உணர்ச்சி அடைந்து, தேங்கிக் கிடக்கும் வேண்டாத கொழுப்பைக் கரையச் செய்யும். வயிற்றில் இரைப்பை, பித்தப்பை, சிறுகுடல், பெருங்குடல் நசுக்கப்படுவதால், உற்சாகத்துடன் அதனதன் வேலைகளைச் சரிவரச் செய்யும். அஜீரணம் தலைகாட்டாது. வயிற்றுவலி உண்டாகாது. வாய் துர் நாற்றம், நிமிஷத்திற்கு ஒருதரம் ஏப்பம், சாப்பிட்டு 4-மணி யானுலும் உண்டாகும் ஏப்பம், வரிக்கால் முதலியன ஒழியும், மூலம் நீர் ரோகம் (டயபடீஸ்) நிவர்த்தியாகும். கர்ப்பப்பை பலம் அடைவதால் கருச்சிதைவு, குறை பிரசவம் உண்டாகாது. பூரண சுகப்பிரசவம் உண்டாகும். நடு முதுகெலும்பு வளைவதால் இளமையுண்டாகும். நாளெல்லாம் அடுப்பங்கரையில் குனிந்து கிடக்கும் சகோதரிகளுக்குச் சிரமபரிகாரமுமாகும்.

குறிப்பு: இதைக் கர்ப்பிணிகள் புதிதாய் ஆரம்பித்து செய்யக் கூடாது. வழக்கமாய் செய்து வருபவர்கள் கருக்கொண்டால் 3 மாதம் வரை செய்யலாம். பிரசவமாகி 5 மாதத்திற்குப் பிறகு இதைத் துடங்கலாம், மற்ற ஆசனங்கள் பிரசவமாகி 3 மாதத்திற்குப் பிறகு செய்யலாம்.

*



ய. லக்ஷ்மி நாராயணன்

[தேசபக்தர் நாணாஜி, கோடங்குடி கிராமத்தில் தங்கியிருக்கிறார். அவ்வூர்க் குடியானவன் அப்புப் படையாச்சி அவருடைய நண்பனாகிறான். அவன் கோடங்குடி மைனருக்குத் தரவேண்டிய கடனை எப்படிக் கொடுக்க முடியும் என்று தவிக்கிறான். மைனரின் மூத்த மகன் நாணாஜியின் நண்பன். அவன் மூலம் ஏதாவது தன்னால் அப்புவுக்கு உதவி செய்ய முடியுமா என்று முயற்சிக்கிறார் நாணாஜி. சென்னையிலிருந்து வந்த மைனர் மகன் ராஜகோபாலையும், சகுந்தலாவையும் சந்திக்க சிதம்பரம் ஸ்டேஷன் செல்கிறார்].

ஸ்டேஷனுக்குள் நான் நுழையும் முன்னரே பிரயாணிகள் வண்டியிலிருந்து இறங்கி விட்டார்கள். நான் எதிர் பார்த்த நண்பர்களை எனக்கு முந்தியே வரவேற்கும் சந்தர்ப்பம் கோடங்குடி மைனர் வீட்டாருக்குத் தான் கிடைத்தது! மைனரின் மூத்த மகன் ராஜ கோபால் மட்டும் என்னைத் தேடும் தோரணையில் அங்கும் மிங்கும் ஆவலுடன் பார்த்ததை நான் கண்டு கொண்டு கொஞ்ச தூரத்திலேயே நின்றேன். மூத்த மறுமகப்பிள்ளைக்கு மாலை மேல் மாலையாக விழுந்த வைபவம் சினிமாக் காட்சி போலிருந்தது. கலெக்டர் 'ஷேக்ஹாண்டு' கொடுத்து வரவேற்றார். மைனர் மகள் மீனாம்பாள் நவ நாகரீக நாரீமணியாய் அவன் பக்கத்தில் ஜோடி சேர்ந்து நின்றாள். அவள் கழுத்தில் கூட இரண்டொரு மாலைகள் விழாமல் இல்லை! மைனரின் இளையமகனும், இளைய மகளும் இரண்டாவது மறுமகன் பக்கத்தில் குதுகலமே உருவாக நின்று கொண்டிருந்ததில் அதிசயமில்லை. ஆனால் அதிசயிக்கத் தக்க விஷயம் என்னவென்றால் ராஜகோபாலை ஏனென்று கேட்கக்கூட அவர்கள் எவரும் முன் செல்லாததுதான்! என்னைப் போல நீண்ட கதர் ஜிப்பாவும், பரட்டைத் தலையுமாக இருந்த அவன் பக்கத்தில் சகுந்தலா அழகுத் தேவதையே உருக் கொண்டு வந்தது போல நின்றாள். இடது கையிலே ஒரு கதர்ப்பை, வலது கையிலே ஏதோ ஒரு புத்தகம்—

அவ்வளவுதான் அவளுடைய பிரயாண கால சாமான்கள் போலும்! அவனே தன்னை அவர்கள் வரவேற்காதது பற்றிக் கவலையே இல்லாதவன் மாதிரி மரியாதையை விட்டுக் கொடுக்காமல், மாப்பிள்ளையண்டை சென்று, 'வரவேண்டும்!' என்று முகத்திலே மகிழ்ச்சிக்களை ததும்ப அழைத்து, கைகுலுக்கவோ என்னவோ தன் கையை நீட்டினான்.

ஆனால், சீமைக்காரர், திடுக்கிட்டவர் போலப் பின் வாங்கினார்! இதைக்கண்ட இரண்டாவது மாப்பிள்ளை கலகல வென்று சிரித்து விட்டார். மைனரோ முணு முணுத்தார். அவர் முகத்திலே இருந்தாற் போலிருந்து வெறுப்பும், கோபமும் கலந்த களை உண்டானதையும் பார்த்தேன். மூத்த பெண்ணோ 'சரி, சரி, டயம் ஆவுது, புறப்படலாம்' என்று துரிதப்படுத்தினாள். இந்தக்காட்சியைப பார்த்து வியப்புடன் ஒரு மூலையில் தனியாக நான் நின்று கொண்டிருந்ததை முதலில் சகுந்தலா பார்த்துவிட்டாள். பார்த்தவள் அதிசயமும் ஆர்வமும் கலந்த பார்வையுடன் சரசர வென்று என் அருகில் ஓடி வந்தாள். நல்ல வேளையாக ராஜகோபாலைத் தவிர வேறு எவரும் இதைக் கவனிக்கவில்லை. ஆனால் ராஜகோபால் அவளைப் போல் அவசரப் பட்டு ஓடி வரவில்லை. நான் இந்த கிராமாந்திரத்தில் வந்து தங்கி யிருப்பது ஏனென்று அவனுக்குத் தெரியுமல்லவா? நான் இங்கு வந்திருப்பது கண்டு அவளுக்கு வியப்பு உண்டானதில் ஆச்சரியமில்லை.

திடுதிப்பென்று என்னை ஏதாவது வெளிப்படையாகக் கேட்டு விடப் போகிறாளே என்று அஞ்சி, கொஞ்சம் பதற்றத்துடன் பிளாட்பாரத்திலே கூட்டம் இல்லாதிருந்த இடத்தை நோக்கி அவளுடன் நடந்தேன் நல்ல வேளையாக ராஜகோபாலும் எங்கள் பக்கம வந்து விட்டான். 'என்ன நாணுஜி, சகுந்தலா இங்கே நம்மைக் கண்டு கொண்டாளே என்று பிரமித்து விட்டீர்களா?' என்று புன் சிரிப்புடன் நிதானமாகக் கேட்டுவிட்டு மெதுவாகவே சட்டென்று 'முதலில் நான் பிரமித்தே போய் விட்டேன் நாணுஜி, நீங்கள் இந்தப் பக்கத்தில் வந்து இப்படி......

'உஷ்! சகுந்தலா ஏதாவது சொல்லி வைக்காதே. எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். ராஜகோபாலுடன் டீ பார்ட்டி ஆனதும் வந்து சேர். அந்தக்கோஷ்டியுடன் சேர்ந்தே வா. என்னைப் பின்பற்றுவதால் உண்டாகும் நன்மைகளை விட இடைஞ்சல்கள் தான் அதிகமிருக்கும்', என்று நான் முன் கூட்டி எச்சரித்து விட்டு ராஜகோபாலை அருகில் அழைத்தேன்.

'என்னுடைய பெரிய வேலைகளுக்கு இடையே ஒரு சின்ன ஆனால் முக்கியமான வேலையும் இருக்கிறது ராஜா, உங்கள் பண்ணைக் குடியானவன் அப்புப் படையாச்சியை ஞாபகம் இருக்கிறதா? என்று கேட்டேன். அவன் சட்டென்று 'என்ன இப்படிக் கேட்கிறீர் நாணுஜி, அப்புவை நான் சின்னக் குழந்தையாக யிருந்தபோதே அறிவேனே? யோக்கியமானவன். வேலையிலே நிபுணன் கிராமத்திலே அவன் ஆயிரத்தில் ஒருவன்!'

'ஆமாம் ராஜா, ஆனால் அந்த ஆயிரத்தில் ஒருவன் இப்போது

கடன் காரன். அதுவும் உன் தகப்பனாரிடம்!

'அதுவும் தெரியும் எனக்கு?'

'தெரியுமா? திடீரென்று அவன் எங்கேயப்பா அவ்வளவு ரூபாய்க்கு போவான்? உன் தம்பியிடம் இது விஷயமாக ஏதாவது சொன்னால் மைனர் கொஞ்சம் விட்டுக் கொடுப்பார் என்று அவன் என்னிடம் சொன்னான். நானும் உன் தம்பியிடம் சொல்ல ஒப்புக் கொண்டு வந்தேன்.

'உண்மைதான், நான் சொல்வதைவிட அவன் சொன்னால் அப்பா கேட்பார். ஆனால் இப்போது சந்தர்ப்பம் சரியில்லையே என்றுதான் பார்க்கிறேன்.'

'இப்போ வேண்டாம் ராஜா, உன் தம்பியிடம் அப்புறமாகச் சொல்லிப்பார். இங்கே அப்புப் படையாச்சிதான் எனக்கு இப்போதைக்கு உற்ற தோழன்.' ராஜகோபால் பதில் சொல்லுவதற்குமுன் 'தெரிகிறது. இல்லாவிட்டாலும் குடியானவர்கள் விஷயத்தில் நாம் அனுதாபம் காட்ட வேண்டியதுதானே' என்று இடைமறித்துச் சொன்னாள். சகுந்தலா.

'அவர்களுக்கு நாம் அனுதாபங்காட்ட வேண்டிய காலம் மாறிவிட்டது சகுந்தலா. அவர்கள்தான் இப்போது நமக்கு அனுதாபங்காட்ட வேண்டும்,' என்றதும் சகுந்தலா யோசனையுடன் புன்னகை புரிந்தாள்.

'சகுந்தலா காலேஜ் படிப்பில் கவனஞ் செலுத்தாததனால் ஒன்றும் குடி முழுகி விடவில்லை. அவள் ஒரு தேச சேவகியாக

இருப்பதையே நான் விரும்புகிறேன். காலஞ்சென்ற என் கணவரின் ஆசையும் இதுதான்,' என்று சகுந்தலாவின் தாயார் முன்பொருதரம் என்னிடம் சொன்னதுண்டு. அவள் காலேஜை விட்டு விட்டாள். சிறைக்கும் மேடைக்குமாகத் தாவிக்கொண்டிருந்தாள். தீவிரவாதியாகப் பிறர் நினைக்கும்படியும் நடந்துகொண்டாள். இளமைத் துடிப்பும், உணர்ச்சி வேகமும் அவளை ஒரு தீவிரவாதி யாக்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் அவளால் காலேஜ் படிப்பின்போது பெற்றுக் கொண்ட ஒரே ஒரு 'பயனை' மட்டும் விட்டுவிட முடியவில்லை. அதுதான் அவள் ராஜகோபாலிடம்கொண்ட அன்பு! அவனும் எதை மறந்தாலும் சகுந்தலாவை மட்டும் மறக்க முடியவில்லை. அவள் இஷ்டத்துக்கு விரோதமாக அவன் நிற்கவில்லை. தன்னால்தான் தேசநலனை முன்னிட்டு 'தியாகம்' செய்ய இயலவில்லை யென்றால் அவள் செய்வதைத் தடுப்பதற்குப் பதில் ஊக்கவல்லவோ வேண்டும் என்று நினைத்தான். அவள் மூலம்தான் எனக்கு அவன் அறிமுகம் ஆனான். ஆனால் அவளுக்குத் தெரியாது, கோடங்குடிப் பகுதியில் நான் வந்திருப்பது ராஜகோபாலின் உதவியால்தான் என்று!

'சரி, ராஜா, டீபார்ட்டி ஆரம்பமாய் விட்டதுபோலிருக்கிறது. மாலையில் என்னை வந்து காணுங்கள்,' என்று கூறிவிட்டு நான் மீண்டும் தனியே முன் போலப் புறப்பட்டு விட்டேன். நண்பர்களிருவரும் என்னைப் பிரிந்து மைனர் வீட்டுக்கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டனர்.

3

நான் சொல்லியிருந்த சமயத்துக்குச் சரியாக ராஜகோபாலும், சகுந்தலாவும் வந்து சேர்ந்தார்கள். கொள்ளிடத்திலே எப்போதும் தண்ணீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடா விட்டாலும், கரையோரத்தில் உள்ள மடுவில் நீர் ஆறுபோலத் தேங்கியிருக்கும். நாணற்காட்டின் ஓரத்தில் தேங்கியுள்ள அந்த நீரோட்டம் பார்வைக்கு ரம்யமாயிருக்கும். மணலில் அமர்ந்து கொண்டோமானால் கடற்கரையில் அமர்ந்திருப்பதையே ஒத்திருக்கும்.

எதிரே இருந்த நாணற்காட்டைப் பார்த்தவண்ணம் எதோ யோசித்தவண்ணம் அவர்கள்வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நான் குறித்த சமயத்திலே அவர்கள் வந்தது கண்டு உண்மையில் நான் வியப்படையாமல் இல்லை. ஆனால் வாய் விட்டுச் சொல்லாமல் வரவேற்று விட்டு 'இதுதான் கோடங்குடி கடற்கரை!' என்று தமாஷாகச் சொன்னதும் அவர்களும் என்னைப் போலவே சிரித்து விட்டார்கள். 'கோடங்குடிக்கு அழகு தருவது அதைச் சூழ்ந்துள்ள தோட்டந்துறவுகளும், நஞ்சைகளும் இல்லை நாணுஜி, இந்தக் கொள்ளிடம்தான்!' என்று தன் ஊரைப்பற்றி பெருமைப் படுத்திக் கொண்டான் ராஜகோபால்.

'ஆமாம். இந்த நாணற்காட்டில் நுழைந்து கொண்டால் அப்புறம் நுழைந்தவரைக் கண்டுபிடிப்பதென்பது முடியாத காரியம்!' என்று சகுந்தலா விளாசினாள்.

'அப்படியானால் நாணுஜீக்கு ரொம்ப நல்லதாய்ப் போச்சு!'

என்று ராஜகோபால் அதை ஆமோதித்தான்.

'என் ராஜா? நான் கோடங்குடிக்கு வந்தது பின் எதற்காக என்று நினைக்கிறாய்?' என்று நான் கேட்டதும் சகுந்தலா விஷயத்தைத் தெரிந்து கொண்ட மாதிரி 'செய் அல்லது செத்து மடி' என்றகொள்கையை அநுஷ்டான பூர்வமாகச் செய்துகாட்ட வந்திருக்கலாம். பின் வேறு எதற்காக இங்கு நீங்கள் வந்திருப்பீர்கள்?' என்று மீண்டும் கேலியாகப் பேசினாள்.

உண்மையாகவே 'செய் அல்லது செத்துமடி' என்ற கொள்கைக்கும் தீவிரவாதிகளின் புரட்சிக்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்குத் தெரியாது. நான் அந்தமாதிரி தீவிரவாதம் பேசும் தேசபக்தர்கள் பலரை நண்பராகக் கொள்ளும் அதிருஷ்டத்தைப் பெற்றவன். ஆனாலும் அவர்கள் திடீர்ப்புரட்சிப் பேச்சையும், தீவிரப் பிரசங்கங்களையும் எப்போதுமே ஒத்துக்கொள்பவனில்லை. இது சகுந்தலாவுக்கு கடந்த நாலைந்து வருஷங்களாகத் தெரியும். ஆனால் இப்போதைய நாட்டு நிலைமை ஒரு தீவிரவாதியாக மாற்றிவிடும் என்று அவள் நினைத்திருக்கலாம்!

'நான் இன்னும் பழைய நாணுஜிதான் சகுந்தலா. உங்கள் தீவிரத்துக்கும் எனக்கும் முன்போல ஏணிவைத்துப் பிடிக்க வேண்டியதுதான்' என்று நான் சொன்னதும் அவள் நம்பாதவள் போல 'அப்படியானால் நீங்கள் ஏன் இந்தச் சிறு கிராமத்தில் வந்து மறைந்திருக்க வேண்டும்!' என்று கொஞ்சம் படபடப்பாகவே கேட்டாள். இந்தச் சமயத்தில் ராஜகோபால் என் சார்பாகப் பதில் சொல்ல முன் வந்தான்.

'அவர் இங்கு வந்ததெல்லாம் ஒளிந்து மறைந்து வேலை செய்வதற்காக வல்ல சகுந்தலா. கொஞ்சகாலம் கிராமத்தில் தங்கி, அங்கேயுள்ளவர்களுடன் பழகி, அவர்களுக்குத் தன்னால் இயன்ற வரையில் சேவை செய்ய வேண்டும் என்ற உததேசத்துடன் வந்திருக்கிறார். என்னிடம் அவர் இந்த அபிப்பிராயத்தைச் சொன்னதும் நான்தான் இந்தக் கிராமம் உங்கள் நோக்கத்துக் கேற்றது, என்று சொல்லி அனுப்பி வைத்தேன்' என்றான். 'பேஷ், நாணுஜி, நாட்டிலே பூகம்பம் மாதிரி கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும். இச்சமயத்தில் வடக்கே தேசபக்தர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் 'சுதந்திர சர்க்கார்' பிரகடனம் செய்து அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்தொடுத்துள்ள இச்சமயத்தில் 'செய் அல்லது செத்துமடி' என்று காந்தியடிகளே சொல்லிய பிறகு நீங்கள் எல்லாம் கிராமாந்திரங்களுக்கு வந்து 'சேவை' செய்ய வந்திருப்பதைப் பார்த்தால்...

'என்ன சகுந்தலா இவ்வளவு தீவிரமாக என்னைத் தாக்குகிறாயே, நாம் சேவை செய்யும் பாதைகள் பல தரப்படும் என்று முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேனே. எனக்கு என்னமோ இச்சமயம் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைபிடிக்கவில்லை.'

'ஆகவே உங்களைப் போன்ற தேச பக்தர்கள்' கிராம சேவை, சமூகத் தொண்டு என்ற பேரால் இயக்கத்தைப் பலவீனப்படுத்த வேணுமா? என்று ஆத்திரத்துடன் கேட்டுவிட்டு மீண்டும் ஆவேசத்துடன் பேசலானாள். (தொடரும்)

சுதந்திரம்

"சக்திவாணி"

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு. ஆனால் கஷ்டமான பஞ்சமோ, இழைக்கப்படும் கொடுமைகளோ அளவில்லை. காரணம், சுதந்திரம் என்பதில், சுயநல மிகுதியானவர்களின் அதிகாரமும், சொல்லப்படும் பசப்பு வார்த்தையும் நிறைந்திருப்பதால்தான். உண்மைச் சுதந்திரத்தை பாரதியின் புதுமைப் பெண்கள் வகுக்கிறார்கள். இனி "விலகி வீட்டிலோர் பொந்தில் வளரமாட்டோம். உலக வாழ்க்கையின் நுட்பங்களை பற்பல நூற்களாலும், பல நாடுகள் சுற்றியும், உணர்ந்து, அறிவோடு கூடிய ஒரு மனிதரை மற்றொருவர் அடிமை ஆக்கும் பைத்தியக்காரத் தனத்தைப் போக்கி, அன்பென்னும் மேம்பட்ட நெறியால், யாவரும் சமம், சத்தியம், அஹிம்சை, சேவை, அன்பு என்ற நேர்மையான பாதையில் தீவிரமான வைராக்கியத்துடனும், பயமற்ற நிமிர்ந்த நன்னடையுடனும், வஞ்சனையற்ற கருணையுடைய பார்வையுடனும் செல்வோம். அற்பமானதும் கீழ்த்தரமுமான இச்சைகளையும் வளர்க்கும் சிறிய தொண்டுகளை நீக்குவோம். இச்சிறுமைகளை எல்லாம் அன்பென்னும் தீயினுட் பொசுக்கி, அழியாத அமரர்கள் ஆவதற்கு இதோ ஆதி சக்தியின் பூரண அருள் பெற்று வருகிறோம்" என்கிறார்கள். இவ்வுண்மையான சுதந்திர உணர்ச்சியுள்ள புதுமைப் பெண்கள் அளிக்கும் வீரப் புதல்வர்களும் நாரிமணிகளும்தான் நம் நாட்டு சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும். அன்புக்கு அன்பு பணி செய்யும். இது அடிமையல்ல. இது ஆனந்தம். ஆணவத்திற்குப் பணிவதே அடிமை. ஆணவம் ஒழிய அன்பு முறையில் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் சுதந்திரம் சித்தியடையும். உண்மை அன்புடைய ஓர் ஜீவனுடைய நேர்மையான கொள்கை எப்பொழுதும் ஈடேறும். அதை ஒருவரும் எதிர்க்க மாட்டார்கள். எதிர்க்கவும் முடியாது. உண்மையான காட்சியின் முன் எல்லாம் ஒரே பராசக்தியின் சொரூபமாகத்தான் காணப்படும். உயிர் உள்ளனவெல்லாம் அவள் கருணை உருக்கள். அவைகளில் ஓர் அறிவு ஆறு அறிவுவரை உள்ளன. எல்லாம் அவள் உயிருக்கு உயிராகவும், உணர்வுக்கு உணர்வாகவும். ஒவ்வொன்றிலும் அணுவுக்கு அணுவாகவும் இருப்பதால்தான் காணப்படுகின்றன. உள் நோக்கில் அவள் அருவாக நம்முள் இயங்குகிறாள். அருவும் உருவும் நிறைந்ததே இந்த உலகக்

காட்சிகள். அருவம் பிரிந்தால், உருவம் காண முடியாமல் மறைந்துவிடும். உருவமிருந்தால் அருவமான சக்தி உள்ளே இருந்தே தீரும். இப்படி உரு அருவமான பராசக்தியின் சொரூபமான அனைவரும் சமமே என்பதை அனுபவத்தினால்தான் அறிய முடியும்.

அனுபவம் "எனது, யான் என்ற சுயநலமற்று என்னுயிர் எப்படி எனக்குப் பிரிய மானதோ, அதுபோல்தான் அந்தந்த உயிருக்கும் என்று உணர்ந்து, எல்லா உயிர்ச் சக்தியும் ஒன்று என்று அறிந்து, எல்லாவற்றிலும் அன்னை யிருப்பதால் எல்லாம் என் அன்புக்கு உரியது" என்று அகிலத்தை எல்லாம் தன் சொந்தமாக்கிக் கொண்டு, சேவை செய்யும் போது வற்படும்.

இதை அருணகிரியார், 'இதய பாவனாதீதம்' என்று குறிக்கிறார். இதைப் பெற அவர், "எனதும் யானும் வேறாகி, எவரும் யாதும் எனதாகும் இதயபாவனாதீதம் அருள்வாயே" என்று பராசக்தியேயான முருகனை வேண்டுகிறார்.

இம் மேலான சமத்துவ சுதந்திரம் பெற்று உய்ய வேண்டுமானால், நானென்னும் ஆணவந் தள்ளவும், இந்த ஞாலத்தைத் தானெனக் கொள்ளவும் என்பதை, பாரதி "என்ன வரங்கள் பெருமைகள் வெற்றிகள் எத்தனை மேன்மைகளோ, தன்னை வென்றாலவை யாவும் பெறுவது, சத்தியமாகும்" என்றே முழங்குகிறார். எல்லோருக்கும் இன்பம் நிறைந்த சுதந்திரம் வேண்டுமென்ற எண்ணம்தான். எப்படி அடைய வேண்டுமென்ற, ஆன்றோர் உரைத்த வேத தத்துவங்களான மேற்சொன்ன முறைகள் நன்றாகத் தெரியும். அதை ஊக்கத்துடன் செய்யவும் வல்லவர்கள்தான். ஆனால் சுதந்திரத்தை விட மனமில்லாமையாலும்,சக்தியில்லாமையாலும் சுதந்திரம் என்றபேச்சோடுமட்டும்நின்று, மேலும் மேலும், ஆணவத்திற்கும் லஞ்சம், பஞ்சம், காமம், க்ரோதம், மோகம் என்ற அறுவகை கொடுமைக்கும் ஆளாகித் தானும் துன்பமடைந்து, எல்லோர்க்கும் துன்பம் செய்கிறார்கள். இதைப் பாரதியார், "முன்னை முனிவர் உரைத்த மறைப் பொருள் முற்றும் உணர்ந்த பின்னும், தன்னை வென்றாளும் திறமை பெறாதிங்கு தாழ்வுற்று நிற்போமோ" என்று இகழ்கிறார். ஆகையால் சுதந்திரம் என்பது வெற்று வார்த்தை யல்ல. இது மக்களுடைய அனுபவமாக வேண்டும். இம் மகா சுதந்திரத்தை நம்மிடம் நாட ஒட்டாத கொடுமைகளை எல்லாம் அன்னை பராசக்தியிடம் சொல்லி முறையிட்டு நீக்கிக் கொள்ள வேண்டும். பழமைக்குப் பழமையான புதுமைப் பெண்களாக உலகப் பெண்களை ஆக்கி, வீண் வெளி வேஷங்களை நீக்கி, உண்மையான மங்கைகளாக்கி, இவர்களால், தீரமும், பராக்கிரமமும், சத்தியமும், தியாகமும், சேவையும், அன்பும், சமத்துவமும் நிறைந்த புதல்வர்களையும் புதல்விகளையும் நாடும் மக்களும் அடைந்து, எப்பேர்ப்பட்ட சக்தியாலும் அழிக்க முடியாத ஆனந்த சுதந்திரத்தை அடைந்து மகிழ, ஆதி பராசக்தியை நித்தம் நித்தம் பக்தியுடன் வேண்டுவோமாக!

*

பானங்கள்

"லக்ஷ்மி"

உற்சாகத்தை ஊட்டவும்; ஜீரண சக்தியை அதிகப்படுத்தவும் நாம் உட்கொள்ளும் திரவ பதார்த்தங்களை பானங்கள் என்று அழைக்கின்றார்கள். பல்வேறு பான வகைகளுக்கும் அடிப்படையான முக்கிய வஸ்து தண்ணீர். தண்ணீர் மனிதனின் இன்றியமையாத பானம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பான வகைகள் எண்ணிக்கை யற்றவைகள். அவைகளில் நாம் அதிகம் உபயோகிக்கும் சில பானங்களைமட்டும் கீழே விவரிக்கப்பட் டிருக்கின்றது.

சோடா:—சோடா, கலர் முதலிய பான வகைகள் வெற்றிலைப் பாக்குக் கடைகளின் முக்கிய அலங்காரம். பச்சை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள் முதலிய கண்களைக் கவரும் நிறத்தில் புட்டியில் அடைக்கப்பட்டிருக்கும் இந்த பானங்களை வெயிற் காலங்களில் வாங்கிக் குடித்து தாகம் தீர்த்துக் கொள்வது நம்மில் அநேகருக்கு மிக்க வழக்கமாகி விட்டது. சோடா முதலிய பான வகைகளின் அடிப்படையான பொருள் தண்ணீர். தண்ணீரில் வாசனையும், நிறமும், தித்திப்பும் கொடுக்கக்கூடிய சில திரவப் பொருள்களைக் கலந்து கரியமில வாயுவையும் சேர்த்து கண்ணாடிப் புட்டிகளில் அடைத்து வைக்கின்றார்கள்.

கரியமில வர்யு நீரில் கலந்திருப்பதனால்தான் சோடா முதலிய பானங்களுக்கு தித்திப்புடன் சுரீர் என நாவைத் தாக்கும் ஓர் குணமும் சேர்ந்திருக்கின்றது. கரியமில வாயுவுக்கு ஜீரண ரசங்களை அதிகப்படுத்தும் தன்மையும், ஜீரண சக்தியை துரிதப்படுத்தும் குணமும் உண்டு. இதனால்தான் வயிற்றுக்குமட்டல் போன்ற உபத்திரவங்களுக்கு சோடாவை வாங்கிச் சிலர் சாப்பிடுகின்றனர். சோடாவைப் பாலுடன் கலந்தால் பால் திரிந்து விடும். மதுபான வகைகளில் ஒன்றான வைன் என்னும் திராக்ஷை ரசத்துடன் சோடாவைக் கலந்து பருகும் மர்மம் என்னவென்றால் திராக்ஷை ரசத்தில் அதிக அமிலம் இருக்கின்றது. இந்த அமிலம் நாக்கை உணர்ச்சியற்ற தாக்குவதுடன், உமிழ்நீர் சுரப்பதையும் மிக்க பாதித்து விடுகின்றது. சோடாவில் உள்ள கரியமிலவாயு திராக்ஷை ரசத்தின் அமில சக்தியை மழுங்கச் செய்து விடுமாதலினால், திராக்ஷை ரசத்துடன் சோடாவை விட்டுப் பருகுகின்றார்கள்.

சோடா, கலர் முதலிய பானங்கள் செய்ய உபயோகிக்கும் நீரின் ஆரோக்கியத் தன்மை

கண்ணைக் கவரும் வண்ணம், கடைகளிலே வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் சோடா முதலிய பானவகைகளை கண்ணெடுத்தும் பார்க்காதிருந்தால் வியாதிக்கிரையாகாதிருக்கலாம். உண்மையை அறிய இந்தக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

மிகவும் சந்தேகத்திற்குரியது. சுகாதாரமேற்பார்வையின் பயம் இல்லாத தயாரிப்புச் சாலைகளில் கிடைத்த தண்ணீரில் சோடா முதலிய பானங்களைத் தயாரித்து விடுகின்றனர். இதனால் வியாதிகள் சோடா மூலம் பலருக்கு பரவ உதவுகின்றது. மேலும் வியாதிக் கிருமிகள் கரிமில வாயுவில் நன்றாக விருத்தியடையக் கூடும். ஆகவே கலர், சோடா இவைகளைச் சாப்பிடுவதைப் பற்றி ஜனங்கள் யோசிக்க வேண்டியது அவசியம்.

காப்பி, தேநீர், கொக்கோ முதலிய பான வகைகளை நாம் சாதாரணமாக தினம் உபயோகிக்கின்றோம். காபி அல்லது தேநீர் இந்த இரு பானங்களுக்கும் அடிமையாகாத நாகரிக மனிதர்கள் இல்லையென்று திண்ணமாகக் கூறலாம்.

தேயிலை என்னும் இலை காமிலயாதியா என்னும் ஓர் வகைச் செடியின் இலை. இந்தச் செடி சைனா, ஜப்பான், இந்தியாவில் டார்ஜீலிங், அஸ்ஸாம், சிலோன் முதலிய இடங்களில் ஏராளமாகப் பயிராகின்றது.

செடியின் நுனியில், துளிர்த்து வளரும் இளம் கொழுந்து இலையில் அதிகம் நார் இல்லாமல் மிக்க ரசம் உடையதாயிருக்கும். இந்த கொழுந்து இலையை ஆரஞ்சு பிக்கோ என்று அழைக்கின்றார்கள். இதுதான் மிக்க உயர்ந்த ரகமான தேயிலை என்று கருதுகின்றார்கள். நுனிக் கொழுந்திற்கு அடுத்தபடியாக உள்ள இளந்தளிர் இலைகள் சற்று பெரிதாக இருக்கின்றன. அவைகளுக்கு 'பிக்கோ' என்று பெயர். அதற்கு அடுத்தபடியாக கீழே உள்ள இலைகளுக்கு 'சௌச்சான்ஸ்' எனப்பெயர்.

மேற்சொன்ன வகைகளில் பிரிக்கப்பட்ட தேயிலையைச் சேகரித்துப் பதப்படுத்தி உபயோகிக்கின்றனர். தேயிலைத் தூளில் காபீன் என்னும்பொருள் 1-லிருந்து 41-ம் தியோ பிலின் கொஞ்சமும், மணத்தைக்கொடுக்கும் எண்ணெய்ப் பொருள். 01-1-க்கும் இருக்கின்றன. இந்த எண்ணெய்ப் பொருள் ஆவியாகி வெளியேறுவதினால்தான் தேநீரில் இனிமையானதொரு மணம் வீசுகின்றது. இவைகளை எல்லாம் தவிர தேயிலையில் டானிக் ஆசிட் என்னும் பொருள் அபரிமிதமாக இருக்கின்றது. இந்தியத் தேயிலையில் சைனா தேசத்துத்தேயிலையைவிட டானிக் ஆசிட் அதிகம் இருக்கின்றது எனக் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

தேயிலையில் கொதிக்கும் நீரை விட்ட சில நிமிஷ நேரங்களில் தேயிலையின் எடையில் நான்கில் ஒருபாகம் நீருடன் கரைந்து கலந்து விடுகின்றது. தேயிலைமீது நீர் பட்ட உடனேயே காபீன் என்னும் பொருள் தேயிலையினின்றும் பிரிந்து நீரில் கலந்து விடுகின்றது. ஆனால் டானிக் ஆசிட் என்னும் பொருள் தேயிலை நீரில் சில நிமிஷம் ஊறும் படி வைத்திருந்தால்தான் நீருடன் கலக்கின்றது என்று கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

காப்பி என்னும் பானத்திற்கு உபயோகிக்கும் விதை, காபியா அரேபிகா என்னும் செடியினின்று உண்டாகின்றது. இந்தச் செடியின் பழங்களிலிருந்து சேகரித்த காப்பி விதையை நாம் வறுத்துப் பொடியாக்கி உபயோகிக்கின்றோம். வறுத்த காப்பிக் கொட்டையில் காபீன் என்னும் பொருள் 2-1-ம், கேபியால் என்னும் எண்ணெய்ப் பொருள்

கொஞ்சமும், அபரிமிதமாக டானிக்ஆசிடும் இருக்கின்றன.

கேபியால் என்ற எண்ணெய்ப் பொருள் காப்பிக் கொட்டை களை வறுக்கும்பொழுது அவை களின் மீதிருந்து கசிந்து வெளிப் படும். இதுதான் காப்பிக்கு ஓர் விதமான சுகந்த மணத்தைக் கொடுக்கின்றது. காப்பிக் கொட்டைகளிலிருக்கும் டானிக் ஆசிட், தேயிலைத் தூளிலிருக்கும் டானிக் ஆசிடைப் போன்று குடலை அதிகமாக மந்தப்படுத் துவதில்லை. ஆகவே தேநீரைவிட காப்பியே (ஜீரணத்தைப் பொறுத்த வரை) மிகவும் நல்ல பானம் என்று கூறலாம். கேபி யால் என்ற எண்ணெய்ப்பொருள் காப்பிக் கொட்டையை வறுத்து வெகு நாட்கள் டப்பாக்களில் அடைத்து வைத்திருந்தால் மறைந்து விடும். அதனுல் காப் பிக் கொட்டையை அப்போதைக் கப்போது வறுத்துப் பொடி செய்து உபயோகித்தால்தான் நல்ல மணமுள்ள காப்பி தயார் செய்ய முடியும். ஐந்து பலம் காப்பிப் பொடியில் கொதிக்கும் நீரை வார்த்தால் அதில் ஒரு பலம் தண்ணீருடன் கரைந்து விடுகின் றது. காப்பிப் பொடியுடன், சிக்கரிப்பொடிசெய்யும் கருக்கிய சர்க்கரையும் சேர்ந்த தூள் பிரஞ்சு காப்பி என்ற பெயரில் கடைகளில் விற்கப்படுகின்றது.

காப்பி தயாரிக்கும் விதங்கள் பல நாடுகளிலும் பல தினுசாகக் கையாளப் படுகின்றன. வடி கட்டிகள் அல்லது 'பில்டர்' என்ற பித்தளை அல்லது வெண் கலம், அல்லது பீங்கான் இவை களால் ஆன பாத்திரங்களை சாதா ரணமாக நமது நாட்டில் அநேக வீடுகளில் உபயோகிக்கின்றனர். அடியில் துவாரங்கள் அதிகம் உள்ள பாத்திரத்தில் குறித்த அளவு காப்பிப் பொடியைப் போட்டு அதைத் தாங்கிக்கொள் ளும் பாத்திரத்தின் மீது வைத்துக் கொதிக்கும் நீரை வார்த்து மூடி யால் நன்ருக மூடிவிடுகிருர்கள். பாத்திரத்தை மூடா விடில் வெளி மண்டலத்தில் வியாபித் திருக்கும் பிராண வாயுவினுல் கேபியால் என்ற எண்ணெய்ப் பொருள் கெட்டுவிடும். அதனுல் காப்பியின் சுகந்த மணம் பாதிக் கப்படும். இப்படி வடிகட்டுவதி ஞல் காப்பிப் பொடியின் எடை யில் 15 பங்குதான் நீருடன் கரைகின்றது.

காப்பியின் வாசனை கெடாமல் மெல்லியதாக காப்பியை தயா ரிக்க உபயோகிக்கும் ஓர் முறைக்கு 'இன்ப்யூஷன்' எனப் பெயர். நல்ல சுத்தமான துணி யில் காப்பிப் பொடியைப் போட்டு சர சரவென்று கொதிக் கும் நீரைவிட்டு, இறக்குவதற் குத்தான் இப் பெயர்.

துருக்கி தேசத்தில் காப்பிக் கொட்டையை வறுத்துப் பொடி யாக்கி, பச்சை ஜலத்துடன் கலந்து கொதிக்கவைத்து, பின்பு அதில் பாலையும்,சர்க்கரையையும் கலந்து சாப்பிடும் ஓர் முறை அனுசரிக்கப் படுகின்றது.

கொக்கோ என்பது தியோப் ரோமா கொக்கோ என்னும் செடியின் பழத்தின் விதையி னின்று செய்யப்படும் தூள். சாக்கலெட் என்னும் இனிய பண்டமும் இந்த விதைகளி லிருந்துதான் செய்யப் படுகின் றது.

காப்பி, தேநீர் முதலிய பானங் கள் உடலுக்கு வேண்டிய சத் துப் பொருள்கள் அல்ல. இவை களுடன் பாலும் சர்க்கரையும் சேர்த்து நாம் சாப்பிடுவதினுல்

தான் இவைகள் ஓரளவு ஆகாரம் என்ற ஸ்தானத்தை அடைய முடிகின்றன.

மணம் கமழும் ஒரு கோப்பை தேநீரை அருந்தினால் ஒருவித சுறு சுறுப்பு உடம்பில் ஏற்படு கிறது என்பது என்னவோ உண் மைதான். ஆனால் அதிக நேரம் ஊறிய தேயிலையிலிருந்து தயா ரித்த தேநீரை உட்கொண்டால் மலச்சிக்கல், வயிற்றுக்குமட்டல் முதலியவைகள் ஏற்படும். இதைத்தவிர தேநீருக்கு குடலில் வாயுவை உற்பத்தி செய்யும் குணமும் உண்டு. ஜீரணக் கோளாறுகளால் அவதிப்படுகிற வர்கள், பல்ஹீன தேகநிலை உடையவர்கள், நித்திரை வராது தவிக்கும் இயல்புடையவர் இவர் கள் தேநீரை சாப்பிடாதிருப்பது நலம். சிலருக்குத் தேநீர் சாப் பிட்டவுடன் ஹிருதயம் படபட வெனத்துடித்து மிக்க மன அயர்ச் சியைக் கொடுப்பதும் உண்டு.

காப்பி, களைத்த மூளையைத் தூண்டி உற்சாகப்படுத்தி உடம் பின் சோர்வையும், மனக் கலக் கத்தையும் போக்குவதைப் போன்ற ஒரு பிரமையை உண் டாக்கும் பானம். இதனுடைய மேற்சொன்ன குணங்களின் பொருட்டுதான் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் தமது மேஜை மீது கூஜா நிறைய இப் பானத்தை தயார் செய்து வைத்துக் கொள்கிறார்கள்! ஆனால் குடித்த காப்பியின் அள விற்கும் பரீட்சையில் வாங்கும் மார்க்குகளின் அளவிற்கும் ஒரு விதமான தொடர்பும் கிடையாது என்பதை எச்சரிக்கை செய்து விடுவோம்!

காப்பியிலிருக்கும் காபீன் என்னும் பொருளுக்குப் பசியை சாந்தப்படுத்தும் குணம் உண்டு. ஆனால் காப்பியை மட்டும் ஆகாரமாக உட்கொண்டு ஒரு மனிதன் ஜீவித்திருக்க முடியாது என்பதையும் ஆராய்ச்சியாளர் கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜெர்மனியில் சிப்பாய்களிடையே ஒரு பரிசோதனை செய்யப் பட்டது. சிப்பாய்களுக்கு நல்ல ஆகாரம் அளித்த பின்பு அத் துடன் ஒரு கோப்பை காப்பி, அல்லது தேநீர் இந்த இரு பானங்களும் வழங்கப்பட்டது. அவர்களால் பல மைல்கள் களைப்புத் தெரியாமல் நடக்க முடிந்ததாம். வெறும் ஆகாரம் மட்டும் சாப்பிட்டு விட்டு, உற் சாகங் கொடுக்கக்கூடிய காப்பி, தேநீர்ப் பானங்களை அருந்தாமல் நடந்த சிப்பாய்கள் குறைந்த மைல்கள் தூரந்தான் நடக்க முடிந்ததாம். ஆனால் வெறும் காப்பியையோ, அல்லது தேநீரையோ மட்டும் சாப்பிட்டுக் கொண்டு ஆகாரமே இல்லாம லிருந்தால், தேகச் சோர்வு காப்பி, தேநீர்க் குடியர் களிடம் சீக்கிரத்தில் ஏற்பட்டு விடுகிறதாம்.

சாப்பிட்ட உடனே காப்பியை அருந்தினால் ஜீரணம் பாதிக்கப் படுகின்றது. அதிகம் காப்பி சாப் பிட்டால் நரம்புத் தளர்ச்சி, இரு தயப் படபடப்பு, தூக்கமின்மை இவைகள் ஏற்படுகின்றன.

கொக்கோ என்னும் பானத்தை நம் நாட்டில் அதிகம் உபயோகிப்பதில்லை. சிலருக்கு இப்பானத்தின் வாசனை பிடிப்ப தில்லை. ஆனால் சத்துப் பொருள் விஷயத்தில் காப்பி, தேநீர் இவை களைவிட கொக்கோ மிகவும் உயர்ந்தது. 10 கிராம் கொக்கோ தூளில் செய்த பானம் 150 காலரி சக்தியைத் தருகின்றது எனக் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

சாக்கலெட் என்னும் இனிய பண்டம் கொக்கோவைவிட உயர்ந்தது. அரை ஆழாக்குப் பாலும், இரண்டு அவுன்ஸ் சாக்கலெட்டும் 400 காலரி சக்தியைத் தருகின்றதாம்.

ஓவல்டின் :- வியாதியஸ்தர்கள் கர்ப்பிணிகள், குழந்தைகள், முதலியவர்கள் மட்டும் அதிகமாக உபயோகிக்கும் பானம். சர்க்கரை, பால், முட்டை, கோக்கோ அள் முதலியவைகளைக் குறித்த அளவில் சேர்த்துத் தயாரிக்கப் பட்ட மிக்க சத்துள்ள ஆகாரம். ஒரு அவுன்ஸ் ஓவல்டின் 120 காலரி சக்தியைத் தரும் வல்லமையுள்ளது. இப்பானம் தேகத்திற்கு வேண்டிய சத்துப் பொருள்களைக் கொண்டிருப்பதனுல் ஆரோக்கியத்திற்கு மிகவும் ஏற்றது. காப்பி, தேநீர் இவைகளில் உள்ள கெடுதல்கள் இப் பானத்தில் கிடையாது. தூக்கமின்றி தவிப்பவர்கள் சுடச்சுட ஒரு கோப்பை இப்பானத்தைப் பருகினல் தூக்கம் வரும் என வைத்தியர்கள் மிக்க சிபாரிசு செய்கிருர்கள்.

ஷர்பத்துகள்:—இந்தியாவில் அதிகமாக உபயோகப்படுத்தும் பானங்களில் ஷர்பத்துகள் மிகவும் முக்கியமானவை. வெயிற் காலத்தில் குளிர்ச்சியாகவும் இனிமையாகவும் உள்ள பானங்களில் ஷர்பத்துகளுக்கு ஈடு வேறில்லை எனச் சொல்லலாம். நன்னரி முதலிய மூலிகைப் பொருள்களிலிருந்து இறக்கிய சத்து நீருடன் சர்க்கரையும், பல நிறங்களையும் சேர்த்துக் கடைகளில் விற்கின்ருர்கள். இந்த ஷர்பத்துகளை வாங்கித் தேவையான பொழுது குறித்த அளவு நீருடன் கலந்து சாப்பிடலாம். வீடுகளில் சாதாரணமாக தயாரிக்கும் ஷர்பத்து எலுமிச்ச ரசத்திஞல் செய்யப்படுகின்றது. தண்ணீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சர்க்கரை போட்டு தயாரிக்கும் ஷர்பத் மற்ற எல்லா ஷர்பத்துகளை விடவும் உயர்ந்தது. ஏனெனில் எலுமிச்சை ரசத்தில் உள்ள வைடமின் வேறு எந்த ஷர்பத்திலும் இடையாது. வைடமின் 'சி' உடலுக்கு மிக்க தேவையான பொருள் எனச் சொல்லத் தேவையில்லை.

தென்னிந்தியாவில் அடிபடும் மிக்க மலிவான பானம் இளநீர். இதில் 92·1. புரதம், ·62·1. மாவுப் பொருள், சில உப்புக்கள் இவைகள் கலந்திருக்கின்றது. வயிற்று நோவு உடையவர்களுக்கு தகுந்த பானம் இளநீர். பிரயாணம் செய்யும் வழியில் குடிக்க நல்ல தண்ணீர் கிடைக்காவிடில் காப்பி, தேநீர் இவைகளைச் சாப்பிடுவதைவிட இளநீரை வாங்கி அருந்துவது நலம்.

✲

வாழ்க்கையின் முதற் பகுதியில் வெற்றிபெறத் தேவை என்ன தெரியுமா? சுறுசுறுப்பும், ஊக்கமும்தான். இறுதியில் வெற்றிபெறப் பொறுமையும் தன்னடக்கமும் தேவை.

'அரிஸ்டாடில்'

ராஜ தந்திரிக்குத் தைரியமும், திறமையும் இருந்தால் மட்டும் போதாது. புத்தி சாதுரியம்தான் அவனுக்கு எப்போதும் துணையாயிருக்கும்.

'சாணக்யன்

அதிசயப் பிறவி

ஸ்ரீமதி கிரி

நான் கலாசாலையிலிருந்து வந்து புஸ்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். என் மனம் எங்கேயோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. வழக்கம்போல என் கைகள் ஏதோ செய்து கொண்டிருந்தன. பரபரப்புடன் பார்வதி மாமி வந்தாள். அவள் ஒரு அதிசயப் பிரகிருதி.

பார்வதி மாமியை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும். அவர் இருப்பதால் எங்களுக்கு அன்றாட விஷயங்கள் ராய்ட்டர் தந்திகளைப் போலக் கிடைத்துக்கொண் டிருக்கும். ரேடியோவில் செய்திகளைக் கேட்க ஒரு பித்தானையாவது திருப்ப வேண்டும். பார்வதி மாமிக்கு ஒன்றுமே வேண்டாம். தனக்குக் கிடைத்த செய்திகளை ஒலி பரப்புவதில் அவருக்கிணை அவரேதான். அவர் வந்த தோரணையி லிருந்தே ஏதோ பெரிய விசேஷம் நடந்திருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டேன்.

பார்வதி மாமிக்கு எழுதத் தெரிந்திருந்தால் அவருக்கிணையான பத்திரிகாசிரியர் தென் இந்தியாவிலேயே இருக்க முடியாது. விஷயங்களைத் தெரிந்தெடுப்பதிலும், கூட்டிக் குறைப்பதிலும், முதல் பக்க கொட்டை எழுத்து விளம்பரம் கொடுப்பதிலும்; வேண்டாததை இருட்டடிப்பதிலும், கற்பனை சக்தியை உபயோகித்துச் சப்பென்று உப்பு சப்பில்லாதிருந்தவற்றை ருசிகரமாக்குவதிலும் பேராற்றல் வாய்ந்தவர். அவருடைய பெற்றோர் செய்த ஒரு தவறு காரணமாக பத்திரிகைத் தொழிலை வாயோடு நிறுத்திக் கொண்டிருக்கிறார்!

"வாங்கோ மாமி' என்று உபசரித்தேன்.

"அம்மா காரியமா இருக்கிறாளோ?" என்று விசாரித்துக் கொண்டு பின்புறம் சென்றாள். மிக மிக முக்கியமான விஷயமாயிருந்தால்தான் பார்வதி மாமி பனகல் பார்க்குக்குப் போய் பலருக்குப் பிரசாரம் செய்வதற்குப் பதிலாக வீட்டிற்கு வீடு போவாளாகையால், என்ன சாமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறாள் என்று அறிய இயற்கையாக எல்லாப் பெண் மக்களுக்கும் உள்ள ஆவலுடன் நானும் பின் தொடர்ந்தேன்.

"இன்னிக்கு என்ன பலகாரத்துக்கு ஏற்பாடு பண்ணிருக்கேள்" என்றாரம்பித்து பதிலுக்கெதிர் பாராமலேயே சொல்லிக் கொண்டு போனாள்: "சீதாலக்ஷ்மி, எங்கள் ஓர்ப்படியின் நாத்தனார் மைத்துனன் பெண் கல்யாணம் திடீரென்று நின்று போய்விட்டது. கதையைக் கேட்டாயோ, பெண் வந்து

அடுத்த வீட்டுப் பார்வதி அம்மாமியை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஏன் தெரியுமா? இம்மாதிரி அதிசயப் பிறவிகள் எத்தனையோ பேர்கள் நம்மிடையே இருப்பதை மறந்துவிட முடியுமா?

இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்லி விட்டாளாம்.''

''உட்காருங்கோ மாமி, என் பேரனுக்குக் கல்யாணமாக வேண்டாமா? நின்னுண்டே பேசறேளே'' என்று என் தாயார் மணைக்கட்டையை எடுத்துப் போட்டுவிட்டுத் தானும் உட்கார்ந்தாள். நான் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தேன்.

''நான்கூட டாக்டர் ராமமூர்த்தி யாத்துக் கல்யாணத்துக்குப் போகவேண்டும். நேரில் வந்து அழைத்துவிட்டுப் போயிருக்காள் என்று சொன்னேனே இல்லையோ? நேத்து மாப்பிள்ளையை அழைச்சா. நானும் சீமை எழுகடலையும் கடைந்துத் தேடி எடுத்த மாப்பிள்ளை எப்படி இருக்கிறான் என்று பார்ப்போமே என்று போயிருந்தேன். பிரேமலதா—(என். தாயார் முகத்திலெழுந்த கேள்விக் குறியைக் கண்டு) அதுதான் டாக்டர் ராமமூர்த்தியின் பெண்—மின்னல் கொடியைப்போ லிருப்பாள். அவளுக் கேற்ற கணவன் கிடைக்க மாட்டான் என்றுகூட நாங்கள் எல்லோரும் நினைத்தோம். சூட்டும் ஹாட்டும் போட்டுக்கொண்டு துரையாட்டம் நின்ற மாப்பிள்ளையைப் பார்த்ததும் நான் பிரமித்துவிட்டேன். ராஜாவைப் போல ஆஜானுபாகு, நல்ல சிவப்பு. பிரேமலதா அதிர்ஷ்டக்காரிதான் என்று நினைத்தேன்.

''பெரிய பெரிய வெள்ளித் தாம்பாளங்களில் சீர் எல்லாம் கொண்டு வந்து வைத்தார்கள். ஜானகிக்கு வெளிப் பகட்டில் எப்பொழுதுமே அசாத்திய நம்பிக்கை. பார்த்தியோடி! உங்களுக்கு அவளைத் தெரியாது என்பதே மறந்துவிட்டது. ஜானகி தான் டாக்டர் ராமமூர்த்தியின் பெண்டாட்டி.''

''எதிர் ஜாமீன் என்ன கொடுத்தார்கள்,'' என்று என் தாயார் கேட்டாள்.

''அதான் சொல்லிண்டே வரேனே. ஒரு தங்க முலாம் பூசிய வெள்ளித் தட்டில் நூறு ரூபாய் நோட்டாக ஐம்பது நோட்டுகளின் கட்டு ஒன்று வைத்திருந்தார்கள். இது தவிர வைர மிழைத்த தங்கக் கடியாரச் சங்கிலி எல்லாம் சேர்ந்து மாப்பிள்ளைக்கு மாத்திரம் பத்தாயிரத்துக்கு மேல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ''பத்தாயிரமா? நான் காமுவுக்கு டைபாய்டு ஜுரம் வந்ததற்கு மருந்து கொடுத்ததற்காக 250 ரூபாய் பில்லில் 50 ரூபாய் தள்ளும்படி கெஞ்சக் கெஞ்ச, முடியாது என்று சொன்னாரே. இப்படி மாப்பிள்ளைக்குக் கொடுக்கத் தான் சேர்த்தார் போலிருக்கிறது'' என்றாள் என் தாயார்.

''முழுக்கக் கேளேன். உனக்கே ஆச்சரியமாயிருக்கும். நாயனக்காரன் ஏதோ ஹிந்திப் பாட்டை ஊதிக்கொண்டிருந்தான். மாப்பிள்ளை மெதுவாகத் தன் பக்கத்திலிருந்தவர் காதில் என்னவோ சொன்னான். அவர் தான் சம்பந்தி என்று நினைக்கிறேன். அவர் அவருகி லிருந்தவர் காதில் என்னவோ ஓதினார். அவர் எழுந்திருந்து வந்து டாக்டரிடம் ''குசு குசு'' என்று பேசினார். நாயனக்காரனுக்கு ஹிந்திப் பாட்டு அலுத்துப் போய் ''கண்டதுண்டோ கண்ணன் போல்'' என்று ஊத ஆரம்பித்தான். அவ்வளவு ஸ்பஷ்டமாக இருந்தது வாத்தியம்.''

மூச்சு வாங்கச் சிறிது நிறுத்தினாள். என் தாயார் அடுப்பை கவனித்துவிட்டு வந்து 'ஊம்' போட்டாள்.

"டாக்டர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. நேரே காரில் ஏறி வீட்டுக்குப் போனார். நாயனக்காரன் ஊதிக்கொண்டேயிருந்தான்.

ஜானகி வீட்டுக்குத் திரும்பியிருந்தாள். ரௌத்திராகாரமாய் வந்த தன் அகமுடையானைப் பார்த்து அசந்து போய்விட்டாள். 'என்ன சமாச்சாரம்' என்று கேட்டாள். "முட்டாள்கள், இங்கே படித்ததெல்லாம் போதாதென்று சீமைக்குப் போய் ஐ. ஸி. எஸ். பாஸ் பண்ணிவிட்டு வந்திருக்கிறான். நான் என்ன தங்கப் பண்ணையா வைத்திருக்கிறேன். மோட்டாருக்காக பத்தாயிரம் வேணுமாம்" என்று இரைந்தார். "என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கொண்ட பாபம் வீண் போகாது" என்று என் தாயார் முணுமுணுத்தாள். சப்தத்தைக் கேட்டு பிரேமலதா இறங்கி வந்தாள். விஷயம் தெரிந்ததும் "அப்பா, நான் அவரிடம் சில வார்த்தைகள் பேச வேண்டும்" என்றாள்.

"என்ன சொல்லப் போகிறாய்" என்று டாக்டர் கேட்டார்.

"அது என் விஷயம். நான் குழந்தையல்ல, அப்பா" என்றாள் பிரேமா.

அவள் குரலில் தொனித்த தீர்மானமான எண்ணங்களைச் சூசகமாக உணர்ந்த டாக்டர், "நான் போய் அவனை அழைத்து வருகிறேன்" என்று கிளம்பினார்.

"போனால் போகிறது. மோட்டார் வாங்கினால் நீதானே அனுப்பிக்கப் போகிறாய். நீ அவனிடம் இதைக் குறித்து என்னடி கேட்கப் போகிறாய். உன் காரியத்தைப் பார்க்கப் போ" என்று சொன்ன தாயை பிரேமா விழித்துப் பார்த்தாள். ஜானகி பேசாமல் உள்ளே போய்விட்டாள்.

"பிரேமா கூட்டிலடைபட்ட வேங்கையைப்போல கூடத்தில் முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந்தாள். மோட்டார் ஹார்ன் சப்தம் கேட்டதும் சோபாவில் உட்கார்ந்தாள். டாக்டர் மாப்பிள்ளையுடன் வந்தார்.

மாப்பிள்ளை முகத்தில் அசட்டுக் களை தாண்டவமாடிற்று.

சோபாவிலிருந்து பிரேமா 'வெடுக்' கென்று எழுந்து முன்னே சென்றாள்.

"மிஸ்டர் சந்தர் என்னை உங்களுக்கு விவாகம் செய்துகொள்ள பிரியம் இருக்கிறதா" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

"இது என்ன கேள்வி......"

"பதில் சொல்வீர்களா?"

"ஆமாம், அதற்காக இப்படி என்னை இழுக்கடிக்க வேண்டுமா?" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தார் மிஸ்டர் சந்தர்.

"அப்படி யென்றால் மோட்டார் கார் எதற்கு......"

"அது வந்து...ஊம்......" மிஸ்டர் சந்தர் மென்று விழுங்கினார்.

"மிஸ்டர் சந்தர், உம்மை எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் வேறு மனைவியைத் தேடலாம்."

பிரேமா உள்ளே போய்விட்டாள்.

"என் மாமி, ஏதாவது கதையைப் படித்துவிட்டுவந்து ஒப்பிக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"நன்னாயிருக்கு. நடந்ததை அப்படியே சொன்னால்......சரி நான் போயிட்டு வரட்டுமா. நாழியாயிடுத்து......"

பார்வதி மாமி போய்விட்டாள். உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

மரணத்தின் வாயிலில் இருந்தும் இந்த ஜனங்கள் கேவலம் அலங்காரமாக சிங்காரித்துக் கொள்வதுதான் சர்வமும் என்று நினைக்கிறார்கள். ஆனால்: அவர்களிடையே இருக்கும், அவர்கள் மறந்துவிட்ட ஒரு மகத்தான......

பிரச்னை

ஸ்ரீமதி உஷாதேவி மித்ரா: மொழிபெயர்ப்பு: சரஸி

மலையின் திரையை விலக்கிக் கொண்டு பைன், யூகலிப்ட்ஸ் மரங்களின் மறைவிலிருந்து உஷை எட்டி பார்த்தது. நீரோட்டத்தைப் போன்ற வானவெளியின் மடியிலே ஜர்...ஜர்...ஜர் என இரவும் பகலும் மலர்ந்து கொண்டிருந்தன. உஷத் காலத்தின் செவ்வொளி பாதையின் இருபுறத்திலும் படர்ந்திருந்த செடிகொடிகளூடே புன் சிரிப்புடன் விளையாடிக் கொண்டிருந்தது..:...காற்றுடன்கூட......ஓர் விந்தைதான்.

பஞ்சகனி க்ஷயரோக ஆஸ்பத்திரி, ஸானடோரியம் சலனமற்று இரவின் அந்தகாரத்திலே ஆழ்ந்திருந்தது. வீணா மட்டும் கட்டிலில் இருந்தவாறே, மட்டற்ற ஆர்வத்துடன் இயற்கையின், 'ராஜ—ராஜேஸ்வரி ரூபத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். நேற்று அந்தி வேளையில்தான் அவள் பஞ்சகனி ஸானடோரியத்திற்கு நர்ஸாக வந்தாள். அங்குள்ள பத்து ப்ளாக்கையும் பார்த்த பிறகு சாப்பிடாமலேயே தூங்கி விட்டாள்.

7 மணியில் இருந்து ஸானடோரியமே கலகலத்தது. வீணா பயந்துகொண்டு எழுந்து நின்றாள். உடைகளைச் சீர் செய்து கொண்டு, இருபுறமும் வராண்டா சூழ்ந்திருந்த அந்த பெரிய அறையின் வாயிலில் போய் நின்றாள். எதிரே உள்ள தாழ்வாரத்தில்தான் அவள் தூங்கினாள். அறையின் நாற்புறமிருந்த கட்டிலில் உள்ள நோயாளிகள் சொப்பன லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

அவள் அவர்களை மெதுவாக எழுப்பினாள். நாடி பார்த்து விட்டு அவர்கள் தலை மாட்டில் தொங்க விட்டிருந்த "சார்ட்"டில் எழுதினாள். ஆயா வந்து ஜலத்தினால் அவர்களுடைய முகத்தைத் துடைத்தாள்.

எதிரே உள்ள சலவைக்கல் மேஜையைச் சுற்றி நால்வரும் அமர்ந்தனர். வீணாவும் உட்கார்ந்தாள். அவள் கண் இமைக்காமல் அவர்களையே ஆச்சரியத்துடன் பார்க்கலானாள். ஒட்டி உலர்ந்து இருந்த அப் பெண்கள் "பெரிய பெரிய வெண்ணெய் உருண்டைகளையும், 2, 2 முட்டைகள், ரொட்டித் துண்டுகள், கோப்பை நிரம்பப் பால்" யாவற்றையும் அநாயாசமாக சாப்பிட்டு விட்டனர்.

வீணா பால் மட்டும் குடித்தாள். "தாங்கள் எப்பொழுதிருந்து இங்கு இருக்கிறீர்கள்" என மெல்லிய குரலில் கேட்டாள் வீணா.

மூணு வருஷமிருக்கும். ஆனால் முன்பிருந்த நர்ஸ் மிஸ். "மாதுரி" அவளே தங்களைப் போன்று......

நடுவில் குறுக்கிட்டு பேசலானாள் வீணா, "சரி அவள் ரொம்ப நாட்களாய் இங்கே இருந்தவள் அல்லவா? நான் புதிதாய் வந்தவள். இவ்விடத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. உங்களிடமிருந்துதான் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நால்வர், வியாதியஸ்தர்கள். ஏன் ஒரு அறையிலேயே இருக்கிறீர்கள்? டேபிள் பாண்டமலே ஓரத்தில் 2 ப்ளாக் இருக்கின்றனவே, அதில் ஒரு நோயாளிதானே இருக்கிறார்?"

"நாங்கள் 150 ரூபாய் கொடுக்கிறோம். இதிலேயேதான் சாப்பாடு, வைத்தியம், வாடகை, யாவும்; அவர்கள் 700 ரூபாய் கொடுக்கிறார்கள். நாங்கள் எளியவர்கள். அவ்வளவு எங்கிருந்து கொண்டு வருவோம்" என பெருமூச்சு விட்டவாறே கூறினாள் ஒருவள்.

"நீங்கள் ஏன் போய்விடவில்லை. உங்கள் உடல்நிலை நன்றாகத்தானே தென்படுகிறது. ஆனால் இந்த மூவரும் பாவம் மிக்க பலஹீனர்களாக இருக்கிறார்கள்."

"எனக்கு முற்றிலும் குணமாகவில்லை. ஜ்வரம இல்லையே தவிர இருமல் இருக்கிறதே. இவர்கள் பாவம். இந்த சீதோஷ்ண நிலைமையால்தான் உயிரோடு இருக்கிறார்கள். நாங்கள் சாப்பிடுவதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களா?"

"இல்லை, இல்லை" என சங்கோஜத்துடன் பதில் அளித்தாள் வீணா.

"தாங்கள் பொய் சொல்லுகிறீர்கள். இது ஆரம்பம்தான் என்று நான் சொல்கிறேன். 9-மணிக்குப் பால், பத்து மணிக்கு பருப்புச் சாதம், இருவித மாமஸங்கள்; 3-மணிக்கு ரொட்டி, வெண்ணெய், முட்டை, கேக்; 6-மணிக்கு இருவித மாம்ஸங்கள்; 8-மணிக்கு புட்டிங், பால்."

வீணா ஸ்தம்பித்துப் போய் அவளுடைய முகத்தையே கவனிக்கலானாள்.

2

சந்தியின் சாயை இன்னமும் பூமியில் பரவவில்லை. ஸானடோரியத்தின் வெளியே, சிறிய, பெரிய பங்களாக்களை பார்த்துக் கொண்டே வீணா போய்க் கொண்டு இருந்தாள். 10, 12 நாட்களுக்கு உள்ளாகவே அவளுக்கு அந்த இடம் வெறுத்து விட்டது.

அவளுக்கு மிக்க வியப்பை உண்டாக்கிய விஷயம் இதுதான்: "மரணத்தின் வாயிலில் அடைந்திருந்தும் இந்த ஜனங்கள் கேவலம், அலங்காரமாகச் சிங்காரித்துக் கொள்வது தான் சர்வமும் என்று எவ்வாறு நினைக்கிறார்கள்? இந்த க்ஷயரோக விடுதியில் இருக்கும் பெரும் பான்மையான நோயாளிகள், நர்ஸ், டாக்டர்கள் பார்ஸிகள்.

அந்த யௌவனம் மாறிய நோயாளி பெண்களின் தளுக்கு, மினுக்கு, சிங்காரித்துக்கொள்ளும் ரீதி, அல்பமான பேச்சுகள், வம்பு, விமர்சனங்கள்; பார்த்தும், கேட்டும், அவளுடைய ஹிருதயம் வெட்கத்தாலும், அவமானத்தாலும் குன்றியது மட்டுமல்ல,

விரக்தியாலும், வெறுப்பினாலும் நம்பிக்கையை இழக்கத் தொடங்கியது. குழந்தைப் பருவத்தில் இருந்தே எந்த அம்சத்தைப் பார்த்து, எதைப்பற்றி கேட்டுக் கேட்டு, உலகையே அவள் துவேஷத் திருஷ்டியால் பார்த்தாளோ, எந்த விமர்சனம், சஹவாசத்திலிருந்து, தப்புவதற்காக அவள் இன்று சுற்றிச் சுற்றி அலைந்துகொண் டிருக்கிறாளோ, எவ் விஷயங்களில் வெறுப்புற்று அவள் சேவிகா வாழ்க்கையை மேற்கொண்டாளோ அதன் பாதையின் பிரவேசத்திலே இம் மாதிரியான ஆபத்துக்களைக் கண்டு சோர்வுறவில்லை யானாலும், அவள் வைராக்கியம் கொண்டாள்.

தன் நினைவு அற்று நடந்து கொண்டு இருந்தவள்,யாருடைய கோமள ஸ்பரிசம் பட்டதும் திரும்பினாள் ?

"வீணா நீ என்னிடமிருந்து விலகிவிட முயற்சிக்கிறாயா ? ஆனால் நம் எதிர் காலத்திற்கு இது விருப்பமில்லை. நம்மிருவரையும் ஒன்றாகவே பிணைக்க விரும்புகிறது! நீ என்ன சொல்கிறாய் ?''

"எதிர்காலத்தைப் பரிஹஸிக்கிறீர்களா ? நீங்கள் எப்பொழுது இங்கு வந்தீர்கள் ?''

"சில நாட்கள் ஆகின்றன. இன்னமும் சார்ஜ் எடுத்துக் கொள்ளவில்லை.''

"சார்ஜ்......எப்படி ?''

"நான் இங்கே டாக்டராக வந்து இருக்கிறேன்.''

"இது கெடுதலானது நளினி பாபு.''

"ஏன் ?''

"க்ஷயமே ஓர் கொடிய வியாதி'' ....என்று சங்கோஜத்துடன் வாயை மூடிக்கொண்டாள் அவள்.

"அது உனக்கும்கெடுதலானது தானே ? அந்தப் பயமிருந்தால் ஏன் வந்தாய் ?''

"அநேக காரணங்களால் வர நேர்ந்தது. ஆனால் தங்களுக்கு அவ்வாறு இல்லை.''

"நீ எங்கு இருக்கிறாயோ ? அங்கே நானும். இது ஒன்றும் புதிது அல்லவே வீணா.''

"ஆனால் இதில் பயன் இல்லை. நான் மறுபடியும் சொல்கிறேன். தாங்கள் என்னைப் பின்தொடராதிர்கள்.''

"கேள். கேளேன் என்னால் உன்னை மறக்க முடியாது'' நளினி அவள் எதிரே நின்று கொண்டான்.

"இல்லை தாங்கள் கூறுவது தவறு. இது அஸம்பவமானது. நடக்க முடியாதது.''

வீணா போய்விட்டாள்.

3

"வாழ்க்கை முழுமையும் நீ ஓர் புதிராகவே திகழ்வாயா வீணா ?'' என்று எக்ஸ்ரேபோட்டோவைப் பார்த்தவாறே கேட்டான் நளினி.

மற்றொரு படத்தை நீட்டியவாறே, "இந்த விஷயங்களைவிட்டு விடுங்களேன் பாபு. வேலையில் கவனம் செலுத்துங்கள்'' என்றாள் வீணா.

"இல்லை. அவ்வாறு முடியாது. நீ என் மனைவி. என் சஹதர்மிணி ஆகவேண்டும். எப்பொழுது நடந்தாலும் சரி...நான் இதையே எதிர் பார்ப்பேன் வீணா''... ...வாழ்க்கை முழுவதும்.''

"நடக்க முடியாதது என்று தங்களுக்குத் தெரியுமல்லவா ? வீணாக அதைப்பற்றியே பேசி என்னை ஏன் துன்புறுத்துகிறீர்கள் ?

"என் சொற்களால் நீ வேதனை அடைகிறாயா வீணா?"

பதில் கூற முடியாதவளாய் வீணா போட்டோக்களின் பக்கம் குனிந்துகொண்டு, "இதைப் பாருங்கள்" என்றாள்.

"பார்த்திருக்கிறேன். பாம்பேயில் ஒரே காலேஜில் நீயும் நானும் படித்ததில் இருந்தே, இன்றுவரை என் முயற்சிகளை நீ நிஷ்பலனாக்குகிறாய். உன் வராலாற்றைக் கூறவும இல்லை. என்னுடையவளாகவும் விரும்பவில்லை. ஆனால்...நீ என்னை காதலிக்கிறாய்.........என்பதை நான் அறிவேன்......வீணா......நீ ஏன் என்னிடமிருந்து விலக முயல்கிறாய்? இது புதிர் இல்லாமல் வேறு என்ன?"

"நான் என்னைப்பற்றி ஒன்றும் கூறமுடியாது."

"ஏன் அப்படி?"

"அநேக காரணங்களால், நான் தங்களிடமிருந்து விலகி இருக்கவே விரும்புகிறேன்.

சிறிது நேரம் யோசித்த பிறகு துக்கம் நிரம்பிய குரலில், "இப்பொழுதுதான் நீ என்னை விவாகம் செய்துகொள்ள விரும்பவில்லை என அறிந்து கொண்டேன்."

ஆனால் நண்பன் என்னும் முறையில் கேட்க விரும்புகிறேன். பதில் அளிப்பாயா?"

. "சொல்லுங்கள்."

"கன்னியாய் வாழ்க்கையில் எதுவரை இருப்பாய்? நிச்சயம் விவாகம் செய்துதான் கொள்வாய். அந்தப் பாக்கியவானின் பெயரை நான் கேட்கலாமா?"

"நான் நிச்சயம் விவாகம் செய்து கொள்வேன் என்று நினைக்கிறீரா?"

அவள் உதடுகளில் புன் சிரிப்பு தவழ்ந்தது.

தாய், தந்தை அற்ற ஹிந்து யுவதி எவ்வாறு தனியாக இருக்க முடியும்?

வீணாவின் முகம் வாட்டமடைந்தது. "தாங்கள் கேட்க விரும்பியது இவ்வளவுதானா?"

"ஆம்."

"நான் பதில் கூற இயலாதவளாய் இருக்கிறேன்" என மிருதுவான குரலில் கூறினாள் வீணா. அவள் கண்ணீரை அடக்க விரும்பினாள். தன் பலஹீனத்தை நொந்து கொண்டாள், அவள் தனக்குத் தானே ஆதரவாய், இருக்கவேண்டுமோ? அவளுக்கு துர்ப்பலமான ஹிருதயம் சோபை அல்லவே?

"நான் இவ்விடத்தியவேலையை விட்டுவிடுகிறேன்." அவள் குரல் கலவரமாய், ஆனால் ஸ்திரமாய் ஒலித்தது.

4

700-வது ப்ளாக் களிப்பும் கொண்டாட்டமுமாய் அமர்க்களப்பட்டது. புதிதாய் வந்துள்ள அழகிய நோயாளியின் ஆடை, ஆபரணங்கள், விலையுயர்ந்த சாமான்களைப் பார்ப்பதற்கு விடுதியின் ஊழியர்களிலிருந்து நோயாளிகள் வரை போய்க் கொண்டிருந்தார்கள். வாத விவாதங்கள் மிருதுவாய் ஒலித்தன. ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்: "இவள் ராணியோ?" மற்றொருவன் நடுவில் குறுக்கிட்டு, "ஹிந்து அல்ல, முஸல்மான் என்றான். மற்றொரு குரல் "யாருடைய பேகமோ!" என்றது. இம்மாதிரி பல பேச்சுகள், அழகைப் பற்றின வர்ணனை "35, 36 வயது ஆனாலும் யுவதிபோல் அல்லவா

இருக்கிறாள். நிறத்தைப் பார். ரோஜா மலரைப் போல்.''

மக்மல் படுக்கையில் அந்த ஸ்திரி படுத்திருந்தாள். 2, 3 ஸ்திரிகள் சாமான் எடுப்பதில் ஈடுபட்டு இருந்தனர். ஒருக்கால் அவளுடைய வேலைக்காரிகளாகவும் இருக்கலாம்.

வியாதியால் அவளுடைய அழகிய மேனி வாடி இருந்தாலும், கஷ்டமும் துக்கமும் அவளுடைய ஒளி வீசும் உருவத்தை உருக்குலைத்திருந்தாலும், அவளுடைய அகன்ற விழிகளின் மயக்கும் மோகனப் பார்வையிலே கர்வமும், போக இச்சையும் அலட்சியமான பாவத்தாலும் நிரம்பிய அவளுடைய ஹிருதய பாவமே திகழ்ந்தது.

அநேக நர்ஸ்களும், டாக்டர்களும் சூழ நளினியும் நோயாளியைப் பார்வையிட வந்தான்.

கட்டிலின் பக்கம் பார்வை சென்றதும் திடுக்கிட்டான், "நீயா ஹீராபாயி! நீயா! நளினி?'' ஆச்சரியத்துடன் கேட்டான். அறையில் உள்ள யாவரும் பிரமித்தனர். ஹீராபாயின் பிரஸித்தி பெற்ற பெயரை அவர்கள் கேள்விப் பட்டிருக்கிறார்கள்.

கீழே விழுந்து விடாமல் இருப்பதற்காக மூலையில் உள்ள அலமாரியைப்பிடித்துக்கொண்டாள் வீணா.

"ஆம் பாபு, நான் நோயாளி ஆகிவிட்டேன். இங்கே க்ஷயத்திற்கு வைத்தியம் செய்யப்படுகிறது எனக்கேள்விப் பட்டேன். ஆனால் இப்பொழுது பச்சாதாபப் படுகிறேன். அவர் என்னை ஆவாலி க்ஷய ஆஸ்பத்திரிக்குத் தான் போகும்படி கூறினார். இது பஞ்சகனி, பரவாயில்லை. நாளைக்காவது, நாளை மறுநாளாவது போய்விடுவேன் பாபு. தாங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்?''

- "நான் இங்கே டாக்டர்.''

இவ்வளவு நேரத்திற்குப் பிறகு தான் ஹீரா, வீணாவைப் பார்த்தாள். நளினி பாபு குறுக்கிட்டிராவிடில் இருவரும் ஒருவரை ஒருவர் கலக்கத்துடன் பார்த்தவாறே இருப்பார்கள்.

"உனக்கு வீணாவைத் தெரியுமா?'' என்ன? என்று மிக்க ஆர்வத்துடன் கேட்டான் நளினி.

"வீணா, வீணா! நீ இவ்வளவு பெரியவள் ஆகிவிட்டாயா? அதே வீணா தானே? இல்லை, இல்லை. எனக்கு இவளைத் தெரியாது.'' அவள் தன் இருகைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

சில நிமிஷம் இருவரையும் ஆழ்ந்து கவனித்து விட்டு நளினி வீணாவின் அருகே சென்றான்.

"என்ன இப்பொழுதும் உன்னை மறைத்துக் கொள்ள விரும்புகிறாயா?'' அவள் இப்பொழுது தன்னையே மறந்து விட்டிருந்தாள்.

"பிறகு.''

"நீ இந்த வேசியின் மகள் என நான் கூறுவது தவறா?''

"நீங்கள் என்னிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?''

"ஒன்றுமே இல்லை'' என்று வெறுப்புடன் கூறலானான் அவன். "என்னை இந்த வேசியின் மகளின் விவாக பந்தத்திலிருந்து தப்புவித்த கடவுளுக்கு வந்தனம்.''

கவிழ்ந்திருந்த கண்களை நிமிர்த்தி, "போதும், இந்த ப்ரேமை. காதலின் பலத்திலா கணவனாக வந்தீர்? தாங்கள் எதுவரை இந்த அப்பாவிகளின்

குதூகலத்தை, ரஸமுடன், ஆனந்தமாய்ப்பிரயோஜனப்படுத்திக் கொள்கிறீர்களோ அதுவரை நான் பாபுஜியை கவனித்துக் கொள்கிறேன்'' என்றாள் வீணா.

"நான் ஓர் வேசியின் புத்திரியையா விவாகம் செய்துகொள்வது?"

"அவ்வாறு செய்யும்படி நான் எப்பொழுது கூறினேன்? இந்த வேசிகளின் ஜன்மமே இப்படி ஏற்பட்டது.

"தங்களைப் போன்றவர்கள் கூட போட்டி போட்டுக் கொண்டு வெறுக்கும்படியாய் இருக்கும் இந்த வேசிகளின் பிறப்பே எவ்வாறு உண்டாயிற்று? என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்."

"வீணா உண்மையில் இதுதான் உன் தாயா?" அவனுடைய கேள்விக்கு அவள் விடை அளிக்க விரும்பவில்லை.

"தாங்கள் கேள்விக்கு, விடையளித்தால்தான் என் உண்மையான வரலாறு உமக்குக் கிடைக்கும்."

அவன் நின்று கொண்டே யோசிக்கலானான். ஆச்சரியம் ததும்பும் விழிகள் அவர்கள் இருவரையும் வட்டமிட்டன. வீணா மூர்ச்சையுற்று இருந்த ஹீராவின் முகத்தில் தண்ணீர்தெளித்துக் கொண்டிருந்தாள்.

சுதந்திரத் தீ

சுதந்திரம் என்பதும் அடிமை என்பதும் மனோநிலைகளேயன்றி வேறல்ல. ஆதலால் நீங்கள் செய்யவேண்டிய முதற் காரியம் 'இனிமேல் நான் அடிமை என்னும் நிலையை ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன். அவைகள் என் மனச் சாட்சிக்கு விரோதமாயிருந்தால் அவற்றை மீறவும் செய்வேன்' என்று தீர்மானித்துக் கொள்வதேயாகும். எஜமானன் என்று கூறிக்கொள்பவன் உங்களை அடிக்கலாம். தனக்குச் சேவை செய்யுமாறு நிர்ப்பந்திக்கலாம். ஆயினும் நீங்கள் அது முடியாது, பணத்துக்காகவும் சேவை செய்யமாட்டோம், பயந்துபோயும் சேவை செய்யமாட்டோம் என்று நிர்ப்பந்திப்பவனிடம் சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்வதால் அளவிறந்த துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். அதற்குத் தயாராயிருந்தால் அந்தக்கணமே சுதந்திரத் தீவர்த்தி எரிய ஆரம்பித்துவிடும். அதை யாராலும் ஒரு பொழுதும் அணைக்க முடியாது.........

காந்தியடிகள்.

பெற்றோர் பொறுப்பு

மு. அருணாசலம்

குழந்தையின் பண்புகள் தக்க முறையில் அமைவது, மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. குழந்தையின் வாழ்க்கையை ஒரு முக்கோணம் என்று நாம் உருவகம் செய்யலாம். அந்த முக்கோணத்தின் பரப்புத் தான் குழந்தையிடம் அமைகிற இயல்புகள். முக்கோணத்திற்கு அடிப் பீடமாகிய ஒரு கோடு உண்டு. அந்தக் கோட்டின் இரு முனையிலும், வேறு இரு கோடுகள் வ்ந்து பொருந்தி, உச்சியில் தாம் இரண்டும் ஒன்றாய்க் கூடிக் கொள்ளும். இவ்விதம் குழந்தையின் இயல்பு என்று சொல்லக் கூடிய முக்கோணத்தை வரையறை செய்பவை மூன்று பக்கங்கள் என்று (சொல்லத்தக்க மூன்று கோடுகள். இவற்றுள் மேற்கூறிய அடிப் பீடம், அல்லது அடிக் கோடு என்பதைக் குழந்தை மனோதத்துவ ரீதியாக, பாரம்பரியம் என்று) சொல்லுவோம். மற்ற இரண்டு பக்கக் கோடுகளையும் முறையே சுற்றுச் சார்பு, பயிற்சி என்று குறிப்பிடலாம்.

பாரம்பரியம் என்பது, ஒவ்வொரு குழந்தைக்கும் பிறவியிலேயே திட்டமாய் இன்னது தான் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது, பாரம்பரியப் பண்புகள் பெற்றோரிடமிருந்தும் அவர்கள் பெற்றோரிடமிருந்தும் மற்ற மூதாதையர்களிடமிருந்தும் குழந்தைக்குக் கருவிலேயே வந்து பொருந்தியவை. வழி வழியாக வந்து அமைகின்ற இந்தப் பாரம்பரியப் பண்புகளை யாரும் மாற்றவோ திருத்தவோ முடியாது. முன்னமே குறிப்பிட்ட முக்கோணத்தை பார்த்தோமேயானால், இந்தக் கருத்தின்படி பாரம்பரியமாகிய அடிக் கோடு குறித்த அளவுடையது அதாவது, அதன் இரண்டு முனைகளும் இன்ன அளவுடையன என்று வரையறுக்கப் பட்டுவிட்டன. அந்தக் கோட்டை இந்த வரையறைக்குமேல் நீட்டவோ அதை விடக் குறைக்கவோ முடியாது. அப்படியானால், இந்த எல்லைக்குள் அடங்கிய கோட்டின் மேல் எப்படிப்பட்ட முக்கோணம் வரையலாம் என்பது கேள்வி. முக்கோணத்தின் மற்ற இரண்டு கோடுகளையும் குட்டையான கோடுகளாக வைத்துக்கொண்டால், முக்கோணத்தின் விஸ்தீரணம் சுருங்கி விடுகிறது. அன்றி, முக்கோணத்தின் மற்ற இரு கோடுகளையும் நிமிர்த்தோ, சாய்த்தோ, நீளமாகவோ, குட்டையாகவோ எப்படியெல்லாம் நாம் வரைகிறோமோ அப்படியெல்லாம் அதன் விஸ்தீரணமெல்லாம் வெவ்வேறு விதமாக அமைகிறது.

அதாவது, மேலே சொன்னபடி குழந்தையின் பாரம்பரியம் திட்டமாக இன்னதுதான் என்று

ஏற்பட்டிருந்த போதிலுங்கூட, அதன் சுற்றுச் சார்பையும் அதற்கு அளிக்கும் பயிற்சியையும் தக்கபடி நாம் அமைப்பதின் மூலமாக, குழந்தையின் இயல்புகளை எத்தனையோ விதங்களில் மாற்றியும் திருத்தியும், நாம் விரும்புகிற வழிக்குக் கொண்டு வர முடியும். குழந்தை வளர்ப்பு என்பதில், இந்தக் கருத்து மிகவும் முக்கியமானது. கேடான குடும்பதில் ஒரு குழந்தை பிறந்துவிட்டது என்ற காரணத்தால் அதன் இயல்புகளைத் திருத்துவதற்கு இடமில்லை என்று யாரும் அதைரியம் அடையலாகாது. அதே போல, குறித்த ஒரு சீலமான குடும்பத்தில் பிறந்த குழந்தை சிறந்த ஒழுக்கமுடையதாக இருக்கும் என்று திட்டமாய்ச் சொல்லுவதும் சரியாகாது; சூழ்நிலை காரணமாகவும், தவறான பயிற்சியின் பயனாகவும், இத்தகைய குழந்தையிடம் துர்க்குணமே மலிந்திருப்பதைக் காணலாம். சமூகத்தில் அவரவர் வாழ்க்கையில் இதற்கான உதாரணங்கள் எத்தனையோ ஞாபகம் வரக்கூடும். எனவே, பாரம்பரியப் பண்புகள் நம் ஆதிக்கத்திற்கு உட்படாதவையாகையால், அவற்றை விட்டுவிட்டு ஆராயும் போது, சுற்றுச் சார்பும் பயிற்சியும் தகுந்த தன்மையுடையனவாயிருக்கும்படி நாம் செய்ய முடியும்; செய்வதின் பயனாய், குழந்தையிடம் கருவிலேயே பொருந்தியுள்ள பாரம்பரியப் பண்புகளில் தாழ்ந்த அல்லது விரும்பத் தகாத அம்சங்கள் வெளிப்பட்டு வலுப்பெறுவதற்கு இடம் கொடாதபடி சுற்றுச் சார்பை அக் குழந்தைக்கு நாம் அமைக்கலாம். சிறந்த பண்புகள் வெளிப்பட்டு ஓங்கத் தக்கபடியும், நல்ல பண்புகள் புதிதாக வந்துபொருந்தும்படியும், பயிற்சியளிக்கலாம். இந்த இரண்டு விஷயங்கள் சம்பந்தமாகவும் பெற்றோருக்குப் பொறுப்பு அதிகம். சமூகத்திற்கும் அரசாங்கத்திற்குமே இவை பற்றிய பொறுப்பு அதிகமாக உண்டு. ஆயினும் பெற்றோர், வளர்ப்போர், ஆசிரியர் ஆகியவர்களுடைய பொறுப்பே முதன்மையானது.

சுற்றுச் சார்பு என்பது, சுற்றியுள்ள வீடு, தோட்டம், விளையாடுமிடம், பாடசாலை, கோவில் முதலான இடங்கள் மட்டுமல்ல. பெற்றோர், மற்ற உறவினர், அடிக்கடி வந்து பழகும் நண்பர்கள், தோழர், வேலைக்காரர் ஆகிய அனைவரும் சுற்றுச் சார்பு என்ற தொடர்பினுள் அடங்கியவர்களே. இவர்கள் பழகுகிற முறை, மற்றச் சமூகத்துப் பழக்க வழக்கங்கள் முதலிய எல்லாம் சேர்ந்ததே சுற்றுச் சார்பு. ஆகவே, குழந்தையின் வளர்ச்சிக்கு இங்கு முதலாவதாக வேண்டுவது, செம்மையான ஆரோக்கியம் பொருந்திய சூழ்நிலையாகும். அடுத்தபடியாக, குழந்தையுடன் பழகுவோர் அனைவரும் உடல் ஆரோக்கியம் பெற்றிருப்பதோடு கூட, உள ஆரோக்கியமும் பெற்றிருத்தல் வேண்டும்.

உபதேசமும் நடத்தையும்

குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்து வருவதைவிட சொல்லாமல் தானே வருவதுதான் கற்றலில் பெரும் பகுதி; இதுவே உறுதியான கல்வியுமாகும். எனவே, உபதேசம் செய்வதால் மட்டும் குழந்தையிடம் மேலான பலன் விளைந்துவிடாது. உதாரணமாக "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று குழந்தைக்கு உபதேசம் செய்

வதைப் பார்க்கிலும், இவ்வுபதேசத்தின் கருத்தை வாழ்க்கையில் இளங் குழந்தை மெய் என்று தானே கண்டு உணருமாறு பழக்குவதே சிறப்புடையது, பயனும் உடையது.

உபதேசத்தை விட நடத்தையே பலனளிக்க வல்லது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஏன் நடத்தை சிறப்புடையது என்பதை உணர்ந்தால் குழந்தை வளர்ப்புப் பற்றிய கருத்துக்கள் பல தெளிவு பெறும். உள்ளத்தில் எழுவதாகிய எண்ணம் அல்லது கருத்தும், அக் கருத்துப் பற்றிய பொருள் வளர்ச்சியும், இளங் குழந்தையிடம் உண்டாவதில்லை. வயது செல்லச் செல்லத்தான் உண்டாகின்றன. புலனுணர்வு தான் இளங் குழந்தையிடம் வேகமாய்ப் பற்றி வளர்கிறது. உபதேசமானது கருத்தளவில் நிற்பது. ஆகையால் குழந்தையுள்ளத்தில் அவ்வளவாக ஏறுவதில்லை. ஆனால் எந்தக் குழந்தையும், தன் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும், மற்றப் புலன்களின் அனுபவத்திற்குட்பட்டதையும், நன்றாய்த் தெரிந்து கொள்கிறது. தெரிந்து கொள்வது மட்டுமன்று; குழந்தைக்கு மனத்தில் எண்ணுகிற சக்தி வளர்ச்சி பெற்றிருக்குமானால், அவ்விதம் தெரிந்து கொண்டதே சரி, அதுவும் நியாயமானது. நல்லது என்று எண்ணவும் செய்கிறது. அடுத்தபடியாக, எண்ணியபடியேதான் செய்யப் பார்க்கிறது. மேலும் குழந்தையிடம் பொருந்தி வளர்ந்து வருகிற முக்கியமான இயல்புகளில், பிறர் செய்வதைப் பின்பற்றிச் செய்தல் என்பது சிறப்பான ஓர் இயல்பு. பெரியவர்கள் என்று தாய் தந்தையரையும் அவர்கள் போன்ற மற்றும் சிலரையும் குழந்தை நினைத்து மதித்துப் போற்றுகிறது. ஆகவே, அவர்கள் செய்வன யாவும் சரியானவை நல்லவை என்ற எண்ணம் அதற்கு உதித்தல் இயல்பு. பின்னர் அவர்கள் செய்வனவற்றைத் தானும் இயன்ற வரை செய்ய முயல்கிறது.

இது எவ்வளவு தூரம் வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பது எல்லோரும் அறிந்த செய்தி. மிகவும் சங்கடமான ஓர் நிலைமையை உதாரணமாகக் காட்டி இதை விளக்கலாம். நம்முடைய நாகரிக வாழ்க்கையில் இன்று முதல் அம்சமாயிருப்பது காப்பிக்குடி. பெற்றோர் இருவரும் நாள் தவறாமல் காப்பி குடிக்கிறார்கள். உடல் வளர்ச்சிக்கு இது அவசியமானதன்று. இது கெடுதலே செய்யும் என்பதை அவர்கள் உணருகிறார்கள். காப்பியை விட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டு. ஆனால், பாவம், ''முடிகிறதில்லை.'' எனினும், விடாப்பிடியாய்த் தங்களை ஆட்கொண்டுள்ள இந்தக் கேடான பழக்கத்திலிருந்து தங்களுக்குக் கிடைக்காத விடுதலை தங்கள் குழந்தைகளுக்காவது கிடைக்கட்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இவர்கள் குழந்தைக்குப் பிறந்தது முதலே காப்பி கொடுப்பதில்லை. குழந்தையும் வெகுநாள் வரையில் காப்பி குடியாமலேதான் வளர்ந்து வருகிறது. ஆயினும் பெற்றோர் காபபி குடிபபதைத் தினமும் குழந்தை பார்த்து வருகிறது கூடாது என்று சொல்லித் தனக்கு மட்டும் இதை விலக்கி வைத்திருப்பதையும் எண்ணிப்

பார்க்கிறது. "பெரியவர்களே குடிக்கும்போது காப்பி கெடுதலாயிருக்குமா? இராது" என்று எண்ணித் தன் மனத்தை தானே தெளிவுபடுத்திக் கொள்கிறது. தானும் எப்போது காப்பி சாப்பிடலாம் என்பது தான் அதற்குள்ள முதல் ஆவல். (இந்த விதிக்கு விலக்காயிருக்கும் குழந்தைகள் மிகவும் அபூர்வம்) "காப்பி உடம்புக்குக் கெடுதலானது உனக்கு வேண்டாம்" என்று பெற்றோர் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும், அந்தச் சொற்கள் குழந்தையின் மனத்தில் ஏறவே மாட்டா. தாங்கள் அனுபவிக்கிற சுகத்தைத் தன் பெற்றோர் ஏதோ காரணத்தினால் தனக்குக் கொடுக்க மறுக்கிறார்கள் என்றுதான் குழந்தை எண்ணும். இப்படி எண்ணுவதன் பயனாக, 'வேண்டாம்' என்ற பொருளின் மீது விருப்பம் உண்டாகும். அதை யொட்டி பெற்றோர் சொல்லை மீறவும் தோன்றும். இந்த உணர்ச்சிகள் காலக் கிரமத்தில் முதிர்ந்து, பெற்றோர் மீதுள்ள மதிப்பும் மரியாதையும் குறைந்து, வெறுப்புத் தோன்றினாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

நல்ல பழக்கம் வரவேண்டும், கெட்ட பழக்கம் வரக்கூடாது என்று எவ்வளவோ ஆசைப் பட்டும், அந்த ஆசையும் அதற்கான முயற்சியும் பயனற்றுப் போவதை இங்கே பார்க்கிறோம். 'குழந்தைப் பருவத்தில் இப்படித் தான் குழந்தைக்கு ஆசை யுண்டாகும், வளர்ந்த பின் நினைவு தெரிந்து, நல்லது கெட்டது என்று குழந்தை பகுத்துணரும் போது, இவ்வாசை நீங்கிவிடும்' என்று நாமே நமக்குச் சமாதானம் கூறிக்கொள்ள முயலுகிறோம். இது போலியான சமாதானம். குழந்தைப் பருவத்தில் விளைந்த தவறான ஆசைகள் பின்னர் நீங்குவதில்லை. சிறுவன் பள்ளிக்கூடத்துக்குப் போய் வந்தாலும் கூட, இத்தகைய ஆசைகள், இவற்றினடியாக வந்த பழக்கங்கள் முதலியவற்றுக்கு விமோசன மில்லை. சாதாரணமாய் இப்போது ஐந்து வயதுக்கு மேல்தான் குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோம். அதற்குள்ளேயே இவ்வாசை வலிவு பெற்றுவிடுகிறது. பின் வரும் பழக்கமோ, அல்லது கல்வி போதிக்கும் உபாத்தியாயரோ இந்த ஆசையைப் போக்க முடியாது.

இளமைப் பழக்கம்

இதே போல இளமையிற் குடிகொண்ட எந்த பழக்கமும் ஆசையும் பண்புகளும், பின்னர் நீங்குதல் இயல்பன்று. குழந்தை பெரியவனான போது திருத்தி விடலாம் என்று எண்ணுவது மிகவும் கெடுதலானது. இளமையில் தகுதியான பழக்கத்தை உண்டு பண்ணும் பொறுப்புப் பெரியது; இதைத்தள்ளி வைக்க முடியாது; பின்னால் யாருமே இப்பொறுப்பை ஏற்று நிறைவேற்ற இடமிராது என்பதைப் பெற்றோர் திட்டமாக உணருதல் வேண்டும். தகுதியற்ற ஆசையோ பழக்கமோ ஏற்படாதபடி குழந்தையைப் பழக்க வேண்டும். புகைப்படம் எடுக்கத் தயாராய், புரோமைடு தடவி வைத்த கண்ணாடி போன்றது, குழந்தையின் உள்ளம். ஒளி பட்டால் அக்கண்ணாடி மாறுவது போல, கெடுதல் பட்டால் குழந்தையின் உள்ளம் மாசடைந்து விடும். மாசடைந்த உள்ளத்தில் நல்லதாகிய ஒளி பின்னர் பதியச் செய்வது மிகவும் கஷ்டம்.

ஒரு கற்பனைச் சித்திரம்

அல்லி

"விஜி"

ஆஹா! இந்தக் குளம்தான் எவ்வளவு ரமணியமாக இருக்கின்றது! அல்லிக்குளமே ஒரு கண்கொள்ளாக் காட்சிதான். அல்லியின் அழகும் ஒரு தனி அழகுதான். குறுகிய நீண்ட இதழ்கள்—அந்த இதழ்கள் விரியும் காட்சி ஒன்றே போதுமே! தன் மனதைக் கவர்ந்த தென்று யாரோ ஒரு கவி 'முகபத்மம்', நளிணாக்ஷி, கரகமலங்கள் 'பாரத விந்தம்' என்று எல்லா அங்கங்களுக்கும் தாமரையையே உவமையாகக் கூறி வர்ணித்து விட்டால் பின் வந்த கவிகளும் அதேபோல அம்புயத்தாள், பாதத்'தாமரை' என்று எதற்கெடுத்தாலும் தாமரையையே ஒப்பிட வேண்டுமா என்ன? இந்தக் கவி எழுதுபவர்களுக்கு முன்னிருந்த கவிகளைப் பின்பற்றினால் தானே கதி மோட்சம் 'தாமரை இதழ்கள் எவ்வளவு அகலமா யிருக்கின்றன. அவ்வளவு அகலம், கண் ஒன்றே இருந்து விட்டால், அப்புறம் முகத்தில் கன்னம், நெற்றி இவைகளுக் கிடமேது' என்று சிறிதளவேனும் யோசித்தார்களா! அதைவிட 'குவலயாக்ஷி' என்றால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்! அல்லி இதழ் போல் நீண்ட கண்கள்—இங்கு ஏதோ சத்தம் கேட்கிறதே—சற்று மறைவிலிருந்து கவனிப்போம்.

(அல்லிக் குளத்தில் அல்லியும் தாமரையும்)

அல்லி: கமலக்கா! ஏனிந்த முகவாட்டம்? தினந்தோறும் நடப்பது தானே இது—காலைக் கதிரவன் ஒரு நொடியில் வந்து விடுவானக்கா.

கமலம்: ஆம். பேசமாட்டாயா நீ! அஸ்தமனமாகி விட்டது-சந்திரன் வருகிறானே யென்ற கர்வமுனக்கு!

அல்லி: ஏனக்கா சிடுசிடுவென்கிறாய்? என் நாயகன் வருவது எனக்கு சந்தோஷமாயிராதா? இருந்தாலும், இரவு முழுவதும் நீ தனியாக விருக்க வேண்டுமே யென்பதை நினைக்கும் பொழுது வருத்தமாகத்தான் இருக்கிறதக்கா!

கமலம்: (ஏளனமாக) வருத்தமா யிருக்கிறதாம்! வருத்தம்-இரவில் மலரும் பொழுதே உனக்கிவ்வளவு இறுமாப்பிருக்கிறதே! இன்னும், என்னைப் போல் பகலில் மலர்ந்து ஈச்வரனின் திருவடியை அடைவதா யிருந்தால் எப்படியிருப்பாயோ!

அல்லி: அப்பேர்ப்பட்ட பாக்கியம் எனக்கும் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவுமில்லை-அப்படிக் கிடைத்தாலும், இப்படியேதானிருப்பேன். உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் என் ஸ்வபாவம் உனக்குத் தெரியாதா அக்கா?

கமலம்: உன்னுடன் வாதாட எனக்குப் பிடிக்கவேயில்லை. பேசுவதற்குத் தகுந்தவளா நீ? அதோ உன் நாயகன் வந்து விட்டான். வெளேரென்ற முகம் நிறைத்த மயிரும், முகத்தில் மருவுப, எங்கிருந்துதான் பிடித்தாயோ இவனை. உம்-உனக்கேற்றவன் தான்.

சந்திரனைப்பற்றி எத்தனையோ கதைகள். அல்லியைப் பற்றி எத்தனையோ வர்ணனைகள். இந்தக் கற்பனைச் சித்திரமும் அவைகளில் ஒன்றுதான். படிக்க இனிமையாயிருக்கிறது.

அல்லி: (தாமரையைக் கவனிக்காமலே) ஆஹா! என்ன மோஹன ரூபம். காந்தா! அல்லி நமஸ்கரிக்கிறேன்!

சந்திரன்: அல்லிதானா! என் அழகு ராணி இன்று என்றுமில்லாத பொலிவுடன் விளங்குகிறாளே! என்ன விசேஷமோ!

அல்லி: தினமுமுள்ள விசேஷம் தான் இன்றைக்கும். இன்றாவது என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்ல மாட்டீர்களா என்ற ஆசைதான்.

சந்திரன்: நான் தான் தினம் வருகிறேனே!

அல்லி: பொழுது விடிந்ததும் போய் விடுகிறீர்களே. என்னை உங்களுடன் அழைத்துச் சென்று விட்டால் இந்தப் பிரிவு நேராதல்லவா?

சந்திரன்: நீ சிறியவள் தானே பிரிவிலிருக்கும் சுகம உனக்குத் தெரியவில்லை.

அல்லி: உங்களைப் போலவா நான்! உங்களுக்குக் கணக்கற்ற தாரகைகளிருக்கிறார்கள். அவர்களுடனிருந்தால் பொழுது போவதே தெரியாமல் யுகக் கணக்கில் காலத்தைக் கழிக்கலாம். ஆனால் எனக்கு உங்களைத் தவிர யாரிருக்கிறார்கள்?

சந்திரன்: (மௌனம்)

அல்லி: என் நான் சொல்வது காதில் விழவில்லையா? ரோஹிணியை நினைத்துக் கொண்டு விட்டீர்கள்——இல்லையா?

சந்திரன்: அதுவல்ல அல்லி! தாரகைகளென்று ஆகாயத்தில் பிரகாசிப்பதால் பெருமிதம் கொள்ளலாமே தவிர, உன் அழகு, மணம், குணம் அவர்களுக்கு வருமா? உன்னைப் பிரியும் பொழுது எவ்வளவு வருத்தத்துடன் செல்கிறேனே. அதை விடப் பதின் மடங்கு உத்ஸாகம் உண்டாகிறது உன்னைத் திருப்பக் காணும் பொழுது! பிரிவிலிருக்கும் இன்ப வேதனையை உணர உனக்கின்னும் வயதாகவில்லை அல்லி! அந்த இன்பவேதனையை அனுபவித்த பிறகு உன்னைக் காண எழும் ஆவலும், உன்னைத் திரும்பக் காணும் பொழுதுண்டாகும் இரட்டிப்பு சந்தோஷத்திற்கும், உன்னைப் பிரிந்திருக்கும் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளத் தயார்.

அல்லி. (சலிப்பாக) என்னமோ! நீங்கள் சொல்வதொன்றுமே எனக்குப் புரியவில்லை. அது விண்ணுலக வாசிக்குத் தான் புரியும போலும்!

சந்திரன்: அல்லீ! நீ சலித்துக் கொள்ளும் பொழுது தான் எனக்குப் பிடித்திருக்கிறது, உன்னிடம் ஏதோ புது அழகு தோன்றுகிறது இன்று! மினுக் மினுக்கென்று மின்னிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா! கண்ணையும், மனதையும் ஒருங்கே கவரும் இந்த எழில் அவர்களிடமேது! பார்ப்பவர்களைப் பரவசமடையச் செய்யும் இந்த சக்தி உனக்கெங்கிருந்து வந்தது அல்லீ!

அல்லி: (மௌனம்)

சந்திரன்: அல்லீ... உன்னை ஒன்று கேட்கலாமா? பயமாயிருக்கிறதே! கோபித்துக் கொள்ளுவாயோ என்று சங்கோசமாயிருக்கிறது.

அல்லி: கேளுங்களேன். நீங்கள் எது கேட்டாலும் நான் சொல்ல சித்தமாயிருக்கிறேன். உங்களை திருப்தி செய்வது தானே என் லக்ஷ்யம் பிரபு?

சந்திரன்: இவ்வளவு எழில் வாய்ந்த நீ என் சேற்றில் வந்து பிறக்க வேண்டும்?

அல்லி; உங்கள் முழு அன்பைப் பெற இது தடையோவென்று நான் சந்தேகித்ததுண்டு.

சந்திரன்: பார்த்தாயா. அதற்குள் கோபம் வந்து விட்டதே. அப்படி ஒன்றுமில்லை. இதனால் உன் நிலை தாழ்ந்து விடுமா! நான் கேட்டது தவறுதான். என்னை மன்னித்து விடு அல்லி. உன் மனதை நோகச் செய்து விட்டேன்.

அல்லி: அப்படியில்லை பிரபு! சொல்லுகிறேன். உங்களுக்குத் தாரை ஞாபகமிருக்கிறாளா?

சந்திரன்: அது எப்பொழுதோ நடந்த விஷயம். அவளைப் பற்றி இப்பொழுது பேசுவானேன். அது உன்னைப் பார்க்கு முன்பு ஏற்பட்டது.

அல்லி: அவளைப் பற்றி பேசித்தானாகவேண்டும். அவள் முகம் உங்களுக்கு நினைவிருக்கின்றதா? வேல் விழிகளும், குனித்த புருவமும், கொவ்வைச் செவ்விதழ்களிடையே அரும்பிய முல்லை நகையும் நினைவில்லையா பிரபு?

சந்திரன்: உன் கால் தூசிக்குக் கூட அவள் பொருந்த மாட்டாளே!

அல்லி: ஆஹா! என் காதுகளில் தேன்மொழி யல்லவா பொழிகின்றது! நிஜம்தானா பிரபு?

சந்திரன்: நிச்சயமாக. மலையெங்கே? மடுவெங்கே?

அல்லி: அப்பா! இன்று தான் என் மனம் குளிர்ந்தது. நான் அவளைவிட அழகியா? தங்கள் வாயினாலேயே இதைக் கேட்ட பிறகு தான் என் மனம் சாந்தியடைகிறது. முனிவர் வாக்கு வீண் போகவில்லை. 'இப்பொழுதிருப்பதை விட அதிக அழகுடன் பிறப்பாய்' என்றாரே.

சந்திரன்: முனிவரா? யாரந்த முனிவர்?

அல்லி: என்னை இன்னும் தெரிந்து கொள்ள வில்லையா பிரபு? நான் தான் தாரை.

சந்திரன்: என்ன! நீ தாராவா? ஆச்சரியமாக இருக்கின்றதே! சற்று விவரமாகச் சொல்லேன்.

அல்லி: ஆம். நான் தாரை தான். போன ஜன்மத்தில் நான் பிருஹஸ்பதியின் பத்தினி தாராவாக யிருந்தேன். ஆனால் நீங்கள் கல்வி கற்க அங்கு வந்ததும், என் மனம் தன்வசமிழந்ததைத் தாங்கள் நன்கறிவீர்கள். அதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. என் பதி. இல்லை இல்லை தாங்கள்தான் என் பதி. தங்கள் குரு, கோபத்தில் "பூலோகத்தில் பவஸாகர சேற்றில் விழுந்துழலு" என்று என்னைச் சபித்தார். நான் மன்னிப்புக் கோரி அவர் காலில் விழுந்ததும், மனமிரங்கி, "சேற்றில் பூவாகப் பிறப்பாய் இருந்தாலும் கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் எழிலுடன் விளங்குவாய்" என்று சாபத்தைச் சற்று மாற்றினார். நான் விரும்பியது தங்களைத் திருப்தி செய்யும் அழகுதானே! மிக்க சந்தோஷத்துடன் சாபத்தை யேற்றுக் கொண்டு அல்லியாகப் பிறந்தேன். பிறந்து தங்களன்பைத் திரும்பவும் பெற்றேன். ஆனால் பகல் முழுவதும் தங்களைப் பிரிவது என்னால் சகிக்க முடியவில்லை பிரபு! இன்று இதற்கு ஏதாவது வழி சொல்லித் தானாக வேண்டும்.

('தொலைவில்' பாட்டு)

உஷஸ்வினி! உஷஸ்வினி!
அருணன் தொடர வருக;

சந்திரன்: அதோ, உஷா காந்தை வருகிறாள். இனி தாமதிக்க கூடாது. உனக்குப் பதில் மாலையில் சொல்லுகிறேன்.

(சந்திரன் மறைதல்)

எருக்கு

"டாக்டர்"

கால்களில் கல் அழுந்தி நடக்க முடியாமல் தவிக்கும்போது இருபது எருக்கிலை அடுக்கி அடுப்பில் நன்றாகக் காய்ந்த செங்கல்லின் மேல் வைத்து வலிக்கும் பாகத்தை இலைகளில் பொருத்தி ஒவ்வொன்றாக எடுத்து வந்தால் உடனே குணமாய்விடும்.

சீல் வாய்வுக்கு எருக்கன் பூவை ஆமணக் கெண்ணெயில் வதக்கி ஒத்தடம் கொடுத்துக் கட்டினால் நீங்கும். ஆசன மூலத்திற்கு இலையின் பசுமையான பாகத்தில் ஆமணக்கெண்ணெய் தடவி, அனலில் காட்டி பொறுக்க முடியுமான சூட்டில் போட வேதனை நீங்கும்.

நெறி கட்டிக்கொண்டு அதிக உபாதையாயிருந்தால், இலைகளை நறுக்கிக்கொண்டு, பிரஷ்போல சுருட்டி சூடான எண்ணெயில், தோய்த்து எண்ணெயை வடித்துவிட்டு, ஒத்தடம் கொடுக்கலாம். பூட்டுகளில் சகிக்க முடியாத நோயும் வீக்கமும் இருந்தால், அதற்கும் இதே சிகிச்சை செய்யலாம்.

காது வலிக்கும், காதில் சீழ் வடிவதற்கும், எருக்கன் பழுப்பை அனலில் காட்டிகசக்கி ரசத்தைக் காதில் பிழியலாம்.

எருக்கன் பாலுடன் சமபாகம் ஆமணக் கெண்ணெய் கலந்து மஞ்சள் பொடி சேர்த்துச்சிரங்குகளுக்குப் போட, எப்படிப்பட்ட சிரங்குகளும் ஒரே தடவையில் உதிர்ந்துவிடும். அரை மணி நேரம் கழித்து இலுப்பைப் புண்ணாக்குப் பொடியாலோ பச்சைப் பயிறு மாவாலாவது தேய்த்துக் குளிர்ந்த ஜலத்தால் கழுவி விடலாம்.

இலைகளை ஒடித்ததும் வடியும் பாலை உப்பு சேர்த்துக் காயங்களுக்கும் சுளுக்குகளுக்கும் பல் வலிக்கும் கட்டிகளுக்கும் போடலாம்.

தேள் கடிக்கு எருக்கன் பாலும் அரைத்த எருக்கிலையும் கைகண்ட ஔஷதங்கள்.

மண்டையில் உண்டாகும் சண்டித்தனம் செய்யும் காரகப் படைக்கு எருக்கன் பால் திவ்ய ஔஷதம். ஆனால் எருக்கன் பாலுக்கு மயிர்போக்கும் குணமுண்டு. ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் வழுக்கை விழுந்துவிடும்.

யானைக் காலுக்கு எருக்கன் வேரை அரிசி கழுவிய நீரில் அரைத்துப் பத்து போடலாம்.

வெள்ளெருக்கன் சிவப்பை விட சிலாக்கியம். நல்ல தேர்ந்த வைத்தியர்கள் அனுபானத்தை நல்ல சரக்காயிருந்தால் உள்ளூரில் விலை போகும் என்பார்கள். எருக்கு எப்படிப்பட்ட மருந்து சரக்கு என்று உங்களுக்குத் தெரிந்தால் புட்டித் தண்ணீரைததரும் இங்கிலீஷ் டாக்டர் வீடு போவீர்களா? இப்பொழுது தெரிந்துகொள்ளுங்கள்.

யும், பத்தியத்தையும் அனுசரித்தும் பல வியாதிகளை எருக்கனைக் கொண்டே சொஸ்தம் செய்து விடுகிறார்கள். அஜாக்கிரதையாக உபயோகித்தால் கொப்புளங்கள் ஏற்படும்.

ஆஸ்த்துமாவுக்கு வெள்ளெருக்கன் பூ லேகியம் செய்து, சித்த வைத்தியர்கள் கொடுக்கிறார்கள். முகத்தில் உண்டாகும் கருப்பான வடுக்களை மாற்ற எருக்கன் பாலோடு மஞ்சள் பொடியைக் கலந்து போடுவதும் உண்டு.

மூக்கிலும் தொண்டையிலும் வீக்கம் கண்டு மூச்சடைத்து உயிருக்கே ஆபத்து நேரும் போது எருக்கன் பூவை நாசியருகில்வைத்து விரலால் தட்டி மகரந்தப் பொடி நாசிக்குள் போகும்படி செய்து உடனே குணமுண்டாக்கியிருக்கிறார்கள், சில தன்வந்திரிகள்.

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு எருக்கிலையை மண் சீலையால் வாய் கட்டப்பட்ட சட்டியில் சாம்பலாக்கி இந்துப்புடன் சேர்த்துக் கொடுப்பதுண்டு. இந்த பஸ்பத்தை வயிற்றுப் பூச்சிகளுக்கும் சீதபேதிக்கும் கூட கொடுப்பதுண்டு.

திப்பிலியை எருக்கன் பாலில் ஊறவைத்துப் பொடித்து மூச்சு விட முடியாமல் தவிக்கும் ஆஸ்துமா வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்தால் உடனே குணமுண்டாகும்.

இத்தகைய உயர்ந்த மூலிகைகள் இருக்கும்போது, பல கோடி ரூபாய்களுக்கு வெளி நாடுகளிலிருந்து மருந்துகள் வரவழைப்பது நமது துரதிர்ஷ்டமன்றி வேறென்ன? என்னுடைய அனுபவத்தில் ஆயுர்வேத சிகிச்சையால் குணமடையாத வியாதியே இதுவரையில் இல்லை.

பாக்குப் பயிர்

இந்தியாவில் பயிராகும் பாக்குமரங்கள் நமது தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. மொத்தம் முப்பத்திரண்டுலட்சம் மணங்கு பாக்குதான் தற்போது பயிராகிறதாம். நமக்கோ நாற்பத்திரண்டுலட்சம் மணங்குதேவை. இதற்காக அந்நிய நாடுகளிலிருந்து இந்தப் பாக்கிபை இறக்குமதி செய்ய நேரிடுகிறது. தரிசாகக் கிடக்கும் 50,000 ஏக்கர்களையும் பயிர்செய்தால் நம் தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ள முடியும். இறக்குமதி வரியைக் கூட்டவும் வேண்டும்.

குளிர்ச்சி

திருப்புகழ் மணி,
டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்

உலகில் தாபம் (heat) இரண்டு வகையில் வெளியாகிறது. இயற்கையின் தாபம் சூரியன் உக்கிர கிரணங்களால் ஏற்படுகிறது. இது வெளித் தாபம் இதை சமனம் செய்ய குளிர்ந்த நிழலிலும் ஓடுகின்ற தண்ணீர் ஸ்நான பானங்களிலும், தென்றல் முதலிய மெல்லிய காற்றுகளிலும் இருந்தும் வசித்தும் ஆற்றிக்கொள்ளலாம். மனிதன் புத்தி யுக்திகளால் இந்தத் தாபத்தை ஒருவாறு வென்றுவிடலாம் ஆனால் உள் தாபமோ அப்படியன்று. அது மனசை ஒட்டியது—மனஸ்தாபம். எவ்வளவ குளிர்ச்சியை வெளியில் உண்டாக்கினாலும உள்ளம் குளிராது. தாபம் அதிகரிக்கும். உலகில் மனம் குளிர்ந்து இருந்துவிட்டால் வெளித்தாபம் இயற்கையின் தாபம் ஒன்றும் பாதிக்காது. மனிதன் சந்தோஷத்தையும் சுகத்தையும் கெடுத்துவிட முடியாது. உள்ளம் குளிர்ந்தவர்களே தவத்தினர். பெரியோர். உள்ளம் குளிர்ந்தால் ஆனந்தம் பெருகும். இவ்வித ஆனந்தக் குளிர்ச்சியடைய வழி யாது? அப்பர் சொல்லுவார்:—

“நன்றுடையானை தீயதில்லானை, நரை வெள்ளேறு ஒன்றுடையானை, உமையொரு பாகமுடையானை, சென்றடையாத திருவுடையானை, சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே.”

உள்ளம் குளிரக் கண் குளிர்ந்தது என்றார் மற்றோர் பெரியார்.

“கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை, கரையிலா கருணைமா கடலை, மற்றவர் அறியா மாணிக்க மலையை, மதிப்பவர் மனமணி விளக்கை, செற்றவர் புறங்கள் செற்ற வெஞ்சிவனை திருவீழி மிழலை வீற்றிருக்கும் கொற்றவன் தனைக்கண்டு கண்டு என் உள்ளம் குளிர என் கண் குளிர்ந்தனவே” என்றார்.

“ஆண்டவன் காட்சி குளிர் தரும் காட்சி. ஆண்டவன் பேச்சு குளிர் தரும் பேச்சு. ஆண்டவன் நினைவே குளிர்தரும் நினைவு” என்றார் முருகன். சஷ்டியன்று சூரபத்மாதி தாப காரணங்களைக் குலைத்து அடியார்களைத் தேவர்களாக வகுத்து, அவர் உலகத்தைக் குளிர வைத்தாராம். அருணகிரியார் அனுபூதியில் சொல்லுவார்.

“ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையை, பெறா அடியேன் பெறுமாறுளதோ, சீறா வருசூர் சிதைவித்து, இமையோர், கூறா வுலகம் குளிர்வித்தவனே!”

அடியார்கள் முருகன், சஷ்டீசன் பலத்தால் காமத்தாபத்தை வென்று, உள்ளத்தாலும் பார்வையாலும், இவ் வுலகைக் குளிர்ச்சியாய் நிர்மிப்பாராக!

அறுசுவை

சரஸி

"வாருங்கள் மாமி? என்று அழைத்தவாறே புஸ்தகத்தை மூடி விட்டு எழுந்திருந்தேன்."

மணி 3 அடித்து விட்டதே இன்னமும், காரியத்திற்கு எழுந்திருக்க வில்லையா? என்ன? என்று வினவியவாறே உள்ளே வந்து உட்கார்ந்தார்கள். பக்கத்துவீட்டு மாமி. அந்த மாமிக்கு தெரியாத விஷயமில்லை, அடுக்களையில் இருந்து அரசியல் வரை எதுவானாலும் சரி ஒரு அலசு அலசிவிடுவார். வைத்தியமோ, நாகரிகமோ, சமையல், பட்சண தினுசுகளோ பல ரகமும் தெரிந்தவள்.

என்னமோ, மாமி, என்ன சமைப்பது என்பதே புரியவில்லை. திரும்பத்திரும்ப சாதம், ரசம், குழம்பு, அலுத்துப் போய் விட்டது என்றேன் சலிப்புடன்.

ஏன் ஏதாவது ராத்திரிக்கு, துவையிலோ, பொடியோ போட்டால் இடக்கிறது என்று சாவதானமாய் கூறினாள் மாமி.

என்ன பொடியா? அதெப்படி மாமி என்று நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

முதலில் சட்னி பொடி சொல்லுகிறேன் கேள், "ஆழாக்கு உளுத்தம் பருப்பு, ஆழாக்கு கடலைப்பருப்பு, 2½ பலம் மிளகாய், பெருங்காயம் கொட்டைப் பாக்கு அளவு, நல்லெண்ணெய் 2 பலம், டீஸ்பூன் கடுகு முதலிய சாமான்கள் எடுத்துக் கொள். பருப்புகளை தனித்தனியாக எண்ணெய் விடாமல் பொன் வறுவலாக வறுத்து பின் ரவை போல் உடைத்து வைத்துக்கொள்.

கொப்பரைத் துருவல், 2 மூடி துருவி வைத்துககொள். அந்த துருவல், மிளகாயையும் எண்ணெய்விட்டு வறுத்துக்கொண்டு, பிறகு உரலில் போட்டு நன்றாக இடித்துக்கொண்டு, போதுமான அளவு உப்பு, புளி, போட்டு மசிய இடித்துக்கொள், பிறகு அரைத்து வைத்திருக்கும் மாவையும் கொட்டிக் கலந்து எடுத்து வைத்துக்கொள். 2 பலம் எண்ணெய் வாணலியில் விட்டு அதில் கடுகும் பெருங்காயமும் போட்டு பொறித்த பிறகு கலந்து வைத்திருக்கும் பொடியையும் சேர்த்து கலந்து எடுத்துக்கொள். சூடு ஆறிய பிறகு பாட்டிலில் எடுத்து வைத்துக்கொள். நாள்பட் இருக்கும். வேணும் பொழுது போட்டு சாபபிட்டால் நன்றாக இருக்கும். போதுமா? என்றாள் மாமி.

நானு கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுபவள். இன்னொரு தினுசும் சொல்லுங்கள் மாமி என்றேன்.

சேனைக் கிழங்கு பொடி என்றாள். சேனைக் கிழங்கா? என்றேன் ஆச்சரியத்துடன்.

ஆமாம், கடலைப்பருப்பு ½ ஆழாக்கு, உளுத்தம் பருப்பு ½ ஆழாக்கு, மிளகாய் 1 பலம், புளி, உப்பு, பெருங்காயம், கொட்டைப் பாக்கு அளவு. சேனைக் கிழங்கு 5 பலம், தோலை சீவிப்பொடி பொடியாய் நறுக்கி வைத்துக்கொள்.

வாணலியில் 2 ஸ்பூன் எண்ணெய் விட்டு, எல்லாவற்றையும் பொன் வறுவலாக வறுத்துக் கொள்ளவும். கிழங்குத்தூளையும் நன்றாக வறுத்துக்கொள்ளவும். பருப்பை எல்லாம் போட்டு இடித்துக்கொண்டு, மசிந்த பிறகு புளி உப்பு, போட்டு இடித்து, புளி மசிந்த பிறகு சேனைக் கிழங்குத் தூளையும் போட்டு இடித்துக் கலந்து எடுத்து பாட்டிலில் போட்டு வைத்துக்கொள்.

சாதத்தில் போட்டு சாப்பிடுவதற்கும், தொட்டுக் கொள்வதற்கும் நன்றாக இருக்கும் என்றுகூறி முடித்தாள் மாமி.

அதற்குள் மணி 3½ அடித்து விடவே மாமி வீட்டிற்குப்போக எழுந்தாள். நானும் சமையல் அறையில் நுழைந்தேன்.

பெண்ணின் கேள்வி

சீர்திருத்தத்தைப்பற்றி இந்தக் காலத்திலே ஏராளமாகப் பேசுகிறார்கள்: எழுதுகிறார்கள். இதைக் கிரியாம்சையில் செய்ய நீங்கள் தயாரா என்று ஒரு வடக்கத்தி சமஸ்தானப் பெண்மணி, அந்த சமஸ்தான திவானுக்கும், கலெக்டருக்கும், நீதிபதிக்கும் கேள்வி போட்டாளாம்!

விஷயம் என்ன தெரியுமா? 19 வயது நிறைந்த அந்தப் பெண்ணை பன்னீராயிர ரூபாய்க்கு வேண்டி ஒரு கிழவனுக்கு திருமணம் செய்விக்கப் பெற்றோர்கள் முயற்சித்தார்களாம். பெண் மறுத்தாள். பெற்றோரும் விடாப்பிடியாய் இருந்தார்கள். கடைசியிலே வேறுவழியின்றி அந்தப் பெண் ஷை அதிகாரிகளுக்குத் தந்தி யடித்தாளாம். நல்லவேளையாக அந்த நாலு அதிகாரிகளும் தலையிட்டு திருமணம் நடவாதபடி நிறுத்தினார்களாம். பெண்ணின் விருப்பப்படிதான் இனி அவளுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று உறுதியும் பெற்றார்களாம்.

அவளோ அழகற்றவள். அவள் தங்கை அழகுராணி. பின்னவளின் அழகுக்குத் தேவையாயிருந்த அதிருஷ்டம் மட்டும் அழகு குறைந்தவளிடம்தான் இருந்தது

அழகும் அதிருஷ்டமும்

சகுந்தலா ராஜன்

கங்குவையும், பட்டுவையும் சேர்ந்தாற் போல் புதிதாகப் பார்த்தவர்கள், அவர்களை ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகள் என்று யாராவது சொன்னால் நம்புவது கடினம்தான். ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளுக்கு ஒரே மாதிரி முகஜாடை கூடவா இராது? தங்கப் பதுமை போன்ற பட்டு எங்கே? ஒட்டி உலர்ந்து மாநிறமும் மறைந்து கருப்பாகிக் கொண்டு வந்த கங்கு எங்கே "என்னடியம்மா! மங்களம், கங்குவை சரியாக, கவனிக்கிறதில்லையா நீ? நாளுக்கு நாள் கருவேப்பிலைக் குச்சிமாதிரி கங்கு இப்படியாகிவராளே?..." என்று அந்தப் பெண்களின் தாயாரை சிலர் கேட்கத்தான் செய்தார்கள். "ஆமாண்டியம்மா! கங்கு எனக்கு மாற்றாள் பெண். கவனிக்கவில்லை, போயேன். அது உடம்பில் என் வீட்டுச் சாதம் ஒட்டவில்லை. அகமுடையான் வீட்டுச் சாதம் தான் சில பேருக்கு ஒட்டும். கல்யாணமான பிறகாவது உடம்பு நன்றாகட்டும். அதுதான் எனக்கு வேண்டியது" என்று சலிப்புடன் பதில் கூறுவாள் தாயார்க்காரி! பெண்களின் தகப்பனார், நீலகண்டய்யரோ, இந்த வருஷம் எப்படியாவது கங்குவுக்கு கல்யாணத்தை முடித்து விடுவது என்று வான் வேட்டையில் தீவிரமாய் இறங்கிவிட்டார். பலபேர் வந்து பார்க்கத்தான் பார்த்தார்கள். பெரிய இடத்துப் பையன்கள் தான். என்ன செய்வது? ஒருத்தராவது மூத்த பெண் கங்குவை மணக்க இசையவில்லை. "இரண்டாவது பெண்ணைக் கொடுக்கிறீர்களா?" என்று ஏற்கனவே மனம் நைந்து போய் இருக்கும் தகப்பனாரைக் கேட்டால், அவர் என்ன பதில் சொல்லமுடியும்? "நம்மவர்களிலே வழக்கமில்லையே ஸார். பெரியவள் இருக்கையில் சின்னவளுக்குத் தாலி கட்டவாவது..." என்று சுரத்துக் குன்றி பதில் கூறுவார் நீலகண்டய்யர். "இந்த நாளில் யார் ஸார், அதெல்லாம் பார்க்கிறார்" என்று அவருக்கே புத்தி கூறக்கூட சிலர் தயங்கவில்லை. "என்னமோ அப்பா! என்னால் அந்தச் சம்பிரதாயங்களை விடமுடியாது..." என்று சலிப்புடன் சொல்வார் அவர்... "ஹூம்! மூத்தவளாம் மூத்தவள். அந்த லக்ஷ்மி தேவிக்கு மூத்தவள் எப்படி வாய்த்தாளோ, அப்படித்தான் வாய்த்திருக்கா அந்தப் பட்டுவிற்கு மூத்தவளும்" என்று தங்களுக்குள் பேசிப் போகும் கில்லாடிகளும் இல்லாமல் இல்லை. யார் வந்து பார்த்தாலும் தங்கையைத் தான் கேட்கிறார்கள். தன்னைக் கவனிக்கவில்லை என்பதற்காகக் கூட கங்கு வருத்தப்படவில்லை, தன்னால் தனது பெற்றோர்கள் படும் கஷ்டத்தைக்

காணத்தான் சகிக்கவில்லை அவளுக்கு. அவளுடைய பதினாறுவது வயதில் வரன் தேடத் தொடங்கினார் அவள் தகப்பனார். இந்தத் தை மாதம் பிறந்தால் வருஷம் நாலு ஆகிறது வரன் வேட்டைக்குக்கிளம்பி. தாயாரே அலுத்துக்கொள்ளத் தொடங்கி விட்டாள். "ஐயோ! இந்த கங்குவின் கழுத்தில் யாராவது மூணு முடிச்சுப் போடமாட்டாளா?" என்று தானாகப் புலம்புவாள் அவள். இதையெல்லாம் பார்க்கும்போது, யாராவது மூணுமுடிச்சுப் போடுவானேன், நாமே நல்ல கயிறொன்றை எடுத்து ஒரே முடிச்சாகச் சுருக்கிட்டுக் கொண்டால்" என்று அடிக்கடி நினைப்பாள் கங்கு. ஒருநாள் அதை காரியத்திலும் நடத்திவிடத் தீர்மானித்திருந்தாளவள். அன்றுதான் வந்து சேர்ந்தான் கல்யாணராமன்

"அம்மா! என்னைக் கூப்பிடாதே! நான் வரல்லே! என்னை யாரும் பார்க்க வேண்டியதில்லை" என்று முனகினாள் கங்கு. "நன்னாருக்கு! அந்தப் பிள்ளையாண்டான் வந்து கூடத்திலே உட்கார்ந்திருக்கான். என்னடி இது? யார் கண்டா? இவனுக்கு உன்னைப் பிடிக்கப்படாதுன்னு ஏதாவது சாஸ்திரமா என்ன?" என்று அன்பும் கண்டிப்பும் நிறைந்த குரலில் கூறினாள் தாயார்க்காரி. கங்கு அரைமனதுடன் எழுந்து போனாள். "பெண் பிடிச்சிருக்கு!" என்று பிள்ளையாண்டான் சொன்னதும், எல்லோருக்கும் 'அப்பாடா!' என்றிருந்தது. முன்னாடி வந்த பெரிய இடத்து வரன்களைப் பார்க்கையில் இந்தவரன் ரொம்ப சாதாரணம்தான். அவனையும் ஒருத்தன் பண்ணிப்பனா என்றிருந்த பெற்றோர்களுக்கு, கல்யாணராமன் கிடைத்தது புதையல் கிடைத்தது போல்தான் இருந்தது. கங்குவின் கணவனாகப் போகிறவனுக்கு ஆஸ்தியொன்றும் கிடையாது. எப்படியோ கஷ்டப்பட்டு B. A. வரைக்கும அவனைப் படிக்க வைத்த தாயாரும் தற்சமயம் இல்லை. மாமனாராகப் போகும் நீலகண்டய்யர், அவன் செலவிற்காக, கையில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார். கல்யாணமானதும், மனைவியைப் பிறந்தகத்திலேயே விட்டு விட்டு வேலை தேடப்போனான். சரியான வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. இரண்டாயிரம் ரூபாய் முதல் போட்டு ஒரு கடை ஆரம்பித்தான். ஆறே மாதத்தில் அதில் ஒரே கஷ்டம். பணம் போகிறது, ஆள் உருப்படியாக இருந்தால் போதும் என்றாகி விட்டது. வேலைக்கு அப்ளிகேஷன் போட்டவண்ணம் வேட்டகத்தோடு இருக்கலானான். கல்யாணம்......இரண்டு பெண்களிற்கும் ஒரே பந்தலில் கல்யாணம் முடிக்கத்தான் நீலகண்டய்யர் 'பிளான்' போட்டிருந்தார். பட்டுவை மணக்கவந்த பல புள்ளிகளில், பட்டுவுக்குப்பிடித்த பையன் மூர்த்தி என்பவன். கன ஜோராய் இருப்பான். கொள்ளைப் பணக்காரன். கேட்பானேன்? அவர்கள் வீட்டார் ஒரு பந்தல் கல்யாணத்தை விரும்பவில்லை. ஆகவே கங்குவின் கல்யாணமான பிறகு ஆறுவது மாதம் பட்டுவின் கல்யாணம் நிச்சயமாயிற்று. தன் கல்யாணத்திற்குச் செலவழித்தைப் போல் மூன்று பங்கு, தங்கையின் கல்யாணத்தில் செலவாவதை கங்கு பார்த்துக்கொண்டு தான் இருந்தான். சுபாவத்தில் சாந்தமும் அடக்கமும் நிறைந்தவ

ளாதலால், கேட்பவர்களுக்குக் கூட "நியாயம்தானே? பிள்ளையகத்துவா அந்தஸ்திற்கு தகுந்தாப்போல் செய்யத்தானே வேணும்" என்று கூறிவிடுவாளவள். கல்யாணராமன் என்ன இருந்தாலும் மாப்பிள்ளை இல்லையா! 'கங்கு! என்ன் இருந்தாலும் உங்கப்பாவிற்கு இவ்வளவு ஓரவஞ்சனை வேண்டாம" என்றான் அவன் மனைவியிடம். "நமக்கு அதிர்ஷ்டம் இருந்தால் போட்ட முதல் வியாபாரத்தில் தொலையுமா? ஒருத்தர் கொடுத்து ஒருத்தருக்கு நிரம்பப்போறதா?" என்று கணவனுக்கு சமாதானமாக அவள் சொன்ன போதிலும், மனது என்னவோ அவளுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஜிலு ஜிலு வென்று புடவையும் நகையுமாக இருக்கும், பட்டுவைக்கண்டு அவள் வயற்றெரிச்சல் படவில்லை. ஆனால், கூடப்பிறந்த சகோதரியிடமே பட்டு ராங்கியாக நடந்து கொள்வதைப் பார்க்க அவளுக்குச் சிறிது ஆச்சரியமாகத் தான் இருந்தது. 'அக்கா' அக்கான்னு முன்பெல்லாம் நம்கூட சுத்திண்டிருந்த பட்டுவா இவள் என்று நினைக்கும்படி இருந்தது பட்டு தமக்கையிடம் நடந்து கொண்ட விதம். இரண்டாவது மாப்பிள்ளை வந்து விட்டாலே, வீட்டில் முதல் மாப்பிள்ளைக்கு மவுசு குறைவது வழக்கம். அதுவும் முதல் மாப்பிள்ளை கதியின்றி கல்யாணத்தைப் போல் வீட்டோடு கிடந்துவிடில் கேட்பானேன்? இனிமே இந்த வீட்டில் இருப்பது பிசகு என்று கல்யாணமும், கங்குவும் நிச்சயித்துக் கொண்டிருக்கையில் தான், முதல் வாரம் தான் போட்டிருந்த 'பகுத்தறிவுப் போட்டியில்' தனக்கு முதல் பரிசு 3000 ரூபாய் விழுந்திருப்பதைக் கண்டான் கல்யாணம். "கங்கு" என்று கூவி பரிசு விழுந்த புத்தகத்தை அவள் கண்ணெதிரே பிடித்தானவன். சந்தோஷத்தினால் சிறிது நேரம் பேசாமல் இருந்த கங்கு "என்ன செய்யப் போகிறீர்கள் பணத்தை?" என்று கேட்டாள். "சந்தேகமென்ன? வியாபாரம் தான்!" என்றான். அவள் அழுத்தமாக "அடாடா! ஒரு தரம் நஷ்டமான பிறகுமா?" "இனிமேல் ஜாக்கிரதையாய் இருப்பேன் கங்கு!" என்றான் கணவன். அவநம்பிக்கை நிறைந்த அவள் முகத்தில் லேசாக ஒரு புன்னகை தோன்றி மறைந்தது......"என்னமோ! மறுபடியும இருக்கிற பணத்தைத் தொலைக்காமே பார்த்துக்கோ!" என்று பெண்ணிற்கு புத்தி கூறினாள் மங்களம். ஆகுமா, ஆகுமான்னு கல்யாணமாச்சு, அநதப்பிள்ளைக்கும் ஒரு வேலை கிடைக்கல்லே, கிடைச்ச காசையும் ஒருதரம் தொலைச்சாப் பலே தொலைச்சுட்டு நின்னா என்ன பண்ணுகிறது என்று பெற்றவள் எப்படி சிந்திக்காமல் இருக்க முடியும்? கணவனிடம் அதிகமாகக் கூறவும் பயந்தாள் கங்கு. ஏழையாய் இருந்தால் என்ன, தன்னிடம் பிரியமாய் இருக்கானே அதுவே போதும், என்று திருப்திப்பட்டாள் அப்பேதை.

உலகத்திலே, நாம் நினைக்கிற காரியமெல்லாம் நடக்காமல் போவதிலும், நினைக்காத காரியத்தை நடத்தி வைப்பதிலும் அந்தப் பரந்தாமனுக்கு என்ன சந்தோஷமோ தெரியவில்லை. இந்த ஜன்மத்தில் கல்யாணம் எங்கே ஆகப்போகிறது என்று நினைத்திருந்த கங்குவிற்கு கல்யாணமானதே ஒரு அதிசயம்.

கல்யாணராமன் அவள் மீது உயி
ராக இருந்தது அதைவிட அதி
சயம். ஆனால் இது எல்லாவற்
றையும் தூக்கி அடிக்கும் அதி
ருஷ்டமென்பது இருந்ததே! அது
கங்குவின் பங்கில் இருந்
ததை யாரும் உணரவில்லை. பிர
பல ஜோஸ்யர்கள்கூட கங்கு
வின் ஜாதகத்தைப்பற்றி பிரமாத
மாகச் சொல்லவில்லை யென்றால்
பார்த்துக் கொள்ளுங்களேன்.
ஒரு சிறியவீட்டில் ஒருபகுதியை
வாடகைக்கு எடுத்துக்கொண்டு
தான், ஸ்ரீமான் கல்யாணம்
தனது தனிக் குடித்தனத்தை
ஆரம்பித்தார். 500ரூபாய் கையில்
வைத்துக்கொண்டு மிச்சப்பணத்
திற்கு அப்படியே வியாபார
சாமான்களை மொத்தமாக வாங்
கினான் கல்யாணம். அதை வந்து
கங்குவிடம் சொன்ன போது
அவள் நடுங்கினாள். ஒரு முறை
நஷ்ட மடைந்ததைப் பார்த்தவ
ளல்லவா? கல்யாணம் சாமான்
வாங்கின பதினைந்தாவது நாள்
உலக யுத்தம் பிரகடனமாயிற்று.
அடுத்த மாதம் சர சர வென்று
விலை ஏறத் தொடங்கிற்று. 2500
ரூபாய்க்கு வாங்கிய சாமான்
கூட ஒரு ஸைபருடன் 25000
ரூபாய்க்கு போயிற்று. "கங்கு!
நீ அதிர்ஷ்டசாலி!" என்று
குதித்தான் கல்யாணம்......புக்க
கம் போன புதிதில் பட்டுவின்
பாடு வெகு குஷியாக இருந்தது.
"பட்டு பட்டு" என்று சுற்றிச்
சுற்றி வந்தான் கணவன். ஏற்
கனவே கட்டழகியான பட்டு
வின் மேனிக்கு அதிகப் பள
பளப்பு கொடுத்தது கணவனின்
அன்பென்னும் அமிர்த வர்ஷம்...
ஒரே நிமிஷத்தில் சொரிந்துவிடும
ஆசை நிற்காது. ஆழ்ந்த அன்பு
தான் சாஸ்வதம் என்பதை
அவள் அறியவில்லை. "அம்மா!
இங்கே வந்தால் தெரியும்
உனக்கு. என் புருஷர் வீடு
தேவலோகம்தான்" என்று
தாயாருக்குப் போன புதிதில்
கடிதம் எழுதி வந்தாள் பெண்.
போகப் போகத்தான் தெரிந்தது.
இது தேவலோகமென்பது
நிஜமோ, இல்லையோ, கணவ
னுக்கு தேவேந்திரனைப்போல்
பல ஸ்திரீகளிடம் சகவாசம்
இருக்கிறதென்பது. பட்டுவிட
மிருந்த மோஹம் விட்டுப்
போயிற்று அவனுக்கு. தனது
சகாக்களுடன் புதிய சரக்குத்
தேடக் கிளம்பி விட்டானவன்.
முதன் முதலாக விஷயம் தெரிந்த
போது பட்டு திடுக்கிட்டாள்.
பின்பு மெள்ள அவனை வழிக்கு
கொண்டு வர பிரயாசைப்படத்
தொடங்கினாள். ஆன சாகஸங்
கள் செய்தாள். ஊஹூம்! அவ
னைக் கண்டாலே அலுப்புத் தட்டி
யவள்போல், நடந்து கொள்ள
லானான் அவள் கணவன் மூர்த்தி.
ஒவ்வொன்றாய் மனைவிக்குப் பூட்
டியிருந்த ஆபரணங்களுக்கும்
தினவு எடுக்கத் தொடங்கிற்று.
இந்த மாதிரி எத்தனை நாள் நடக்
கும்? ஒரு நாள் சொல்லிக்
காமலேயே எங்கோ போய்ச்
சேர்ந்தான் அந்த மேதாவி......
இவை யெல்லாம் நடந்து 7 வரு
ஷங்களாகின்றன. தற்சமயம்,
கங்குவின் வீட்டிற்குப் போனால்
இளைத்துக் கண்குழி விழுந்து
போன பட்டுவை அங்கு காண
லாம். ஒரு சமயம் அழகே உரு
வாக விளங்கிய பட்டுவா இது
என்றுதான் முன்பு அவளைப்
பார்த்தவர்கள் அதிசயிப்பார்
கள். தனியே அவளிடம்போய்
"என்னடி பட்டு! இப்படி ஆகி
விட்டே?" என்று கேட்டால்,
'பெண்களுக்கு அழகு மட்
டும் இருந்து என்ன மா பிரயோ
ஜனம்? கூடவே அதிருஷ்டமும்
இருக்கணும். எங்காத்துக்காரர்

அத்தனை சொத்தையும், குடியிலேயும் கெட்ட நடவடிக்கைகளிலுமாகத் தோற்றுவிட்டார். இப்பவோ ஆள் இருக்கும் இடமே தெரியவில்லை. என் பெற்றோர்களும் தான் இறந்துவிட்டார்கள். இந்த மாதிரி சமயத்தில் கங்கு வந்து என்னை அழைச்சிண்டிருக்காட்டா, எந்த ஆற்றிலே, குளத்திலே மிதந்திருப்பேனோ?...'' என்று கண்ணீர் ததும்பப் பதில் கூறுவாள் பட்டு. இப்போதும் பட்டுவையும், கங்குவையும் சேர்த்துப் பார்ப்போர், 'அட! ஒரு வயிற்றுப் பெண்களா இவர்கள்!'' என்று ஆச்சரியந்தான் படுகிறார்கள். நன்றாக 'பாலீஷ்' கொடுக்கப்பட்ட நூக்கமரம் போன்று பள பள வென்று காந்தியுடன், வைரமாக ஜொலிக்கும் கங்குவுடன் கூடப் பிறந்தவளா உலர்ந்த சருகாய்க் குழிவிழுந்த கண்களுடன் விளங்கும் இந்தப் பட்டு என்று பலர் சொல்லத்தான் செய்கிறார்கள். ஏழு வருஷங்களுக்கு முந்தி யாராவது சொல்லியிருந்தால், இதை நம்புவார்களா?

ஆரம்பக் கல்வி

நம் மாகாணத்தில் ஆரம்பக் கல்விக்காக செலவிடும் தொகை 1929-ல் 1½ கோடியாக இருந்தது இப்போது 4½ கோடியாக உயர்ந்திருக்கிறது. என்றாலும் ஆயிரத்துக்கு மேலான பள்ளிக்கூடங்கள் குறைவுபட்டிருக்கின்றன. அனேக பள்ளிக்கூடங்களில் போதுமான ஆசிரியர் இல்லை. ஆசிரியர்கள் அடிக்கடி வராமற் போகிறார்கள். இதற்கு மேற்பார்வை அதிகாரிகளின் கவனமின்மையே காரணம் என்று சொல்ல வேண்டும். எனவே ஆரம்பக் கல்விக்காகச் செலவாகும் பணத்தில் பாதி விரயமென்றே நான் சொல்வேன். இப்படி அதிகப் பண விரயமும், கல்வியை மேலும் விஸ்தரிப்பதற்கில்லாதபடி பணமின்மையும் இருந்தால் வருங்காலம் என்னவாகும்?

'சென்னைப் பிரதமர்'

தனிமையின் இனிமை

ஸ்ரீமதி வி. ராமன்

இருபுறமும் பச்சைப் பசேலென்று செடி கொடிகள். நடுவில் ஓரடி அகலமுள்ள ஒற்றையடிப்பாதை. பாதைக்கு இருபுறமும் பச்சை இரத்தின மிழைத்தாற்போல புல் தரை. இடையிலே ஒரு சந்து. இந்தச் சந்தின் கோடியில் எங்கள் வீடிருக்கிறது. நானும் இரண்டு மணி நேரமாக வாசற்படியில் உட்கார்ந்தவண்ணம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எதாவது ஒருவர் சந்தோடு போகமாட்டார்களா என்று. ஒருவரையும் காணோம். எங்கிருந்தோ வயற்காட்டில் மேய்ந்துகொண்டிருந்த மாட்டின் கழுத்தில் கட்டியிருக்கும் மணியினோசை காற்றில் மெல்லன மிதந்து வந்தது. அந்தத் தனிமையை நினைத்துப் பார்க்கவும் மயிர் கூச்சலிட்டது.

நான் பராக்குப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அந்தப் பட்டுப் பூச்சியின் சிறகுகளில்தான் எத்தனை வர்ண ஜாலங்கள். காட்டு ரோஜா கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தது. அதனடுவிலிருந்து அந்தப் பட்டுப் பூச்சி கிளம்பியது ஏதோ ஒரு தேவதை புறப்பட்டது போலிருந்தது.

என் கண்களை நாற்புறமும் ஓட்டினேன். என்னைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும் அழகிய புஷ்பங்கள் சிரித்தன. அவைகளோடு என் இருதயமும் பூரித்து மகிழ்ந்தது. என் காலடியில் அறுகம்புல்லிடையில் அரும்பியிருந்த விஷ்ணுக்கிராந்த புஷ்பம் புன்னகை செய்தது. அந்த வினாடியில் என் இதயத்துக்குள் ஏகாந்தத்தின் இனிமை நிறைந்தது.

சிருஷ்டியில் தனிமை ஏது? சென்னையில் ஒருபுறம் மின்சார வண்டிகளும் மறுபுறம் மண் எண்ணெய்வண்டிகளும் காற்றில் கர்ண கடூரமான அலைகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றன. அதிலிருந்து தப்ப இங்கு வந்தேன். தனிமையை நாடி வந்தேன். இந்தப்புறம் திரும்பினால் செவ்வரளிக்கு இடையில் தன் முத்துப் பற்களைக் காட்டி வெள்ளை அரளி இளிக்கிறது. மறுபுறம் பார்த்தாலோ கொன்றை தன் செங்கையை விரித்தசைத்து 'வா வா' என்றழைக்கிறது. "கூ கூ" என்று குயில் இசை பாட "டொக், டொக்" என்று மரங்கொத்தி தாளம் போடுகிறது. புறக் கண்ணைச் சற்று மூடினால், கார்மேகம் போலக் கவிந்த ஓரிடைப்பிள்ளை கையில் குழல் பிடித்து ஆடுகிறான். அவனோடு அகன்ற அண்டம் முழுதும் ஆடுகிறது.

புஷ்பங்களெல்லாம் ஏன் இவ்வளவு அழகாக இருக்கின்றன? அவற்றுள் அழகில்லாதது என்று ஒன்றாவதுண்டா? இருக்க முடியாது. ஏன்? எனக்குத் தெரியாது. உங்களுக்குக் கூடத்

தான் தெரியாது. யோசித்துத் தான் பாருங்களேன். ஏன் ஒரு புஷ்பம் கூட அவலட்சண மாக இருப்பதில்லை?

மனிதனைச் சிருஷ்டிப்பதற்கு முன் ஆண்டவன் தாவர உலகை உண்டாக்கியதாக உயிர் நூல் கூறும். தன் நிழலில் தான் சிருஷ் டிக்கப் போகும் உன்னத ஜீவனின் உயிர் நிலையாக ஆகாரப் பொருள்களை மாத்திரம் ஆக்கி அதோடு தன் கடமை முடிந்த தாகக் கர்த்தர் நின்று விடவில்லை. ஆத்ம திருப்தியாக இருக்க அழகையும் சிருஷ்டித்திருக்கிறார்.

பட்டாம் பூச்சிகளுடையவும் தேனீக்களுடையவும் கவனத் தைத் தன் புறம் இழுக்கப் புஷ் பங்கள் பிரகாசமான வர்ணங் களைத் தரித்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். ஆனால் அவை அழகாக இருக்க வேண் டிய தில்லையே! அழகு, அழகுக் காகவேதான் உண்டாயிருக்கி றது. ஈஸ்வரன் சர்வ வியாபி என்பதற்கு அழகுதான் சாட்சி. ஒவ்வொன்றிலும் உள்ள அழகு தான் ஈஸ்வராம்சம்.

“எங்கெங்கு அழகைக் காண் கிறாயோ அங்கெல்லாம் நானிருக் கிறேன்” என்றார் பரந்தாமன் அர்ச்சுனனிடம்.

இதிலிருந்து ஒரு உண்மை வெளியாகிறது. சிருஷ்டிக்கு ஜடப் பொருள் மாத்திரம் ஆதார மில்லை. ஜீவன்தான் மூலப் பொருள். “தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்குத் தொன்னை ஆதாரமா? என்று ஒரு தர்க்க சாஸ்திரி தொன்னையைக் கவிழ்த் துப் பார்த்தானாம். நெய்க்காகத் தானே தொன்னை ஏற்பட்டது என்ற தத்துவம் அந்த சாஸ்திரி யின் மனதில் என் தோன்ற வில்லையோ? உலகம் கேவலம் ஆகாரத்தைப் புசித்து மாத்திரம் ஜீவிக்கும் ஜீவன்களுக்காக சிருஷ்டிக்கப் படவில்லை. அழகை அனுபவித்து அதில் சிருஷ்டி கர்த்தாவைக் கண்டு அவன் அனு பூதியில் தன்னையிழந்து ஆனந்தத் தில் லயித்து அவனுடன் ஒன்று கும் மனுஷ்யனுக்காகத்தான் சிருஷ்டியே ஆரம்பிக்கப் பட்டது.

தூய்மை

அந்தத் தும்பைமலரில்எவ்வளவு வெண்மை மிளிர்கிறது. இன் னும் எத்தனையோ வெள்ளை மலர்கள் இருக்கின்றன. முல் லைக் கொடியின் மொக்குகள் சூரியனைக் கண்டு வெட்கப்பட் டுக் கொண்டு குவிந்திருக்கின் றன. தண்ணொளி வீசிக்கொண்டு சந்திரன் கிளம்பியதும் தன் மலர்க் கரங்களை விரித்துக் கொண்டு நறுமணம் வீசிப் புன் னகை புரியும். ஜாதியும் மல்லிகை யும் ஒன்றேடொன்று போட்டி யிட்டுக் கொண்டு புதரினின்றும் எட்டிப் பார்க்கின்றன. இந்தப் மலர்களுக்குத்தான் என்ன பணிவு! என்ன ஒடுக்கம்! என்ன அடக்கம்! தாமஸ் ஹூட் வைலட் புஷ்பத்தைக் குறித்து எழு திய வரிகள் ஞாபகத்திற்கு வரு கின்றன.

“கீழே ஓர் நிழலான பசுமை பொருந்திய படுக்கையில் ஒரு வைலட் மலர் அடக்கமாய் மலர்கிறது. அதன் தண்டு வளைந் திருக்கிறது. தலை குனிந்திருக் கிறது. மற்றோர் பார்வையி லிருந்து மறைவதற்காகப் போலும்.

ஆனால் அது ஒரு அழகிய மலர். நறுமணம் வீசும் நல்லெழில் மலர்.”

புஷ்பங்களுக்கே துளிகூட கர் வமோ படாடோபமோ கிடை

197645

யாது. எவ்வளவோ வகையான மலர்கள் இங்கிருக்கின்றனவே. வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தவை என்று கூடச் சொல்லும்படி மாறுபாடுகளுடையவை. ஆனால் அவை ஒன்றோடொன்று சண்டை யிடுவதில்லை. மற்றவர்களை வாழவிட்டுத் தாமும் வாழ்கின்றன. இந்த எளிய தத்துவம் உயர்ந்த சிருஷ்டியாகிய மனித உள்ளத்தில் பதியவில்லையே.

பூனையும் நாயும் போல மனிதர்கள், ஒரே தாயின் குழந்தைகள், ஒரே நாட்டில் பிறந்து வளர்ந்த சகோதரர்கள், சண்டையிடுகிறார்கள். அதோ இரண்டு குருவிகள் ஒரு புழுவுக்காக சண்டை யிடுகின்றன. ஒன்று பெரியது, வலுவுள்ளது. மற்றதை வேலிக்கு வெளியே துரத்துகிறது. ஐயையோ, அந்தக் குள்ள நரியைப் பாருங்கள். ஐயோ பாவம்! முயலைத் துரத்திக் கொண்டோடுகிறது. அதோ பிடித்தேவிட்டது. கிருஷ்ணா! அழகிய என் குறுமுயலின் ஆயுள் இவ்வாறு முடிய வேண்டும்! இந்தப் பருந்து ஏன் இப்படி வட்டமிடுகிறது? எனக்குத் தெரியும். அதோ தாய்க்கோழியின் அபயக் குரல் தன் குஞ்சுகளை அழைக்கிறதே. பருந்திடமிருந்து எல்லாக் குஞ்சுகளும் தப்பித்துவிட்டன என்று நினைக்கிறேன். தாயின் சிறகின் கீழ் புகுந்துகொண்டு பருந்தரக்கனின் பட்சணமாவதிலிருந்து பதுங்கி விட்டன! அப்பாடா! ஏன் அந்தப் பருந்து கீழ் நோக்கிப் பாய்கிறது? அட அடங்காப் பிள்ளையே! அப்பொழுதே அம்மாவின் சொல்லைக் கேட்டு அவள் சிறகின்கீழ் ஒளிந்துகொண்டிருக்கக் கூடாதோ! உன் அகங்காரத்துக்குப் பிராயச் சித்தமாக உயிரையே விட்டு விடுகிறாயே!

ஐயோ! என்னால் சகிக்க முடியவில்லையே இந்தக் கோரக் காட்சி. உலகம் பூராவுமே ஒரு யுத்த பூமியாக இருக்க வேண்டுமா? அட கடவுளே!

இல்லை யில்லை. இந்தக் குளுமையான காட்சியைப் பாருங்கள். என் காதலைக் கிளப்பும் கனிவு மிகுந்த கொன்றையைப் பாருங்கள். இந்தக் கொடுமைகளைக் காணச் சகிக்காமல் தன் இருதயத்தை விண்டு இரண்டு சொட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

என் உள்ளத்தை அள்ளும் மலர்களே! உங்கள் தூய வாழ்வில் கொடுமையே கிடையாது. தங்கள் இன்பத்திற்காக வென்று உங்களைக் கொய்து கசக்கும் மனிதப் பிராணியின் மீது கூட நீங்கள் வஞ்சம் பாராட்டுவதில்லையே! உங்களுக்குள்ளே சண்டையும் சச்சரவும் வர்மமும் கொடுமையும் எங்கிருந்து உண்டாகப் போகிறது. உலகமே தூய்மையில்தான் சிருஷ்டிக்கப்பட்டது என்பதற்கே நீங்கள்தான் அழியாச் சான்றாக இருக்கிறீர்கள்! அன்பிலும், சத்தியத்திலும், வாய்மையிலும் தூய்மையிலும், அடக்கத்திலும் அமைதியிலும், பணிவிலும் பண்பிலும்தான் ஜீவரகசியம் அடங்கியிருக்கிறது. எல்லா ஜீவன்களும் இந்த உண்மைத் தத்துவத்தை உணர்ந்தால் சிருஷ்டி பூர்த்தியாய்விடும். நாமும் தோட்டத்திலும் வயல்களிலும் வேலியிலும் முள்ளிலும் புதரிலும் எங்கும் நிறைந்து உள்ளத்தைக் கவரும் புஷ்பங்களைப்போல கபடு சூது வாது முதலிய பேய்க் குணங்கள் அழிந்து தூயர்களாக ஆண்டவனின் பிம்பங்களாகத் திகழ்வோம். எவ்வளவு எளிய தத்துவம்! ஆனால் அந்தோ அனுபவ சாத்தியமா?

புஷ்பங்களுக்கு இரண்டே இரண்டு லட்சியங்கள்தான் உண்டுபோல் தோன்றுகிறது. ஒன்று அழகாயிருப்பது. மற்றது தனக்குள் அடங்கி யிருக்கும் ஜீவன் அழியாமல் காப்பாற்றுவது. இந்த இரண்டாவது லட்சியத்தை அடையத் தான் பட்டாம் பூச்சியைப் பல காதல் வார்த்தைகள் சொல்லி, மினுக்கு மினுக்கி, தளுக்கு செய்து அழைக்கிறது. தேன் வண்டிற்கு மதுவைக் கொடுத்து மயக்குகிறது. அதோ பாருங்கள்! ஒரு வண்டு அந்த ரோஜாப் புஷ்பத்தை நாடிச் செல்கிறது. அது போகும் வேகத்தைப் பார்த்தால் அந்தப் புஷ்பத்தை அடியோடு அழித்துவிடப் போகிறதுபோலத் தோன்றுகிறது. ஆனால் அதற்கு அமரத்துவம் அளிக்கத்தான் போகிறது. மதுவைக் குடித்து மகரந்தத்தைக் கொள்ளை கொண்டு செல்கிறது. ஆனால் புஷ்பம் புன்னகை செய்கிறது. வண்டின் விஷமம் அதற்கு ஆனந்தமாகவே யிருக்கிறது.

தேனைக் குடிக்கும்போது வண்டின் சிறகிலிருந்து சிறிது மகரந்தத் தூள் புஷ்பத்தின் அண்டாசயத்தில் சேர்த்துவிட்டது. இப்பொழுது இந்தப் புஷ்பத்திற்கு உள்ள மகிழ்ச்சியை கருத்தரித்த மங்கையின் ஆனந்தத்திற்குத் தான் ஒப்பிடலாம்.

இயற்கைத் தாய் சிருஷ்டிச் சக்கரம் தடைபடா வண்ணம் இரண்டு உணர்வுகளை ஆழமாக ஜீவ வர்க்கங்களில் பதிய வைத்திருக்கிறார். ஒன்றுதான் தற்காப்பு. இந்த உணர்வு பல சமயங்களில் வரம்பு கடந்து ஜீவ ராசிகளின் அழிவிற்கு அடிகோலி விடுகிறது. மற்றதுதான் அமர உணர்ச்சி. தாவரமாகிலும் சரி பிராணி வர்க்கமாகிலும் சரி, தன் வர்க்கம் அழிந்து விடாமலிருக்க சகல தியாகங்களுக்கும் தயாராக இருக்கின்றன. தற்காப்பு உணர்வுபோலவே இதுவும் சுய நலம் காரணமாக அழிவுக்கும் ஆக்கிரமிப்புக்கும் காரணமாகி விடுகிறது. ஆனால் இந்தத் தீமை மனித வர்க்கத்தின் பிரத்தியேக உரிமையாக இருப்பதும் வெட்கப்படக் கூடியது தான். எந்தப் புஷ்பமும் விபரீதச் சேர்க்கையை விரும்புவதில்லை. பலவந்தப் புணர்ச்சியையும் சகிப்பதில்லை. அவை இயற்கை யன்னையின் வரம்புக்கு உட்பட்டவை.

அண்டாசயத்தைச் சேர்ந்த தாது வித்தாக மாறுகிறது. பிறகு தாயினின்றும் பிரிந்து வேறிடம் தேடி முளைத்து வளர்ந்து புஷ்பிக்க ஆரம்பிக்கிறது. தாயும் தன் வித்து வேறிடம் செல்ல பல உதவிகளைச் செய்கிறது. கட்டுச் சாதம் கட்டிக் கொடுக்காவிட்டாலும், தானாகக் கரிய மலவாயுவை நீரோடு பிணைத்து ஆகாரமாக்கும் வலிமையைப் பெறும்வரை விதையின் தேவைக்கான ஆகாரத்தை வித்தினுள்ளேயே அடக்கம் செய்கிறது. வித்தைத் தூக்கிச் செல்ல பட்சிக்குக் கூலியாக ருசியான பசையுள்ள பதார்த்ததையும் கொடுக்கிறது. அல்லது வேறு ஏதாவது யுக்தியைக் கையாளுகிறது. எல்லாம் அமர உணர்ச்சியின் வேகத்தினால்தான்.

தனிமையிலே காணும் இனிமையில் இயற்கை அழகை ஆராயும் ரீதியும், எவ்வளவுக்குப் பண்பட்டிருக்கிறதென்று பார்த்தீர்களா?

குடும்ப வாழ்க்கை

எஸ். விசாலாக்ஷி

கேள்வி: என் பெற்றோர்கள் எனக்கு விவாகம் செய்துவைக்க முயற்சிக்கிறார்கள். எனக்கு வயது பதினாறுதான். இந்த வருஷம் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்கு வாசிக்கிறேன்.

தைலாம்பாள், ஸ்ரீவைகுண்டம்.

பதில்: உங்கள் பெற்றோர்கள் செய்வதுதான் உசிதமான காரியம். எதுவும் அந்தந்த நாளில் செய்தால்தான் அழகாயிருக்கும். இருபத்தைந்து வயதிற்குப் பிறகு மணம் செய்து கொள்வதைவிட கன்னிகையாகவே இருந்து விடுவது நலமென்று புத்தி சொல்வேன்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணுக்கு ஐந்தாவது பாரம் படிக்கும்போது அவள் பெற்றோர்கள் அவளுக்கு மணம் செய்விக்க பகீரதப் பிரயத்தினம் செய்தார்கள். அந்தப் பெண் எஸ். எஸ். எல். ஸி. முடிக்காமல் விவாகம் செய்து கொள்ள மறுத்து விட்டாள். அந்த வருஷந்தான் சாரதா சட்டமும் அமுலுக்கு வந்தது. எஸ். எஸ். எல். ஸி. முடித்தவுடன் அவள் தகப்பனுருக்குப் பணமுடை வந்து விட்டது. உதவிச் சம்பளத்திற்கு பிரயத்தினம் செய்து அந்தப் பெண்ணை காலேஜில் சேர்த்து விட்டார். பி. எ. பாஸ் செய்து விட்டு, உபாத்தினியாயிருக்கிறாள். அவளுக்கேற்ற புருஷனைக் கிடைத்தால்தானே அவள் மணம் செய்து கொள்ள முடியும்!

கேள்வி: இந்தப் பனி நாட்களில் சோப்புத் தேய்த்துக் கொள்வதனால், முகம் கைகால்களெல்லாம் 'வறவற' வென்று இருப்பதுடன் எரிச்சலும் உண்டாகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ருக்குமணி, தலைஞாயர்.

பதில்: ஸோடியம் ஹைட்ராக்ஸைட் (காஸ்டிக் சோடா) என்னும் க்ஷார வஸ்து இருப்பதால் அது சருமத்தின் வனப்பைக் கெடுத்து கிழட்டுத் தன்மையை ஏற்படுத்தி விடுகிறது. "கண்ணாடி" எழுதியிருப்பதைப் பாருங்கள். கண்ணாடி சொல்வதை அநுபவத்தில் செய்து பாருங்கள். நம் நாட்டுப் பெண்களில் சிலருக்குப் பதினெட்டு வயதிலேயே முகத்தில் சுருக்கங்கள் ஏற்படுவதற்கு சோப்புதான் காரணம். பவுடரை ஒத்திக் கொள்வதற்குப் பதிலாக தினசரி இருமுறை வெதுவெதுப்பான ஜலத்தில் பேதியுப்பைக் கரைத்து கழுவிக் கொள்வதினால் மாகிறம் நீங்கி வெளுக்கும். தினசரி காலையில் வெண்ணெயால் முகத்தை 'மஸாஜ்' செய்து கொள்வதுடன் சோப்பு உபயோகிக்காமல் 'கண்ணாடி' சொல்லும் மாப்பொடியை உபயோகித்துப் பாருங்கள். பலனேற்பட்டால் எனக்கு எழுதுங்கள்.

புக்ககத்தில் நாட்டுப்பெண்

(ஜயலக்ஷ்மி R. ஸ்ரீனிவாஸன்)

எனக் கென்னவோ அன்று பொழுதே போக வில்லை. தனிமையின் கொடுமையைச் சகிக்க முடியாமல் அழுகை கூட வந்து விடும் போலிருந்தது! வருஷக் கடைசி யாதலால் அவருக்கு இந்த வாரத்தில் மூச்சு விடாமல் வேலை. பாவம்! அதிகாலையிலேயே எழுந்திருந்து ஸ்னானம் செய்து உடை மாற்றிக் கொண்டு ஆபீஸுக்குக் கிளம்பினாரானால் இரவு ஒன்பது மணிக்குத்தான் வீடு திரும்புவார். பகல் சாப்பாடு, காப்பி எல்லாமே ஆபீஸின் அருகில் உள்ள ஓட்டலிலிருந்து வரவழைத்துக் கொண்டு விடுவார். குழந்தை கண்ணனாவது வீட்டில் இருந்திருந்தால் அவனுடன் கொஞ்சிக் குலாவுவதிலும் விளையாட்டுக் காட்டுவதிலும் பொழுது போய் விடும். போன வெள்ளியன்று பட்டு (என் ஓர்ப்படி) பிரசவித்திருக்கிறாள் என்று கடிதம் வந்தது. குழந்தையையும் தாயாரையும் பார்த்துவரப் சென்ற என் மாமியார் கண்ணனையும் கூட அழைத்துக் கொண்டு போய்விட்டார். என் கணவர் "கண்ணனும் இல்லையே விஷமம் செய்ய! அம்மாவும் இல்லை முணுமுணுத்துக் கொட்ட! உனக்கு யோகம் தான். மேலும் உன்னைக் குறுக்கிட்டுத் தொந்திரவுசெய்ய எனக்கும் பொழுதில்லை! இப்போ நிம்மதியாக ஜம்முனு கதை எழுதித் தள்ளேள். சீதா! பொழுது போக வில்லை, பொழுது போக வில்லை என்கிறாயே," என்று குறும்பாகச் சொன்னார்.

வீடு வெறிச்சென்று இருந்த மாதிரியே என் உள்ளமும் வெறிச்சென்று ஆகிவிட்டது. மனதில் ஒரு உல்லாசமும், ஊக்கமும் உண்டானால் தானே கற்பனை ஊற்றும் சுரக்கும். அன்று பகல் சாப்பிட்டு, கைக் காரியம் முடிந்த பிறகு, இந்த 'வனிதா' ஆசிரியைதான் ஆண்டு மலருக்கு ஒரு கதை வேண்டும் என்று நச்சரித்துக் கொண்டிருக்கிறார்களே, ஒன்று எழுதித்தான் பார்ப்போமே என்று எழுத உட்கார்ந்தேன். எழுதி எழுதிக் கிழித்துப் போடுவதைத் தவிர கதை எழுதின பாடில்லை! அந்த வேளைக்குச் சரியாக "போஸ்ட்" என்று கூவிவிட்டு கவர் ஒன்றை ஜன்னல் வழியாக விசிறி போட்டு விட்டுச் சென்றான் தபால்காரன். கவரின் மேல் விலாசத்தைப் பார்த்ததுமே, அது என் நாத்தனார் சரோஜாவின் கையெழுத்துத் தான் என்று அறிந்து கொண்டேன். குதூகலந் தாங்காது, பதற்றத்துடன் கடிதத்தைப் பிரித்தேன். என் நாத்தனார் வெகு நாட்களுக்குப் பிறகு எழுதிய அருமைக் கடிதம் அல்லவா அது! கடிதம் வெகு சுவாரஸ்யமாக விருந்தது. அதைப் படிக்கப் படிக்க சரோஜாவின் அருமையான குணத்தையும் அவளுக்கு என் மீதுள்ள பாசத்தையும் நினைத்து நினைத்து மன மகிழ்ந்தேன். கடவுள் சரோஜாவைக் காத்தருள் வாராக! ஆனால் அவள் புக்ககத்தில் படும் துன்பத்தை அறிந்து என் உள்ளம் உருகிவிட்டது.

கதையாம் கதை! என்னத்தை எழுதுவது? கற்பனைக் கதையைவிட உண்மையான வாழ்க்கைச் சம்பவமே மனதை உருக்கி விடுகிறதே. சரோஜாவின் கடிதத்தைப் படித்துப் பார்த்தாலே, புரியும் அதன் பொருள். இதோ அவளுடைய கடிதம். படித்துக் காட்டுகிறேன் கேளுங்கள்.

என் அன்புள்ள மன்னி,

நான் புக்ககத்துக்கு வந்த பிறகு எனக்கு ரொம்ப ஜம்பம் வந்துவிட்டது என்றும் மன்னியை மறந்து விட்டேன் என்றும் கடிதமே போடுவதில்லை என்றெல்லாம் என்மீது குற்றம் சுமத்தி எழுதி இருக்கிறாயே. உன்னை நான் என்றைக்காவது மறப்பேனா? எனக்கு வாழ வழி காட்டும் தெய்வமல்லவா நீ!

மன்னி! கடிதம் எழுத உட்காரவே ஒழிகிறதில்லை. அப்படி எப்பொழுதாவது உட்கார்ந்தாலும் முடிவதில்லை. பின்னாலேயே என் நாத்தனாரும் வந்து உட்கார்ந்து விடுகிறாள். மனம் விட்டுத்தெளிவாக எழுத முடிகிறதில்லை. எழுதாவிட்டாலோ மனம் கேட்பதில்லை." "இங்கே எல்லோரும் சுகம். அங்கே எல்லோரும் சுகமா? இப்படிக்கு......" இந்த மாதிரி எழுதி விட்டால் போதுமா? உனக்குத் திருப்தியா சொல். உன்னைப் போல் படித்த பெண்ணுக்கு, கதாசிரியையான ஸ்ரீமதி சீதா ரங்கனாதனுக்கு உகந்த மாதிரி, படித்து ரசிக்கக் கூடிய கடிதம் எழுத வேண்டும் என்று எனக்கு ஆசை. எழுதலாம், எழுதலாம் என்று நாளைப் போக்கிக் கொண்டிருந்தால் உனக்குக் கோபம் வரலாம் என்று பயந்து இதோ இன்றைக்கு எழுத ஆரம்பித்து விட்டேன்.

நான் உன்னைப் பாடா படுத்தி வைத்தேனே. அதன் பலனை இப்பொழுது நன்றாக அனுபவிக்கிறேன் மன்னி! நீ என்னவென்றால் சரோஜா புக்ககத்தில் ஒரே குஷியும் கும்மாளமுமாக இருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய், அடியம்மா! நான் இங்கே படுகிற சுகம் பகவானுக்குத் தான் தெரியும். என் மாமியார் இருக்கிறாரே, மகா பொல்லாதவர். நாத்தனார் காமு அதை விடத்தான்; சின்ன நாத்தனார் செல்லத்தையாவது ஒரு கை சேர்த்துக் கொள்ளலாம். காமு என்னைப் படுத்தி வைக்கிற பாடு, சொல்லி முடியாது. அவருக்கோ வேலைத் தொல்லை ரொம்ப அதிகம். மூச்சு விடக்கூடப் பொழுதில்லை. அவர் சாயந்திரம் வீடு திரும்பும் பொழுதே இருட்டி விடுகிறதே. என்ன செய்வார், பாவம். எனக்கு இந்த வீட்டில் அவருக்குக் காப்பி கொண்டு போய் கொடுக்கும் சாக்கில் கூட அவருடன் பிரியமாக இரண்டு வார்த்தை 'பேசக்கூட சுதந்திரம் கிடையாது. மாற்றி மாற்றி இந்த நாத்தனார்கள் பின் தொடர்ந்து வந்து காவல் புரிகிறார்களே. எதாவதொரு ஞாயிற்றுக்கிழமையில் சினிமாவுக்குக் கூட்டிக் கொண்டு போகிறார். அப்பொழுது இந்த இரண்டு வால்களும் வராமல் இருப்பதில்லை! என் மன்னி, நானும் உன்னை இடைவிடாமல் பின் தொடர்ந்து இப்படித்தானே துன்பப்படுத்தினேன். அச்சமயம் நீ கொடுத்த சாபம் தானோ என்னவோ, அதான் எனக்கு ஒன்றுக்கு இரட்டிப்பாக நாத்தனார்கள்

வாய்த்திருக்கிறுர்கள்! ஆமாம் நீ வந்த புதிதில் அன்றைக்கு ஒரு நாள் அண்ணு உன்னை பீச்சுக்கு அழைத்துக் கொண்டு புறப்படறச்சே நானும் உங்களுடன் வருவேன் என்று எவ்வளவு பிடிவாதம் பிடித்தேன். பாவம்! உங்களுடன் வந்து உங்கள் இன்பத்தைக் கெடுத்தேனே, இது போல் எவ்வளவோ நாட்கள்! அந்தத் தவறுகளை எல்லாம் இப்பொழுது தான் நான் உணருகிறேன். நான் ஒரு சுத்த அசட்டுப் பெண். இல்லையா மன்னி? ஆமாம்.நான் தெரியாத் தனமாய் தவறு செய்தேன். சிற் சில சமயங்களில் அம்மாவின் தூண்டுதலின்பேரிலும் உன்னை நிறையப் பாடுபடுத்தி இருக்கிறேன். இதுகளோ குதிராட்டமா வளர்ந்திருக்குகள். மேலும் விவரம் தெரிந்ததுகள். வேண்டுமென்றே வீம்புக்கு என் உயிரை வாங்குகிறதுகள். அதிகாலையிலேயே எழுந்து பாதி ராத்திரி வரைக்கும் பம்பரம் போல் உழைக்கிறேன், மன்னி! நீ என்னைப் பூப் போல் வைத்துக்கொண்டிருந்தாயே. அம்மாகூட "நன்னு இருக்கு, எதற்கெடுத்தாலும், மன்னி, மன்னி என்கிறுயே பூவைக்கூடவா தொடுத்துத் தலையில் சூட்டிக் கொள்ள தெரியாது ஒரு பெண்ணுக்கு? அதற்குக் கூட மன்னியை அழைக்கிறுயே. நாளைக்குக் கல்யாணம் ஆகி, மாமியார் அகத்துக்கு போன பிறகுகூட மன்னி அங்கே வந்து சிச்ருஷை செய்ய வந்து நிற்பாளாடி?" என்று என்னை அதட்டுவாளே. நிஜம் தான் மன்னி! நீ எனக்கு ரொம்பச் செல்லம் கொடுத்துக் கெடுத்துவிட்டாய். அதுதான் இங்கே வந்த புதிதில் உன்னுடைய உதவி இல்லாமல் ரொம்பவும் திண்டாடிவிட்டேன். அங்கே உன்னைத் தொட்டதற்கெல்லாம் அதட்டுவேனே மன்னி! சிற்றுடைக்குச் சோப்பு போடு மன்னி! என் புத்தகப் பீரோவை ஒழுங்குபடுத்து மன்னி! தலை பின்னுகிறுயா...என்றெல்லாம் உன்னை வேலை வாங்கித் தொல்லைப் படுத்தினேனே! இங்கே வந்த புதிதில் என் வேலையையே நான் செய்துகொள்ளத் தெரியாமல் விழித்ததும் அல்லாமல் குடும்ப வேலை எல்லாமே என் தலையில் விழுவே திணறிப் போய்விட்டேன். மாமியாரோ நான் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் தவறு கண்டுபிடித்து என்னைக் கண்டிப்பதையே உத்தியோகமாகக் கொண்டிருக்கிறுர். இதன் நடுவில் நாத்தனுர்களின் தொந்திரவு வேறு. புக்ககத்தில் போய் 'ஜம்' என்று குஷியாகக் காலம் கழிப்போம் என்று மனப்பால் குடித்த என் மனக் கோட்டைகள் எல்லாம் தகர்ந்து விழுந்தன. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓயாமல் வேலை செய்து, அலுத்துப் போய் இரவு எப்பொழுது வருமோ, என் இஷ்ட தெய்வத்தின் இன்ப தரிசனம் கிட்டாதா என்று காத்திருப்பேன். அவரும் தான் ஆபீஸில் ஓடாக உழைத்து விட்டு சோர்ந்துபோய் வருகிறுர், பாவம். அவர் வந்ததும் சொல்ல வேண்டுமென்று எத்தனையோ விஷயங்களை மனதில் திட்டம் போட்டு வைத்திருப்பேன். ஆனுல், அவருடைய சோர்ந்து சுண்டிப்போன முகத்தைக் கண்டதும் என் துன்ப வேதனையை எல்லாம் அடக்கிக் கொண்டு அவருக்கு சிச்ருஷை செய்து மகிழ்விப்பதில் ஈடுபடுவேன். ஆனுலும், ஒவ்

வொருநாள் என்னையும் மீறி என் துன்பத்தை அவரிடம் கொட்டி அளந்து அவரையும் துன்பத்திற் குள்ளாக்குவேன். என்னத்தைச் செய்ய? பெண் புத்தி பின் புத்திதான். பின்னே யாரிடம் என் கஷ்டத்தைச் சொல்லிகொள்வது? மன்னி! அவர் ரொம்ப நல்லவர். அந்த மட்டில் நான் பாக்கியசாலி!

இந்த மாமியார்கள், மாமியார் என்ற பெயருக்கு ஏன்தான் இந்த மாதிரியான இகழ்ச்சியை கொண்டு வருகிறார்களோ. ஆயிரத்தில் ஒரு மாமியார் நல்லவளாக இருப்பாளோ என்னவோ. ஆனால் என் மாமியாரை விட உன் மாமியார் எவ்வளவோ நல்லவள் மன்னி! அந்தமட்டில் நீ கொடுத்து வைத்தவள் தான்.

என் மாமியாருக்கு என்னை நாட்டுப் பெண்ணாகச் செய்து கொண்டதில் இன்னும் அதிருப்தி தான். அதை ஏன் கேட்கிறாய்! எனக்கு நீங்கள் செய்திருக்கும் சீர் செனத்தி கொஞ்சம் கூடப் போதாதாம். நான் படித்த பெண்ணாம், அதான் வெகு வீம்புக்காரியாக இருக்கிறேனாம். ....இன்னும் எவ்வளவோ சொல்கிறார். இன்றைக்கெல்லாம் உழைத்தாலும் போதாது என்கிறார். ஆனால் வீட்டில் என்ன செய்தாலும் "இந்தா" என்று எனக்கு ஒருவாய் கொடுப்பதைக் காணோம். வாய் அலைகிறது, சுபாவத்திலேயே நான் நொறுக்குத் தீனி தின்பவள் ஆயிற்றே. போதாக்குறைக்கு.....உனக்கும் விஷயம் தெரிந்திருக்கலாம். நீ அவ்வப்பொழுது ஏதாவது பார்ஸல் செய்து அனுப்புகிறாயே. அதைத்தான் பத்திரமாக வைத்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுகிறேன். அவரை ஏதாவது வாங்கி வரச் சொல்லலாம் என்றால் வெட்கம் குறுக்கிடுகிறது. என்னத்தைச் செய்ய? வாய் அலையும்பொழுதெல்லாம் நீ செய்யும் மைசூர்ப்பாகையும், ஜாமூனையும், தயிர் வடையையும் நினைத்துக்கொண்டு சாப்பிடுவதை விட வேறு வழி இல்லை. அங்கே வந்து அம்மாவின் கையால் இரண்டு வாய் சாப்பிட வேண்டுமென்றும், நீ ஆசை ஆசையாகச் செய்து கொடுக்கும் பக்ஷணங்களை மொக்க வேண்டுமென்றும் மனது அலைகிறது. ஆனால், அண்ணா இப்போ என்னை அழைத்துப் போக வந்தாலும் கூட மாமியார் இப்பொழுது என்னை அனுப்பிக் கொடுப்பாரென்று தோன்றவில்லை. எட்டாம் மாதம்தான் அனுப்பப் போவதாக முந்தாநாள் அடுத்தகத்துப் பார்வதி பாட்டியிடம் சொல்லிக் கொண்டிருந்தார் மாமியார். இவரோ "சரோ! இந்த உடம்பில் நீ இப்படி உழைப்பதைக் காணச் சகிக்கவில்லையேடீ. அண்ணாவுக்கு எழுதட்டுமா? பட்டணத்திலாவது இரண்டு மாதம் போய் இருந்தால் உன் உடம்பு கொஞ்சம் தேறும்" என்று மன்றாடுகிறார். ஆனால் இப்பொழுதே பிடித்து நான் அவரை எப்படி விட்டுப் பிரிந்திருப்பேன் மன்னி! 'சுத்த அசட்டுப் பெண்' என்று நீ சிரிக்காதே மன்னி. துன்பத்தில்தான் இன்பம் அதிகம். ஒரே இனிப்புமயமாக இருந்தால் விருந்து ருசிக்குமா? கூடக் கொஞ்சம் புளிப்பு, உப்பு, காரம் எல்லாம் இருந்தால்தானே இனிப்பின் சுவை இன்னும் அதிகமாகச் சோபிக்கும்.

சின்ன மன்னி பிரசவித்து விட்டாளா? குழந்தை பிறந்தவுடன் எனக்குக் கடிதம் எழுத மறந்துவிடாதேயுங்கள். குழந்தை கண்ணன் இப்போ நன்றாக பேசுகிறானா? அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் என் நமஸ்காரத்தைச் சொல். கண்ணனுக்கு என் ஆயிரம் முத்தங்கள். படித்தவுடன் கடிதத்தைக் கிழித்துவிடு. அண்ணாவுக்குக்கூட காட்டாதே. அம்மாவுக்கும் வேண்டாம்.

இப்படிக்கு
உன் அன்பார்ந்த
சரோஜா

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் இன்பமும் துன்பமும் கலந்த அலாதியான உணர்ச்சி வசப்பட்டு அப்படியே அசையாது நெடு நேரம் உட்கார்ந்திருந்தேன். பிறகு இதே கடிதத்தையே என் 'வனிதா' மலருக்கு அனுப்பிவிடக்கூடாது? கடிதம் நல்ல கட்டுரைபோல், படிப்பதற்கு மட்டும் இன்றி பிறருக்குப் புத்திகூறிப் பயன் படும் முறையில் இருக்கிறதே என்று எண்ணி, உடனேயே அனுப்பிவிட்டேன். சரோஜாவைப் போன்ற பெண்கள் மட்டும் இன்றி அவளுடைய மாமியார், நாத்தனார் போன்ற பெண் மணிகளும் படிப்பதனால் எவ்வளவோ பிரயோசனம் உண்டல்லவா?

நாம் எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மன்னர். நமக்குள்ளேயே உயர்வு தாழ்வு வேற்றுமை பாராட்டுவது மடமையாகும்.

'பாரதியார்'

சுக வாழ்வை, ஸ்வர்க்க வாழ்வாக மதிப்பிட்டு தடபுடலாக வர்ணிப்பதை நான் வெறுக்கிறேன். ஏனென்றால் எது சுகம் என்று இன்னும் யாரும் வரையறுக்கவில்லை. அப்படி வரையறுக்கவும் முடியாது. நிலைமை இப்படியிருக்க ஸ்வர்க்க வாழ்வைச் சித்தரிக்க முற்படுவது வெறுக்கப்பட வேண்டியதுதானே?

"ரஸ்ஸல்"

'கண்ணாடி'

மேனாட்டுப் பத்திரிகைகளைப் பிரித்தால் அவற்றிலுள்ள விளம்பரங்களில் பெரும்பாலானவை பெண்மக்களின் தேவைக்குச் சம்பந்த முள்ளவைகளாக இருக்கும். ஏனென்றால் மேனாட்டுப் பெண்மணிகள் தங்கள் முக வசீகரத்திற்காக அரும்பாடு படுகிறார்கள். நம் நாட்டுப் பெண்களுக்கு செயற்கையழகில் மோகமில்லை என்று சொல்ல முடியாது. பண்டையக் காலத்தில் முக வசீகரத்திற்காகத்தானே 'சந்திர சூரியர் கொண்ட தலை சாமான்கள், நத்து, புல்லாக்கு, மூக்குக்கு திருகாணிகள், காதுக்குத் தோடு, ஜிமிக்கி, மாட்டல், ஏனைய நகைகள் போட்டுக் கொள்வதோடு நெற்றிக்கும் விதவிதமான திலகங்களும் இருந்தன. மேனாட்டுப் பெண்கள் தங்கள் புருஷர்களின் கவர்ச்சிக்காக அலங்கரித்துக் கொள்கிறார்கள் என்றால் இந்தக் கட்டுரையைப் படிப்போரும் ஆமோதிப்பீர்கள். ஆனால் நம் பெண்கள் பெரும்பாலும் மற்றப் பெண்கள் நம்மைக் கண்டு பொறாமை கொள்ளட்டுமே என்று அலங்கரித்துக் கொள்கிறார்கள் என்றால் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். உண்மையைத்தானே காட்டுகிறேன். எவ்வளவு பணக்காரப் பெண்கள் இடுப்பில் கட்டப்படாத புடவைகளாகவே அலமாரியில் அடுக்கிவைத்து அழகு பார்க்கிறார்கள்! "இந்திராவின் புடவையைப் பார்த்தியா? அதைப் போல் நானும் ஒன்று வாங்கிக் கொள்ளப் போகிறேன்," ஒரு ஜட்ஜின் மாட்டுப் பெண் கூறுகிறாள். "நேற்று சினிமாவில் ஒரு பெண் லோலாக்குப் போட்டுக் கொண்டிருந்ததே, அதே போலே எனக்கொரு லோலக்கு வாங்கித் தரயாம்மா," என்கிறாள் கடைக்குப் போகும் வழியில் ஒரு பெண். காங்கிரஸ் பார்டர் போட்ட புடவை எந்தக் கடையில் கிடைக்குமென்று கடைகளையெல்லாம் வலைபோட்டுத் தேடுகிறாள் இன்னொருத்தி. இந்தப் பெண்களெல்லாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. பணத்தை அதிகமாக செலவு செய்வதால் முக வசீகரமோ அழகோ வந்துவிடாது. நான் அப்படி ஒன்றும் மேனகை ஊர்வசி இல்லை. என் புருவங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதத்தை மாத்திரம் இந்தக் கட்டுரையில் சொல்லுகிறேன்.

நம் நாட்டுப் புலவர்கள் எல்லோரும் "வில்லினை ஒத்த புருவமுடையவள்" என்று வர்ணிப்

பதைப் படித்திருக்கிறோம். ஒரு சினிமா நட்சத்திரம் புருவங்களை தினந்தோறும் அப்புறப்படுத்தி எழுதுகோலால் விற்போன்ற புருவங்களைத் தீட்டிக்கொள்கிறாள். ஆனால் நான் அப்படி செய்து கொள்வதில்லை. கண்ணிற்கு இட்டுக் கொள்ளும் 'மை'யோ அல்லது அரகஜாவோ நுனி விரலில் எடுத்துக்கொண்டு புருவங்களின்மேல் லேசாகத் தடவி விடுகிறேன். கண்ணிமைகளின்மேல் இருந்த சில நீளமான கேசங்களை நீக்கி விட்டேன். பிறகு விரலால் கொஞ்சம் முகப் பவுடரை மேலிமை மீது லேசாக தடவிக் கொள்கிறேன். நிலக் கண்ணாடிமுன் நின்று கொண்டு என் அழகைப் பார்க்கும்போது எனக்கே பிரமிப்பு ஏற்படுகிறது.

கண்களின் பிரகாசத்தை அதிகப்படுத்த தினந்தோறும் படுக்கு முன் குளிர்ந்த சுத்தமான ஜலத்தில் முகத்தை அமிழ்த்திக் கண்களை மூடித் திறக்க வேண்டும். வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். ஆகாரத்துடன் வெண்ணெய் சேர்த்து வந்தால் முகத்தில் மடிப்புகள் விழுவதில்லை. முகத்திற்குச் சோப்புத் தேய்த்துக் கொள்ளவே கூடாது. அதுவும் இந்தப் பனி நாட்களில் சோப்பை போட்டுத் தேய்த்து விட்டால் 'வற வற' வென்ற சருமம் ஏற்பட்டு விடும். பயறு, கடலைப், பருப்பு, சீயக்காய் கொஞ்சம், நாட்டு வாசனைத் திரவியங்கள் முதலியவைகளை நன்றாக இடித்து சலித்து வைத்துக் கொண்டால் தினம் மூன்று நான்கு தடவைகள் முகம் கழுவிக் கொண்டால் சருமத்தின் வனப்பும் மிருதுத் தன்மையும் ஏற்பட்டு அழகு உண்டாகும்.

அழகுக்கு அழகு செய்வார் யார் என்று பாடின புலவனுக்குத்தான் ஒருவேளை உண்மை அழகுபற்றிய இலக்கணம் தெரிந்திருக்க முடியும். உண்மையான அழகுக்குத் தனியாக அழகுசெய்ய வேண்டுமென்றால் இயற்கைக்கு விரோதமாக வில்லையா? என்ற கேள்வி எழுவதற்கும் இடமேற்படுகிறது.

மனத்தின் பொருள்

[ராஜேந்திரம் இந்திரா]

அமீர் சின்னஞ் சிறு குழந்தை. அவள் தாய்க்கு இவ்வுலகிலே அவள் ஒருவள்தான். தந்தை அவள் கைக் குழந்தையாக இருக்கும்போதே கெட்ட நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார். எனவே அமீரின் தாய் தாரா குழந்தையுடன் பிறந்தகம் வந்து சேர்ந்தாள். பிறந்தகம் வந்த மகளைச் சோதரி அன்புடன் வரவேற்றாள்: தாராவின் தமையன்மார்களும் நொந்த உள்ளத்துடன் வந்திருக்கும் தங்கையை அன்பொழுகப் பேசி ஆறுதல் அளித்தனர். அண்ணிகளுக்கோ தாராவின் வருகை பொருமைத் தீயை வளர்த்துவிட்டது மாதிரி இருந்தது. ஊரார் யாவரும், பணக்காரியல்லவா? என்ன செய்தால் யார் கேட்கப் போகிறார்கள் என்றனர். பெண் வீட்டோடு வந்து விட்டதோடில்லாமல் ஊரார் நிலை தெரியாது அவளைப் பற்றிப் பேசியதுபற்றி மனம் நொந்து பரமனடி சேர்ந்தார் அவள் தந்தை. விதவை சோதரி மகளைப் பற்றி நினைத்துக் கண்ணீர் விடுவதும் மகள் வரும் காலடி யோசை கேட்டால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டுப் புன்னகை புரிவதுமாகக் காலம் கடத்தினாள். தாரா, அமீரை தகப்பன் இல்லாத குறை தெரியாமல் வளர்த்தாள். மாமாமார்களும் அமீரின் அழகையும் புத்தி கூர்மையையும் கண்டு ஆனந்தக் கூத்தாடினர். எல்லோரும் தங்களுடைய அன்பை ஒரே யடியாக ஒரு இளம் குழந்தையின் மேல் வர்ஷிப்பது இயற்கைக்குப் புறம்பானது என்றுதான் போலும் அவளுக்கு அவள் அண்ணிகளின் அன்பை மட்டும் கடவுள் அளிக்கவில்லை.

காலமும் நேரமும் உருண்டோடின. இப்பொழுது அமீர் எழு வயது நிரம்பிய சிறுமி. கண்கள் கரு வண்டுகளை ஒத்தவை. நடையில் ஓர் விதத் துடிப்பு. அவள் நடக்கின்றாளா நர்த்தனம் பயில்கின்றாளா என்பது பிறர் அறிய முடியாத ஓர் வெறும் சிக்கல். யாருடனும் எது பேசுவது எது பேச வேண்டாம் என்ற வித்தியாசமே கிடையாது. சொல்லித் தந்தால் புரிந்துகொள்ளவும் மாட்டாள். அவளுடன் பேச யாருமே ஆசை கொள்ளுவார்கள். கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மனதில் அமிர்த ஊற்றுத் தோண்டுவாள். கைகள் நீண்டு புஜம் இரண்டும் கலைஞன் ஏற்படுத்தியப் பதுமையோ என எண்ணும்படித் திகழ்ந்தாள். பின்னல் நீண்டு இல்லாவிடினும் கட்டை பாய்ந்து குழல் குழலாக இருக்கும். மா நிறம்தான். இருந்தாலும் அவளிடம் யாவரையும் கவரும் தெய்வீகச் சக்தி இருந்தது.

தாரா, அமீரை பக்கத்திலிருக்கும் பள்ளியில் கொண்டுபோய்ச் சேர்த்தாள். அமீர் தினம் மாட்டு வண்டியில்தான் போவாள். அவளுக்கு அம்மாவை விட்டுப் பிரிய இஷ்டமே இல்லாமல் செல்வாள். இருந்தாலும் காலா காலத்தில் கல்வி பயில வேண்டாமா? போகும்போது "அம்மா, சுருக்க

வந்துடறேன்'' என்று மழலை மொழி கொட்டிச் செல்வாள் தாராவும் "சமத்தாப் படிக்க ணும்'' என்று முத்துமாரி மொழிவாள்.

அமீரால் வண்டியில் சும்மாவே போக முடியாது. வண்டிக்கார னைப் பாட்டு ஏதாகிலும் பாடச் சொல்லிக் கேட்பாள். எதற் கெடுத்தாலும் கலீர் கலீர் எனச் சிரித்து விடுவாள். ரஸ்தாவில் போவோரையும் வருவோரையும் கேலி செய்வாள். போகும் வழி யில் புளிய மரங்கள் பல உள. அவற்றை யெல்லாம் பறித்துத் தர வேண்டும் எனப் பிடிவாதம் செய்வாள். பாவம், வண்டிக் கார முனியன் வேறு வழியின்றி வண்டியை நிறுத்தி புளியங்காய் களை அடிக்க ஆரம்பிப்பான். இதற்குள் அமீருக்கு வண்டியை ஓட்டிப் பார்க்கவேண்டும் என்ற புது ஆசை எழும்பும். 'ஹை' என்று அவள் குரல் கொடுக்க மாடுகளும் ஏதோ ரொம்பப் புரிந்து விட்டவைபோல ஜல் ஜல் என்ற சதங்கை ஒலியுடன் கிளம்பிவிடும். புளியம்பழம் அடித்துக் கொண்டிருந்த முனி யன் வண்டி தூரத்தே செல்வ தைப் பார்த்து அலறிப் புடைத் துக் கொண்டு ஓடி வருவான். "என்னம்மா, இப்படி செய்ய றீங்களே பாதையிலே கார்கீர் வந்து வண்டியிலே மோதி எங் காச்சும் அடிபட்டுதன்னு நான் பெரியம்மாவுக்கு என்ன பதில் சொல்லுவேங்க?'' என்பான். ஆனல் அமீரோ கோபித்துக் கொண்டு தன் பெரிய இரு கரு விழிகளின் வழியே கண்ணீரைப் பெருக விடுவாள். அவளைச் சமா தானப் படுத்தி அழைத்துக் கொண்டு போவதற்குள் முனி பாடு திண்டாட்டம்தான்.

பள்ளியில் எல்லாவற்றையும் சீக்கிரமாக கிரகித்துக்கொண்டு விடை பகிர்வாள். வகுப்பில் யாவரும் பதில்சொல்ல முடியாத கேள்விகளுக் கெல்லாம் அமீர் 'உஸ் உஸ்' எனக் கொட்டிக் கொண்டு கையை மேலே உயர்த்தி விடை பகிர முன்னே பாய்ந்து வருவாள். தானே யாவற்றிற்கும் பதில் சொல்லி விட வேண்டும் என்று அவளுக் குத்தான் எத்தனை ஆர்வம்! அமீ ருக்கும் கணக்குக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள சம்பந்தம் தான். வாய்ப்பாடு அவளுக்குச் சுட்டுப்போட்டாலும் வராது. அந்தப் பாழாய்ப் போன வாத்தி யாரும் அவளைத் தவிர வேறு எவரையும் வாய்ப்பாடு கேட்க மாட்டார். அமீர் என்ன செய்வ தென்று தெரியாது முழிப்பாள். வாத்தியாரோ "சரி, இன்னும் பத்து நிமிஷத்திற்குள் ஐந்தாம் வாய்ப்பாட்டிலிருந்து பன்னி ரெண்டாம் வாய்பபாடு வரை முத்துக் கோர்த்ததுபோல் எழுதி காண்பி'' என்பார். அமீருக்குத் தெரிந்தால்தானே எழுதுவாள். இதற்குள் உபாத்தியாயருக்கு அவள் வகுப்பில் இருப்பது கண்ணை உறுத்தும். அவளைச் சிலேட்டையும் பென்ஸிலையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி பக்கத்திலிருக்கும் வேப்ப மரத் தடிக்கு அனுப்பிவிடுவார். ஆனல் அமீரோ வாய்ப்பாடு எழுதாமல் விசித்து விசித்து அழுவாள்.

இதேபோல் அமீர் ஒரு நாள் வேப்ப மரத்தடிக்கு அனுப்பப் பட்டாள். அவள் தன் பழைய ராக ஆலாபனத்தையே நடத்திக் கொண்டிருந்தாள். அந்தச் சம யத்திலும், அப்பொழுது அங்குத் தற்செயலாக தண்ணீர் குடிக்க வந்த கோவிந்த் என்ற பையன்

அமீரைக் காண நேர்ந்தது. அவன் ஐந்தாவது வகுப்பு வாசித்துக் கொண்டிருந்தான். அவன் சின்னஞ் சிறு உள்ளத்திற்கு அமீர் அழுவது என்னவோபோல் இருந்தது. அவன் உடனே அமீரை அணுகி அவள் அழும் காரணத்தைக கேட்டான். அமீரும் தனக்குக் கணக்கில் இருக்கும் மூளையை விஸ்தரித்துச் சொன்னாள். அவளிடம் பரிதாபம் கொண்ட கோவிந்தன் வகுப்பையும் மறந்து அவள் எழுத வேண்டிய வாய்ப்பாட்டையெல்லாம் அழகாக சிலேட்டில் எழுதித் தந்தான். அதைப் பார்த்த அமீர் "கோவிந்த், நேக்கு நீ தினம் மத்தியான வேளைகளில் கணக்குச் சொல்லித் தரயா? நீ ரொம்ப கெட்டிக்காரனாயிருக்கியே!" என்றாள். கோவிந்தும் தினம் மத்தியான வேளைகளில் கணக்குச் சொல்லித் தருவதாகச் சொல்லிச் சென்றான்.

அமீர் சிலேட்டை உபாத்தியாயரிடம் கொடுத்தாள். அவர் அதை மற்ற பிள்ளைகள் யாவரிடமும் காண்பித்து அவர்களும் அவ்விதம் எழுத வேண்டும் என பிரஸங்கித்தார். வாத்தியார் அமீருக்கு இரண்டு சாக்பீஸ்களைக் கொடுத்து அவளைத் தட்டிக் கொடுத்தார். அமீரின் உள்ளம் கோவிந்தை வணங்கியது. அதே சமயத்தில் ஐந்தாம் வகுப்பில் கோவிந்த் தண்ணீர் குடிக்கச்சென்று நேரம் கழித்து வந்ததற்காகப் பெஞ்சியின்மேல் நிறுத்திவைக்கப்பட்டான். ஆனால் கோவிந்த் அதற்காக எவ்வித வருத்தமும் கொள்ளவில்லை. அவன் உள்ளம் அவளுக்குதவி செய்ததால் திருப்தியுற்றது.

முன்பின் பார்க்காத இவ்விரு சிறு உள்ளங்களுக்குத்தான் எவ்வளவு அன்பு? வளர வளர இவ்வன்பும் வளருமா? அப்படியே இவ்வன்பு வளர்ந்தாலும் வழியில் எதிர்ப்படும் கஷ்டங்களை எதிர்க்க முடியுமா? அவ்விதமே தடை செய்யும் எவற்றையும் யாவரையும் எதிர்த்தாலும் இந்த அன்பு வாழ்க்கையில் பரிமளிக்கப் போகிறதா? அப்படியென்றால் சிறு வயதில் ஆரம்பித்த இந்த அன்பு காதலாகவும் இந்தக் காதல் வாழ்க்கையின் திறப்புக் கதவுமாக ஆகிவிடுமா?

தினமும் அமீர் மத்தியான சாப்பாட்டை சுருக்க முடித்துக் கொண்டு வேப்ப மரத்தடியில் சிலேட்டும் பென்ஸிலுமாகக் காத்திருப்பாள். பள்ளியின் பக்கத்திலேயே ஒரு சிறு வீட்டிலிருக்கும் கோவிந்த் அமீர் அதிக நேரம் தனக்காகக் காத்திருப்பதை விரும்பாதவனாகச் சில கிழிந்த புஸ்தகங்களுடன் அவள் எதிரே காட்சி அளிப்பான். ஏழைப் பையன்தானே? புதுப் புஸ்தகத்திற்கு எங்கேபோவான்? ஆனால் கடவுள் அவன் ஏழை என்ற காரணத்திற்காக அவன் அழகில் வஞ்சனை செய்யவில்லை. நல்ல சிவப்பு. வயதிற்குகந்த பருமனும் உயரமும் கொண்ட சிறுவனுக்கு அவ் வழுக்குப் பைஜாமா சந்திரனையும் அதனுள் இருக்கும் சிறு களங்கத்தையும் நினைவு மூட்டும். வாரி விடப்படாத அச் சிறுவனின் கிராப் சுருளாக நெற்றியில் படிந்திருப்பதைக் காணவே அமீருக்கு நேரம் பத்தாது. ஓடிவந்ததினால் கோவிந்தின் இளம் முகத்தில் வியர்வை அரும்புகள் காணப்பட்டன. நெற்றியில் படிந்திருந்த கேசத்தில் தூசியாய் இருந்தது அப் பையனின் சோபையை பன்மடங்கு அதிகரித்தது. அமீர் தன்

பாவாடையால் அவன் முக வியர்வையைத் துடைத்துக்கொண்டே "கோவிந்த் எனக்காகத்தானே இவ்வளவு வேகமா ஓடிவந்தே என்னைக் கோச்சுக்கமாட்டியே" என கெஞ்சினாள். கோவிந்த் இடி இடியெனச் சிரித்துக்கொண்டே "திருடி, கணக்குப் போடாமல் நேரத்தை ஓட்டவா பார்க்கிறாய்?" என்றான். இதைக் கேட்டு அவன் சிரிப்பில் அமீரும் கலந்து கொண்டாள். கோவிந்தின் முயற்சியால் அமீர் கணக்கில் ஊக்கம் செலுத்தத் தொடங்கினாள். எதில் அவளுக்கு மார்க்குகள் வாங்குவது தொல்லையாக இருந்ததோ அதில் இப்போது வகுப்பில் அவளே முதல். சிறுமி அமீர் கடைசியாக நான்காம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பிற்கு மாற்றப்பட்டாள். கோவிந்தின் வெற்றியைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். இருவரும் அவரவர்கள் வெற்றியைச் சொல்லிக்கொள்ளத் துடியாய்த் துடித்தனர். அமீர் கோவிந்தால்தான் தேறியதாகச் சொன்னாள். ஆனால் கோவிந்தோ அவள் படிப்பில் காட்டிய ஊக்கந்தான் அவள் ஜெயத்திற்கும் அவளுடைய நட்புத்தான் தன்னுடைய ஜெயத்திற்கும் காரணம் எனக் கூறினான். அமீர் கோவிந்தைத் தன் அம்மாவிற்குக் காட்ட வேண்டும் என்று தன் வீட்டிற்கு அழைத்தாள். கோவிந்த் உடனே வாடிய முகத்துடன் தான் ஏழையென்றும் தான் அவளுடன் வந்திருப்பதாக அவள் அம்மா அறிந்தால் இருவரையும் திட்டுவார்கள் என்றும் கூறினான். ஆனால் குழந்தை அமீரோ அவன் வராவிடில் தானும் ஏழையாகி விடுவதாகச் சொன்னாள். வேறு வழியின்றி கோவிந்த் அன்று சாயந்திரம் அவளுடன் வருவதாகவும் அவளை ரோடிலிருந்து பின் பற்றுவதாகவும் சொன்னான்.

சாயங்காலம் எப்போது வரப் போகிறது என அமீர் துடியாய்த் துடித்தாள். பள்ளிக்கூட கடைசி மணியும் அடித்தது. அமீர் துள்ளி ஓடி வண்டிக்காரனிடம் வண்டியைக் கட்ட உத்திரவிட்டாள். வண்டியில் ஏறிய அமீருக்கோ ரோடு வருவதற்குள் இருப்புக் கொள்ளவில்லை. ரோட்டும் வந்தது. எங்கிருந்தோ கோவிந்த் சக்கரம் விட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான்.

இளந் தென்றல், மாலை நேரம், பட்சிகளெல்லாம் அவைகள் கூட்டிற்குத் திரும்புகின்றன. எல்லா விதமானத் தொழிலாளிகளும் தங்கள் வேலைகளை முடித்துக்கொள்ளும் நேரம். யாவரும் தங்கள் வீட்டிற்குத் திரும்ப ஆவல் கொள்ளும் நேரம். அப்படிப்பட்ட சமயத்தைச் சிறுமி அமீரும் எதிர் பார்த்து அந்த நேரம் வந்தவுடன் வீட்டிற்கு வரத் தவிப்பாள். அதுவும் இன்று கோவிந்த் வேறு வருகிறான் அல்லவா? வழி முழுவதும் ஒரே சிரிப்பும் பேச்சும்தான். தாரா சாயங்கால டிபனுக்காக அமீருக்கு வண்டியில் லாடு அனுப்பித்திருந்தாள். அதை அவள் கோவிந்திற்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டாள். பின்னர் கோவிந்த் ஒரு பாட்டுப்பாட அமீர் அழகாக ஒத்துத் தாளம் போட்டாள். பின்னர் வீடும் வந்து சேர்ந்தாள்.

தாரா, அமீருக்காக வாசலிலேயே நின்றுகொண்டிருந்தாள். அமீர் வண்டியிலிருந்து கீழே இறங்கி - கோவிந்தை அம்மாவிடம் காட்டி "அம்மா, இவன்தான்மா கோவிந்த் நன்ன

கணக்குச் சொல்லித் தருவான்'' என்றான். தாரா, கஷ்டம் அன்பவித்தவளாகையால் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி கோவிந்தை அன்பாக விசாரித்தாள். கோவிந்த் இந்தப் பிரபஞ்சத்தில் தன்னைப்போன்ற ஏழைகளை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்களா என மலைத்து நின்றான். அமீருக்கோ தலை கால் புரியவில்லை. காப்பி கொடுப்பதும் அவன் தனக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்ததுபற்றி அம்மாவிடம் பெருமைப் படுவதுமாக ஆனந்தக் கூத்தாடினாள். போகும் நேரம் வந்தது கோவிந்திற்கு. அமீருக்கு அவனைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டால் தேவலைபோல் இருந்தது. தாராவுக்குக்கூட அந்தப் பையன் போகும்போது அழுகையாக இருந்தது. அப் பையனின் புன்னகை ததும்பும் இளம் முகம் தாராவை ஸ்தம்பிக்கச் செய்தது என்றால் அமீரை அந்தத் திருட்டுச் சிரிப்பு எவ்வளவு தூரம் படுத்திருக்க வேண்டும்? அவனை வீட்டுக்கு அனுப்பும்போது அமீர் தினம் இன்றுபோலவே வீட்டுப் பக்கத்திலிருக்கும் பாலம் வரை தன்னைக் கொண்டுவந்து விட்டுப் போக வேண்டுமென்றும் அவன் வருவது அவளுக்குப் பொழுது போக்காக இருப்பதாகவும் கூறினாள். கோவிந்தும் அதற்குச் சம்மதித்தான்.

இந்தச் சம்பவத்திலிருந்து மாலை பள்ளி விட்டவுடன் தன் சக்கரத்தை எடுத்துக்கொண்டே அமீரின் வண்டியைத் தொடர்வதே கோவிந்தின் பழக்கமாகிவிட்டது. அப்பொழுதெல்லாம் கோவிந்த் அழகாக ஏதேனும் ஹிந்திப் பாட்டுகளைப் பாடுவான் அமீரும் அதைக் கேட்டு மகிழ்வாள். கோவிந்த் தன்னைக் குழலுக்கும் அதினின்று வரும் நாதத்திற்கும் ஒப்பிட்டுப் பாடுவான். இன்னும் இதைப்போல் எத்தனையோ. இதைப் பார்த்து அமீரும் தானாகப் பல பாட்டுக்கள் அவன் மேல் கட்டி அவனுடன் போட்டியிடுவாள். இவ்விதமாக அவர்களுக்குள் ஒருவர் மேல் ஒருவர் பாட்டுக் கட்டி போட்டி இடுவது வழக்கமாகிவிட்டது. கடைசியாகப் பாவம் இருவரும் பிரியமாட்டாமல் பிரிவார்கள்; அதுவும் அமீர் அடக்க முடியாது விம்மி அழுவாள். அதற்கு கோவிந்த் சமாதானம் சொல்லிவிட்டு மறுபடியும் சக்கரத்தை விட்டுக் கொண்டே சென்று விடுவான். அவன் தலை மறையுமட்டும் அவனையே பார்த்துவிட்டு எதையோ இழந்தவள் மாதிரி வீடு வந்து சேருவாள். குழந்தையானாலும் அவள் யாருடனும் விளையாட மாட்டாள். தாயாரிடம் கூட கொஞ்சிப் பேச அவளுக்கு இப்போதெல்லாம் நேரம் இருப்பதில்லை. படிக்க வேண்டும் என ஏதாவது பொய் சாக்குகள் சொல்லி எப்போதும் தனிமையையே விரும்புவாள். கோவிந்தைப் பற்றிய நினைவுகளில் பல இரவுகளை நழுவ விடுவாள். அவள் பெருமைப்படும் விஷயம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் உள்ளன்புடன் தினம் சாயங்கால வேலைகளில் நேரம் வீணாவதையோ கால் வலியையோ பாராட்டாது கோவிந்த் அவள் வண்டியைப் பின் பற்றுவது.

கோவிந்திற்கு அமீர் இல்லாவிடில் உயிரே இல்லை. அவளைப் பற்றிய கற்பனையில் உலகத்தையே மறந்து விடுவான்,

அவளைப் பற்றிய நினைப்பில்தான் அச் சிறுவனுக்கு அலுப்பேது. சலிப்பேது. லாடுதந்து மயக்கியவளல்லவா! அவ் விளஞ் சிறுவனுக்கு அமீரைச் சாயங் கால வேளைகளில் தொடர்வதில் ஓர் தனி ஆனந்தம். அவளைப் பற்றியப் பாட்டுக்கள் கட்டும் போது கற்பனைகளையும் தாண்ட முயற்சிப்பான். ஆனால் சிறுவனான அவனுக்கு அது சாத்தியமா?

கோவிந்த் விடும் சக்கரத்தில் மாதங்களும் வருஷங்களும் உருண்டோடின. அமீர் முன் போல் சிறுமியல்ல. இயற்கைத் தேவியால் அப்பொழுது அவள் மனப் பூர்வமாக ஆலிங்கனம் செய்யப்பட்டிருந்தாள், ஆனால் இயற்கையின் விளையாட்டில் தூய அன்பில் எவ்வித களங்கமும் ஏற்படவில்லை, இளம் பிராயத்தில் ஊன்றப்பட்ட அன்பு விதை பெரியவர்களானதும் காதல் மரமாக வளர்ந்தது. அவர்களுக்குத் தான் எவ்வளவு உறுதியான அன்பு!

இப்பொழுதெல்லாம் கோவிந்த் அமீரைப் பின்பற்ற முடிவதில்லை. பாடத் தொல்லைகள் வேறு. இருந்தபோதிலும் அவனுக்கு வரத்தான் ஆசை. ஆனால் ஊர் வாயை மூடுவது சாத்தியமா? அமீருக்கோ அவனைக் காணாது உள்ளமும் உடம்பும் பதறும். ஆனால் அவனைக் காண்பது எவ்விதம்? அவனோ இப்போது காலேஜ் படிக்கின்றான். பள்ளியை விட்டு அகன்ற அவனை ஒரு வருடமாக அமீர் பார்க்கவில்லை. அவன்தான் என்ன செய்வான்? மாலை ஏழு மணி வண்டியில் திரும்பும் அவள் முன் போல் தன் இதய ராணியை அந்த ரோடில் சந்திக்க முடியுமா? அமீரின் உள்ளத்தை வேதனை அழுத்தியது. கஷ்டமே அறியாத அவ்விளம் மடந்தைக்கு அவன் பிரிவு தவிப்பை அளித்தது. வாழ்க்கையில் சூன்யம் இருப்பதை அறிந்தாள். மனச் சாந்தியை இழந்தாள். கடைசியில் தன்னையே வெறுத்தாள். அவள் சிந்தனையெல்லாம் கோவிந்தைக் காண்பதெவ்விதம் என்பதே.

அமீரின் உள்ளப் பிரதிபலிப்போ என ஒரு நாள் கோவிந்த் சைகிளில் முன்பெல்லாம் சந்தித்து விளையாடிய அதே இடத்திற்கு வந்தாள். அமீர் ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள். கோவிந்த் செயலற்று நின்றான். பல நாட்கள் பிரிந்து கூடியவர்களல்லவா! தங்கள் பிரிவின் துன்பத்தைப் பற்றி இன்னும் பற்பல விஷயங்களைப் பற்றியும் நேரம் போவதே தெரியாமல் பேசினார்கள். பிரிந்தவர் கூடினால் பேச்சிற்களவுண்டோ! அமீர் அவன் முகத்தருகே தன் முகத்தை வைத்து "அப்பா! உமக்குத்தான் எவ்வளவு அழுத்தம் உங்கள் கண்களில் என் உள்ளத்தை வைத்துக் கொண்டு அப்புறம் ஒரு பார்வை கூட பார்க்க மாட்டேனென்கிறீரே?" என்றாள். கோவிந்த் லேசாகச் சிரித்தான். 'அமீர் உனக்கு இவ்வளவு வயதாகியும் உன் குழந்தைத்தனம் மட்டும் இன்னும் உன்னை விட்டபாடில்லையே. நான் ரோடில் சந்திப்பது சாத்தியமா? எப்போதாவது யாராவது பார்த்துவிட்டால் நம் கதி என்னாவது, உலகம் நாளைக்கு வாய்க்கு வந்ததை உளறுமே! சமூகம் ஏழையின் அன்பை ஏற்குமா? எனக்கூறினான். அமீர் நெருப்பை

விதித்தவள் போல் தள்ளி தன் முகத்தை அவனுடையதிலிருந்து எடுத்துக் கொண்டாள். சற்று முன் இருந்த ஆர்வமெல்லாம் எங்கோ மறைந்தது. அவளுக்கு அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தை ஹ்ருதயத்தையே ஆயிரமாயிரம் பாணங்கள் கொண்டு துளைப்பது போன்றிருந்தது. பேசாமலேயே விடுவிடென்று வண்டியில் ஏறிக் கொண்டாள். கோவிந்த் தான் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் எதையோ உளறி அவள் மனதைப் புண்படுத்தியதைப் பற்றி தன்னையே நொந்து கொண்டான். அவள் அழுது கொண்டே போனது அவனுக்கு வேதனையை அளித்தது. ஒடிந்த மனதுடன் வீடு திரும்பினான்.

அமீர் வீட்டிற்குச் சென்று கட்டிலில் போய் தொப்பென்று விழுந்தாள். தாரா என்ன கேட்டும் ஒன்றுமே சொல்லவில்லை. இரவு சாப்பிடவும் இல்லை. நித்ரா தேவி அவளை அணைக்க மறுத்தாள். அவள் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

அறிவிற்கும் ஆத்மாவிற்கும் வெகுநேரம் நடந்த விவாதத்தில் மூளை குழம்பியதே அன்றி நிரந்தரமான பதில் ஒன்றும் கிட்டவில்லை. அவளுடைய காதல் உள்ளம் சமூகத்தைச் சபித்தது. ஏழை என்ற காரணத்திற்காகவா அவள் பிரேமையை, தூய அன்பை நிராகரிக்க வேண்டும். என்ன கொடுமை! அவர்களும் மாந்தர்தானே? அவர்களுக்கு மட்டும் இதயம் என்பதே கிடையாதா? காதல் என்ற புனித வாக்கியம் அவர்களுக்காகச் சிதைக்கப்பட வேண்டுமா?

“பின் சமூகம்? தாய், கடமை?”

“தாயார் பலவிதத்திலும் கஷ்டப்பட்டவள். சமூகத்தை எதிர்த்தால் தாய்க்குத்தான் பலத்த காயம் ஏற்படும். அக்காயம் கடமை தவறியதற்கு அறிகுறியாகும். பத்து மாதங்கள் சுமந்து பெற்றவளல்லவா?”

“அப்படியானால் உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்”

இவ்வெண்ணம் ஹ்ருதயத்தை சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது.

“கடவுள் கொடுத்த அந்தப் புனித ஆத்மாவை நாமே சித்ரவதை செய்து கொள்வதா? நமக்கு அதன் மேல் என்ன உரிமை? கோழையல்லவா அவற்றையெல்லாம் யோசிக்க வேண்டும். அப்படியே நான் இறந்தாலும் அதுவும் என் தாய்க்குச் செய்ய வேண்டிய கடமை தவறியதாகும்.”

அமீர் தலை சுழன்றது. கடமையும் காதலும் மாறி மாறித் தோன்றி மறைந்தன. எவ்விதமான முடிவிற்கும் வர முடியவில்லை. இரண்டும் இன்றியமையாதது. எதை அவள் நிலை நாட்டுவாள்? இவ்வித குழப்பங்களுக்கிடையே பொழுது விடியாமலா இருக்கும்.

மறுநாள் தினம் போலவே அமீர் பள்ளி சென்றாள். கோவிந்தை அன்றும் காண முடியவில்லை. இன்னும் நான்கு நாட்களில் அமீருக்கு மட்டும் பரீக்ஷை. (S. S. L. C) பின்னர் அவள் படிப்பது நிச்சயமில்லை. அந்த நான்கு நாட்களில் கோவிந்தைச் சந்தித்தால் தான் உண்டு. ஆனால் கோவிந்தோ பிறர் பணத்தில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவனும் எவ்விதமேனும் அமீரைக்காண

ஆவல் கொண்டிருந்தான். ஆனல் நேரம், சமயம், சந்தர்ப்பம்?

இதற்கிடையில் அமீர் இளம் வயதிலேயே அழகாகக் கல்யாணம் செய்யப்பட வேண்டுமென தாரா துடித்தாள். பொருமைக்கார அண்ணிகளோ எங்கே தங்கள் பிள்ளைக்குக் கொடுத்து விடுவார்களோ எனப்பயந்து அவளுடைய கல்யாண விஷயத்தை வற்புறுத்தினர். மாமாக்களும் அமீர் சந்தோஷமாக ஒருவனுடன் குடித்தனம் செய்து குழந்தை குட்டிகளுடன் சுகமாக இருக்க வேண்டும் என விரும்பினர்கள். ஆனல் அமீர் உள்ளமோ......?

அமீர் அல்லும் பகலும் கடவுளைத் தியானித்த வண்ணம் இருந்தாள். பேதை அவளால் என்ன செய்ய முடியும்? பரீட்சையும் வந்தது. அதை ஒவ்வொருவிதமாக எழுதி முடித்தாள். கடைசீ நாள். மாணவ மாணவிகள் யாவரும் ஒருவருக்கொருவர் பிரிவுபசாரங்கள் செய்து கொண்டனர், ஆனல் அமீரின் உள்ளமோ தத்தளித்துக் கொண்டிருந்தது. இன்று அவள் அன்பனைக் காணவிடில் பின் என்றுதான் காணப்போகிருள்? அவனே காலேஜ் சென்றிருந்தான். கோவிந்திற்கும் இன்றுதான் கடைசீயாக அமீர் பள்ளிக்கூடம் வருவாள் எனத் தெரியும். எனவே மத்தியானமே கல்லூரியை விட்டு வந்து விட்டான்.

அதே சாயங்கால வேளைதான். கொஞ்சம் இருட்டிக்கூட விட்டது. முன்பெல்லாம் எங்கு அவர்கள் இன்பக்கதைகள் பேசி மகிழ்ந்தனரோ அதே இடத்தில் தான் இப்போதும் சந்தித்தனர். அமீர் அடையாளமே தெரியாது இளைத்துத் துரும்பாயிருந்தாள். கோவிந்திற்கு அமீரைப் பார்க்கப் பார்க்கத் துக்கம் தொண்டையை அடைத்தது. அமீர் பெரும் விம்மல்களுக்கிடையே "ஸ்வாமி, நீங்கள் பெரும் தீர்க்கதரிசி. எனக்காக கலியாணப் பிரயத்தினங்கள் நடக்கின்றன, சமூகத்திற்கு பலி ஆடு நான்" என்ருள்.

இதை கோவிந்த் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. அவள் சொன்னவுடன் தன் வாழ்வின் தந்தி அறுந்துவிட்டதை உணர்ந்தான். கனவில்கூட அவன் அமீரை விட்டுப் பிரிந்தானில்லை. அவனுக்கு அவள்தான் பிரபஞ்சம். அவளுக்கு அவன்தான் ஜீவிய லக்ஷ்யம். நீண்ட மௌனம் தான் நிலவியது.

'கோவிந்த்'

'அமீர்'

கோவிந்த் அமீரை லேசாக அணைத்திருந்தான். நிலா பட்டுப் போல் காய்ந்தது. கோவிந்தன் இதழை அவளுடன் இசைத்து அமுதம் அருந்தினன். அமீர் அவ்வளவு வேதனையிலும் இன்பக் களிப்பெய்தினள். மறுபடியும் அவன் பேசத்தொடங்கினன் "அமீர், கண்ணே, நம் உடலை பிரிக்கலாம். ஆனல் உயிர் நமக்கு என்றும் ஒன்றே. நீயே நான். நானே நீ. நான் யாழ், நீ இசை. என்னை மீட்டினல் நீ. உண்மைக்காதல் என்றும் நிலைத்திருக்கும். மறு ஜன்மத்திலாவது நாம் வாழ்க்கைப் படகை அமைதியாக நடத்துவோம்" என்ருன். மேலே புளிய மரத்திலிருந்து புளியம் பிஞ்சுகள் விழுந்தன. எங்கோ ஒரு ரேடியோ" 'காதலடி நீ யெனக்குகாந்தனடிநானுனக்கு' என்ற பாட்டை அலறியது.

விதியின் விளையாட்டில் அமீர் வேறு ஒருவனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டாள். விளையாட்டைப்போல பல மாதங்கள் வந்து மறைந்தன. தீபாவளி சுப தினமும் வந்தது. யாவரும் குதித்து விளையாடி மகிழ்ந்தனர். ஆனல் அமீரோ தான் பால்யத்தில் கோவிந்துடன் கழித்த தீபாவளிகளையும், பழைய இன்ப நாட்களையும் நினைந்துருகினள். சிறுமிகள் யாவரும் வீதியில் "மத்தாப் பூவாணம் கொளுத்தி இருட்டை அகற்றுங்கள் பயங்கா" என்ற பாட்டை பாடினர்.

ஆனல் எந்த மத்தாப்பூவைக் கொளுத்தி அமீரின் மன இருளை போக்க முடியுமோ அந்த மத்தாப்பூதான் முன்பே அவிந்து விட்டதே!

✲

புத்தக விமர்சனம்

கதை மலர்: ஆசிரியர் "ரூவி" விலாசம் 94, அரண்மனைக்காரன் தெரு. சென்னை 1. தனிப்பிரதி விலை அணு 8. வருஷ சந்தா ரூ. 6-00.

ஆசிரியர் 'ரூவி' தமிழ் நாட்டின் சிறந்த சிறு கதை ஆசிரியர்களில் ஒருவர் என்று நெடு நாட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட விஷயம். அவருடைய சொந்த பத்திரிகை—கதை மலர் அற்புதமான சிறு கதைகளைக் கொண்ட இந்தப் பத்திரிகையின் முதல் இதழில் 'ரூவி'யின் புஷ்பபாணம்—ஏற்கனவே பலர் படித்து இன்புற்ற தானுலும், இன்னும் படிக்கப் படிக்க ருசிக்கச் செய்யும் சிறந்த கற்பனைச் சித்திரமாகும். தாகூரின் சுபா, மப்பஸானின் கதை, இன்னும் சில சின்னஞ் சிறு கதைகள் பல இவ் விதழில் இடம் பெற்றுள்ளன.

முன்னர் பரிசு பெற்றப் 'ஊமைச்சியின் காதல்' போன்ற பல உன்னதமான சிறு கதைகளை ஆசிரியர் 'ரூவி' வரும் கதை மலர்கள் மூலம் தமிழ் நாட்டினருக்கு அளிப்பார் என்பதையம் எதிர்பார்க்கலாம். நல்ல கதைகள் தமிழினில் இல்லையே என்ற குறை நம்மிடையே நெடு நாளாக இருக்கிற தல்லவா? அக் குறையைக் 'கதை மலர்' மூலம் தீர்க்க முடியும் என்று நாம் நம்புகிருேம்.

✲

பள்ளிக்கூடங்களுக்கு ஒரு யோசனை

'பெண்மணி'

"பெண்டிர்க் கழகு உண்டி சுருங்குதல்" என்று ஏதோ ஒரு புத்தகத்தில் என் சிறு வயதில் படித்ததாக ஞாபகம். அப்பொழுது ரேஷன் கிடையாது. காலையில் பழையதுடன் ஏதாவது பலகாரம் கிடைக்கும். பகல் சாப்பாடு நிறைய நெய் தயிரோடு சாயங்காலம் பற்களுக்கு உற்சாகமான வரவேற்பு. ஏழு எட்டு மணிக்கெல்லாம் இராச் சாப்பாடு. படுக்குமுன் சிவக்கக் காய்ச்சிய பால்—அந்த சமயத்தில் 'பெண்டிர்க் கழகு உண்டி சுருங்குதல்' என்று படிக்க நேர்ந்ததை இப்பொழுது நினைத்தால் ஏதோ ஒரு ஹாஸ்யத் துணுக்கைப் படிப்பது போன்ற உணர்ச்சி உண்டாகிறது.

மகாத்மா காந்தியடிகள் உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்க வாரத்தில் அல்லது மாதத்தில் ஒரு நாளாவது உபவாசம் இருக்கச் சொல்லி யோசனை கூறினர். சஷ்டி, ஏகாதசி, கிருத்திகை, சனிக்கிழமை என்று புண்ணிய தினங்கள் ஒன்றோடொன்று போட்டி யிட்டுக் கொண்டு நம்மை உபவாசம் இருக்கத் தூண்டுகின்றன.

எல்லாப் பொருள்களும் விசேஷமாகக் கிடைத்துக் கொண்டிருந்த பொழுது உபவாசம் இருப்பது மிகமிக எளிதாக இருந்தது. என் தாயார் பதினொன்றும் பிராயத்தி லிருந்தே கிருத்திகைப் பட்டினி இருக்க ஆரம்பித்தாளாம். காமு அத்தை பத்து வயதி லிருந்தே சனிக்கிழமை 'ஒருபொழுதை' 'வேண்டுதல்' காரணமாக மேற்கொண்டாளாம். அதே விரதங்கள் தமது கவர்ச்சியை உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதாயிருக்கும் இக் காலத்தில் இழந்து விட்டது என்ன துர்ப்பாக்கியம்? டாக்டர் அகிலாபாய் "அதுதான் என் பாக்கியம்" என்கிறுள்.

உபவாசத்தின் மகிமை இருந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். எந்த அனுபவமும் அனுபவித்துப்பார்த்தால்தான் தெரியும். கற்கண்டைச் சுவைத்துப் பார்த்தால்தானே அதன் இனிப்பு தெரியும். உபவாசம் இருந்தால் மனம் தெளிவாகிறது. நிம்மதியடைகிறது. உடம்பின் எந்த பாகத்திலாவது ஏதாவது நோய் இருந்தால் அதுஉடனே அகலும். உடம்பு லேசாகவும் சுறுசுறுப்பாகவும் ஆகிறது.

இவ்வாறு உபவாசத்தின் மகிமையைக் குறித்து அத்தியாயம் அத்தியாயமாக வரைந்து தள்ளலாம். ஆனல் தற்காலத்தில் நவநாகரிக யுவதிகள் 'அழகு' என்கிற தவருன எண்ணத்தில் தமது தேகத்தை அலங்கோலப் படுத்திக் கொள்கிறதை நினைத்தால் வயிறு 'பகீர்' என்கிறது. மெலிந்த உடல் அழகுதான். அதற்காக சரியானபடி ஆகாரம் உட்கொள்ளாமல் தினசரி காப்பியை மாத்திரம் பலகாரமாக வைத்துக் கொண்டு உபவாசம் அனுஷ்டித்து வருவதால் உடல் நலம் கெட்டு இளமையிலேயே முதுமையின் பூர்ண அனுபவத்தையும் அடையும் யுவதி மணிகளைக் கண்டால் மனம் வெதும்புகிறது. குழிந்த கன்னம், மேல் நோக்கிய தாடை எலும்புகள், வெளிறிட்ட பார்வை. இரத்த சோபையற்ற வதனம், சுருங்கி

உலர்ந்த சருமம், நரைத்த கேசங்கள், இவைகளா அழகு! இடையைச் சிறுக்க எண்ணி பாவாடை நாடாவை மிகவும் இறுக்கிக் கட்டிக் கொண்டு குடலில் ஆகாரம் சரிவர சலனம் பெறாமல் தடுப்பதால் பல குடல் நோய்களும் கர்ப்பாசயம் நசுங்கி வளர இடம் கிடைக்காததால் சூதக நோய்களும் ஏற்பட்டு எப்பொழுதும் உற்சாகமற்ற கடுகடுப்புள்ள முகம். பதினாறும் வயதிற்குள்ளேயே பெற்றுவிடும் பெண்களைக் குறித்துப் பரிதாபமடையமாலிருக்க முடியுமா?

நமது பெண்கள் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயினிகள் பாடங்களில் தேர்ச்சியைப் பெரிதாக எண்ணுகிறார்களே தவிர பெண்களின் உடல் வளத்தை முக்கியமாகக் கருதவ தில்லை. சுவற்றை வைத்துக் கொண்டு தானே சித்திரம் வரையவேண்டும். அந்த சுவர் பழுதடைந்து விட்டால் சித்திரக்காரனுக்கு என்ன வேலையிருக்கிறது "என் வகுப்பில் எல்லாப் பெண்களும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறிவிட்டார்கள். அவர்களில் பாதிக்கு மேல் நூற்றுக்கு எண்பது மார்க்குகள் பெற்றிருக்கிறார்கள்." என்று மிஸ் நீலாம்பரம் பெருமை கொள்கிறாள். அதோடு "என் வகுப்பிலிருக்கும் பெண்கள் எல்லோரும் நல்ல தேக சுகத்தோடு இருக்கிறார்கள். நானே அவர்கள் இடைகளை மிகவும் இறுக்கி ஆடை யணியாமலும், வெளிப் பகட்டுக்கு ஆசைப்பட்டு முகத்திற்கு மாவு பூசி வியர்வை வெளி வாராமல் தடுத்து பருக் கட்டிகள் ஏற்பட ஏது உண்டாக்கிக் கொள்ளாமலும் பார்க்கிறேன். என் வகுப்பிலுள்ள பெண்களுக்கு என்னிடம் அபார நம்பிக்கை உண்டு. தனக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் என்னிடம் தாராளமாக யோசனை கேட்க வருகிறார்கள். அவர்களுடைய 'சொந்த சுகாதாரத்திற்கு' நானே வழி காட்டியாக இருக்கிறேன் என்னிடம் படிக்கும் பெண்கள் உத்தமத் தாய்மார்களாக தேசத்திற்குத் தொண்டாற்றுவார்கள்" என்றும் சொல்ல நேர்ந்தால் அன்றுதான் நாமடைந்த சுதந்திரம் நமக்குப் பயனளிக்கக் கூடியதாகும்.

இன்றையப் பெண் நாளைய தாய். அவள் தேச சுதந்திரத்தைக் காக்க உதிக்கும் தீரர்களுக்கு உடல் வலிமையும் மனோவலிமையும் ஊட்ட வேண்டியவள். அவள் இரத்தத்தில்தான் நமது சுதந்திர புருஷர்கள் வளர வேண்டியிருக்கிறது. ஆகவே தன் உறுப்புகளைச் சரிவர வளர விடாமல் தடுக்கும் இளம் பெண் தேசத்திற்குப் பெருத்த தீங்கு இயற்றுகிறாள் என்பது திண்ணம்.

பள்ளிக்கூடங்களில் வருஷத்திற்கு இரு முறை வைத்தியர்களால் குழந்தைகள் பரிசோதிக்கப்படுகிறார்கள். அந்த வைத்தியர்கள், பற்கள், கண்கள், முதலிய அவயவங்களின் பரிசோதனையோடு நின்றுவிடாமல், பெண்கள் தமது உடல் வளர்ச்சியைத் தடை செய்யும் வண்ணம் ஆடை யணிந்திருந்தால் அதைக் குறித்துக் குறிப்பெழுதி அடுத்த பரிசோதனையின்போது குறை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். இதனால் நமது பிரசவ ஆஸ்பத்திரிகளில் நேரும் இளம் தாய் மரண விகிதம் மிகக் குறைத்து விடும்.

ராஜகுமாரன் கருணாகரன்

காமு

எச்சுமுப் பாட்டிக்கு அன்று சின்னப் பேரன் சங்கரன் கொடுத்த தொந்தரவுக்கு அளவேயில்லை. நான் சாப்பிடமாட்டேன்! கதை சொல்லு! பள்ளிக் கூடம் போக மாட்டேன்! கதை சொல்லு! தூங்கமாட்டேன்! கதைசொல்லு' என்று அடிக்கடி தொந்தரவு செய்தான். பாட்டிக்கு அப்பாடா! என்று உட்காரக்கூட நேரமில்லை. எப்படிப் பொறுமையாகக் கதை சொல்ல முடியும்? கடைசியில் ஒரு வழியாக ராத்திரிதான் சங்கரனுக்குக் கதை சொல்லப் பாட்டிக்கு ஓய்வு கிடைத்தது. ரொம்ப நீளமான கதை.

ரங்கன் கேட்ட கதையைத் தான் நான் உங்களுக்கு இப்போது சொல்லப் போகிறேன்.

"ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் சித்திராபுரம் என்ற ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு மூன்று பையன்கள். திடீரென்று எதிர்பாராத விதமாக அந்த ராஜாவுக்கு ஏதோ ஒருகடுமையான வியாதி வந்துவிட்டது. எத்தனையோ வைத்தியர்கள் முயற்சித்தும் பயனில்லை. எனவே ராஜா பிழைப்பதே துர்லபம் என்று எல்லோரும் முடிவுசெய்து விட்டார்கள். ராஜாவின் குழந்தைகளான மூவரும் அப்பா இறந்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்து ரொம்ப வருந்தினார்கள். அழுது புலம்பினார்கள்.

அவர்கள் அப்படித் தவித்துப் புலம்புவது கண்டு பரிதாபங்கொண்ட ஒரு பெரியவர் "குழந்தைகளே நீங்கள் கவலைப்பட்டு என்ன பயன்? உங்கள் தந்தை பிழைக்க வேண்டுமானால் ஒரே ஒரு மருந்தால்தான் முடியும். அதாவது வடக்கே 'கொல்லி மலை' இருக்கிறது. அந்த மலையில் உள்ள ஒரு குகையிலே ஒரு சஞ்சீவி இருக்கிறது. அதைக் கொண்டுவந்து உங்கள் தந்தைக்குக் கொடுத்தால் உயிர் பிழைப்பார். ஆனால் அம் மகா சஞ்சீவியைக் கொண்டு வருவது மிகவும் சிரமமான காரியம். அங்கு எவராலும் போக முடி

யாது. இதுவரை அங்கு போன இரண்டொருவர் திரும்பியே வரவில்லை. ஆகவே விதிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட்டு வருந்தாமலிருங்கள்'' என்று உபதேசம் செய்தார் அவர். ஆனால் அந்த மூன்று பையன்களும் முறையே பதினெட்டு, இருபது, இருபத்திரண்டு வயதான இளம் வாலிபர்கள். ஆதலால் மூவரும் விதிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட விரும்பாமல் அதைக் கொண்டு வருவதில் என்ன கஷ்டம்? என்று கேட்டார்கள்.

அந்தப் பெரியவர் பின்வருமாறு சொன்னார். இங்கிருந்து பல மலைகளைக் கடந்து செல்ல வேண்டும். காட்டாறுகள் தாண்ட வேண்டும். மலைக் குகைக்குக் காவலாயிருக்கும் சித்திரக் குள்ளன் ஒருவன் மிரட்டுவான். ஏன்? எங்கே? எதற்காகப் போகிறாய்? என்று கேட்பான். பொறுமையுடன், விநயமாகப் பதில் தந்தால்தான் அவன் மிரட்டல் குறையும். அப்புறம் குகை வாயிலில் காவல் காக்கும் பூதங்கள் 'சத்தியமும் சீலமும், தன்னடக்கமும் உள்ளவரைத்தான் உள்ளே விடுவேன் என்று எச்சரிக்கும். குகைக்குள்ளே 'மோகினி'யும் உண்டு. இவ்வளவு தடைகளையும் மீறி வந்துவிட்டவர்களை 'மோகினி' சஞ்சீவி மருந்தை மறக்கச் செய்யப் பல தந்திரங்களைச் செய்வாளாம். அவளையும் வென்றுவிட்டால்தான் 'சஞ்சீவி' கிடைக்கும். பிறகு அந்த 'மோகினி'யும் சஞ்சீவியைக் கண்டு பிடிப்போருக்கு அடிமையாவாள். ஆனால் இதெல்லாம் 'சஞ்சீவி' கிடைத்த பிறகுதானே? என்று பெரியவர் சொல்லிவிட்டார். மூன்று ராஜகுமாரர்களுக்கும் இதைக் கேட்டதும் கொஞ்சம் கவலையாகத்தானிருந்தது. இருந்தாலும் ராஜா பிழைக்க வேறு வழியில்லையல்லவா? ஆதலால்மூத்தவன் 'நான் போய் எப்படியாவது சஞ்சீவியைக் கொண்டுவந்து விடுகிறேன்,' என்று உறுதி கூறிவிட்டு புறப்பட்டான். மற்ற இருவரும் துணைக்கு வருகிறோம் என்று சொல்லியும் 'அப்பாவுக்குத் துணையாயிருங்கள்' என்று மறுத்துவிட்டான்.

* * *

மூத்த ராஜகுமாரன் பல காடு மலைகளைக் கடந்து மலையடிவாரத்துக்கு கொஞ்ச தூரத்தில் வந்து சேர்ந்தான். மலையடிவாரத்தில் ஒரு குள்ளன் உட்கார்ந்திருந்தான். திடீரென்று 'யார் நீ?' என்று மிரட்டும் பாவனையில் அவன் கேட்டதும் ராஜ குமாரனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'நீ யாரடா? என்னைக் கேட்க? என்று மமதையுடன் பதில் கூறிவிட்டு மேலே நடந்தான். குள்ளன் 'அப்படியா? எங்கே நீ மேலே போவதை நான் பார்க்கிறேன்!' என்று ஆத்திரத்துடன் கூறி மறைந்து

விட்டான். ராஜ குமாரன் கண் பார்வையும் சட்டென்று மறைந்து குருடாகிவிட்டது! வழி தெரியாது தவித்து அழுது புலம்பி எங்கோ மூலையில் போய் சுருண்டு விழுந்து விட்டான்' பாவம்!

'இன்னும் அண்ணனைக் காணுமே' என்று தவித்த மற்ற இரு ராஜ குமாரர்களில் இரண்டாவது மகன்' தான் போய்ப் பார்த்துவிட்டு அண்ணனையும் அழைத்துக் கொண்டு, சஞ்சீவியையும் கொண்டுவந்து விடுவதாகச் சொல்லிப் புறப்பட்டான்.

பழைய குள்ளன் எதிர்ப்பட்டு முன்போலவே 'நீ யார்? எங்கே போகிருய்?' என்று கேட்டு மிரட்டினுன். 'நானு? நான் சஞ்சீவி மலைக்குப் போகிறேன். நீ யார்? எதற்காகக் கேட்கிருய்?' என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டான்.

குள்ளன் 'ஏன் தம்பி ஆத்திரப் படுகிருய்? இதோ இரண்டு சாலைகள் இருக்கின்றன அல்லவா? ஒன்று தங்கத் தகடு போட்ட சாலை. மற்ருென்று மண் சாலை. இரண்டும் சஞ்சீவி மலைக்குத் தான் கொண்டுபோய் விடும். ஆகவே உன் இஷ்டப்படி எந்த வழி வேண்டுமானுலும் போ!' என்று குறும்புச் சிரிப்புடன் கூறினுன்.

'நான் ராஜ குமாரன். ஆதலால் தங்கச் சாலை வழி போனுல்தான் கவுரவம்!' என்று எண்ணிக் கர்வத்துடன் அவ் வழி நடந்தான். குள்ளன் இடி இடி என்று சிரித்துவிட்டு முன் போல மறைந்து விட்டான். தங்கச் சாலையும் சட்டென்று மறைந்து கிடு கிடு பாதாளமாகிவிட்டது. ராஜ குமாரன் அந்தப் பாதாளத்தில் உந்தித் தள்ளப்பட்டு எங்கோ சுருண்டு விழுந்தான்.

* * *

கடைசி ராஜ குமாரனுன கருணுகரன் அண்ணன்மார் இருவரையும் நெடு நேரம் காணுது தாங்க முடியாத கவலையடைந்து தானே போய் வரத் தீர்மானித்தான். மற்றவர்கள் தடுத்தும் கேளாது தாமதம் செய்யாமல் புறப்பட்டு விட்டான்.

பழைய குள்ளன் அவனைப் பார்த்து 'ஏன் தம்பி? உங்களுக்கு வேறு வேலை யில்லையா? இப்படி ஒருவர் பின் ஒருவராக வரும் நீங்கள் யார்? எதற்காக இங்கு வருகிறீர்கள்?' என்று ரொம்ப ஆத்திரத்துடன் கேட்டான். கருணுகரன் விநயத்துடன் 'ஐயா, என் தந்தையார் கடுமையான வியாதியா[ல்] பீடிக்கப்பட்டு உயிருக்கு மன்ருடுகிருர். சஞ்சீவி பர்வதத்திலுள்ள 'மகா சஞ்சீவி'தான் அவர் நோயைத் தீர்க்க முடியுமாம். ஆகவே நான் அதை நாடி வந்தேன். தயவு செய்து தாங்கள் எனக்கு சஞ்சீவி மலைக்கு வழி காட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்' என்று கூறியதும்

குள்ளன் கோபம் குறைந்து விட்டது. பையனின் அடக்கமான வேண்டுகோளைக் கேட்டு மகிழ்ந்தவனாய் 'தம்பி, அதோ தெரியும் இரண்டு சாலைகள்தான் சஞ்சீவி மலைப் பாதையாகும். ஒன்று தங்கச் சாலை. மற்றது மண் சாலை. நீ எவ்வழி போக விரும்புகிறாய்?' என்று கேட்டான். கருணாகரன், கொஞ்சம் நிதானித்துவிட்டு 'மண் சாலையிலேயே நான் போகிறேன்' என்று கர்வமின்றிச் சொன்னான். உடனே குள்ளன் ரொம்பச் சந்தோஷம் அடைந்து, 'சரி, வா, நானே அழைத்துச் செல்லுகிறேன்' என்று வழி காட்டினான்.

மண் சாலை வழியாக அவர்கள் அந்தச் சஞ்சீவி மலையண்டையில் சென்றதும், ஒரு பெரிய குகை இருப்பதை ராஜ குமாரன் பார்த்தான். குகை வாயிலில் இரண்டு பிரும்மாண்டமான யாளி முகப் பிராணிகள் காவல் இருப்பதையும் பார்த்தான். உடனே குள்ளனிடம் மரியாதையுடன், 'ஐயா, அந்தப் பூதங்கள் என்னை விழுங்கி விடாமல் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டினான். குள்ளன் சிரித்துக்கொண்டே 'ஏன் உனக்கு அவைகளிடம் அவ்வளவு பயம்?' என்று கேட்டான்.

'பயமா? எனக்கா? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் மனித யத்தனத்தையும் மிஞ்சிய மாயை சக்தியுள்ள அப்பூதங்களுடன் நான் எப்படிப் போராட முடியும்? உங்களைப் போன்ற மாயாவிகள்தான் அவைகளைச் சமாளிக்க முடியும்' என்று தன்னடக்கத்துடன் சொன்னான்.

குள்ளனுக்கு ஒரே சந்தோஷம். 'சரி தம்பி! பயப்படாமல் என்னுடன் வா' என்று சொல்லிவிட்டு முன்னே சென்றான். பூதங்கள் அவனைக் கண்டதும் தலைவணங்கி வழி விட்டன. கருணாகரன் ஆச்சரியத்துடன் வாசற்படியண்டை நின்றான். குள்ளன் அவனிடம் 'தம்பி, நான் குகைக்குள் வரக்கூடாது. நீ மட்டும் தைரியமாகச் செல். அங்கு பயங்கரமான இருள் சூழ்ந்திருக்கும். தொலைவில் மின்னல் தெரியும். நீ அஞ்சாமல் அந்த மின்னலை நோக்கிச் செல. அங்கு அழகிய ஒரு அரண்மனையும், அதிலே மோகினியும், இருப்பாள்' என்று சொல்லிக் கருணாகரனுக்கு விடை கொடுத்தனுப்பினான். 'நான் திரும்பும்வரை தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும்' என்று குள்ளனைக் கருணாகரன் வேண்டினான். அவனும் ஒப்புக் கொண்டு வெளியில் உட்கார்ந்து கொண்டான். கருணாகரன் குகைக்குள் தைரியமாக நுழைந்தான். ஆயினும் அங்கே பரவியிருந்த இருள், பேயும் நடுங்கும்படியிருந்தது.

அஞ்சாது பொறுமையுடன் நடந்தான். கீழே பருக்கைக் கற்கள் நிறையக் கிடந்தன. அவைகள் அவன் பாதத்தைப் புண்ணாக்கித் துளைத்தன. மேலே 'ஹாய், ஊய்' என்று சத்தம் கேட்டன. ஆனால் அவன் எதற்கும் அஞ்சவில்லை. களைப்பு உண்டாயிற்று. தாகத்தால் நாவரண்டது. என்றாலும் பொறுமையுடன் தொலைவிலே தெரிந்த மின்னலை நோக்கி நடந்தான்.

முடிவிலே அழகிய அரண்மனையை அடைந்தான். அதைப்போன்றதொரு அரண்மனையை அவன் இதுவரை பார்த்ததேயில்லை.

(தொடரும்)

நக்ஷத்திர நாவலாசிரியர்

பிரபல ஆங்கில நாவலாசிரியரான 'சாமர்செட் மௌகாம்' சீக்கிரத்தில் சினிமா நக்ஷத்திரமாக மாறப்போகிறாராம். கடந்த ஐம்பது வருஷங்களில் மௌகாம் எழுதின சிறந்த சிறுகதைகள் சிலவற்றைத் திரைப்படமாக்க ஸிட்னிபாக்ஸ் என்பவர் தீர்மானித்துள்ளார். 'க்வின்டெட்' என்ற தலைப்புப் பெயருடன் தயாராகப்போகும் இப்படத்தில் அந்தக் கதைகள் பற்றிய விவரங்களை மௌகாம் மூலம் உலகினருக்கு அறிவிக்கப்படுமாம். சாமர்செட் மௌகாமுக்கு இப்போது எழுபத்தி மூன்று வயதாகிறது. ஒரு நாவலாசிரியரின் ஐம்பது வருஷ வாழ்க்கையே ஒரு சுவாரஸ்யமான நாவல் போன்றிருக்கும். எனவே அவர் வாழ்க்கை வரலாற்றையும் ஒரு படக் கம்பெனியார் தயாரிக்க முன் வருவார்கள் என்றும் எதிர் பார்க்கலாம்!

குழந்தைகள் விளையாட்டு

'குஞ்சலம்'

அஷ்ட சகிகள் விளையாட்டு என்று மாமி போன இதழிலேயே சொன்னளே என்று வெகு ஆவலாகக் காத்துக்கொண் டிருப்பீர்க ளென்று எனக்குத் தெரியும்.

லலிதா, விசாகா, இந்துலேகா, துங்கவித்யா, சம்பகலதா, சித்ரா ரங்கதேவி, ஸ்ரீமதி (சுதேவி என்று கூட அவளை அழைப்பதுண்டு) என்பவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை எப்பொழுதும் சூழ்ந்திருக்கும் கோபியர்கள், ஸ்ரீ கிருஷ்ணன் ராதையுடன் ஏகாந்தத்தி லிருக்கும்போது இந்த அஷ்ட சகிகளும் கூடி இந்த விளையாட்டை விளையாடி ஸ்ரீ கிருஷ்ணனைய் மாறிவிடுவார்களாம். விளையாட்டை எழுதுகிறேன். பிறகு ரொம்ப வேடிக்கையா யிருக்கும்.

எட்டுப் பெயர்களை துண்டு காகிதங்களில் எழுதிக்கொள்ளவும். நான்கு பேர்களாகப் பிரிந்து இரு கட்சிகளாக ஏற்படுத்திக் கொள்ளவும்.

ஒவ்வொரு கட்சியிலும் ஒரு தலைவியைப் பொறுக்கி எடுக்க வேண்டும். பத்தடி தூரத்தில் இரு கட்சியினரும் கூடி எதிர்க் கட்சியிலிருந்து ஒரு பெயரைக் கூப்பிடவேண்டும. அதாவது லலிதா, விசாகா, இந்து லேகா, துங்கவித்யா என்ற நான்கு பெயர்கள் கொண்ட பெண்கள் ஒரு கட்சியிலிருக்கிறீர்கள்என்று வைத்துக்கொள்ளுங்கள். எதிர்க் கட்சியிலிருந்து ஒருவர் அவர்களுக்கு இநதுலேகா வேண்டுமென்று கூப்பிடுகிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்துலேகா என்ற சீட்டு வைத்திருக்கும் பெண்ணைச் சரியாக சுட்டிக் காட்டிவிட்டால் அவள் எதிர் கட்சியுடன் போய் சேர்ந்துவிடுவதுடன் அவர்கள் கையிலிருக்கும் சீட்டுகளையும் மாற்றிக் கொள்ளவேண்டும். மறுபடியும் எதிர்க் கட்சியிலிருந்து கூப்பிட வேண்டும். இப்போது ஒரு கட்சியில் லலிதா, விசாகா, துங்க வித்யாவும், இன்னென்றில் இந்துலேகா, சித்ரா, சம்பகலதா, ரங்க தேவி, ஸ்ரீமதி என்ற ஐந்து பேர்கள் இருப்பார்கள். சித்ரா வேண்டுமென்கிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். சித்ராவாக இல்லாமல் இன்னெருவள் பெயர் வைத்துக்கொண் டிருப்பவளா யிருந்தால் கூப்பிட்டவர் கட்சிக்கு ஒருவரும் வரவேண்டாம். இப்படி அங்கேயும் இங்கேயுமாய் எட்டு தரம் அலைந்து விட்டவள் ஆட்டத்திலிருந்து தள்ளப்பட்டு விடப்படுவாள். யார் ஒருவள் ஒரு தரம் கூட ஒரு கட்சியினராலும் கூப்பிடப்படாம லிருக்கிருளோ அவள்தான் கிருஷ்ணனுகி விடுகிருள். கிருஷ்ணனுக மாறியவளை நடுவில் வைத்துப் புல்லாங்குழல் வாசிக்க வைத்து,

> வேணு கூவுது—
> வாவா வென்றழைக்குது
> உள்ளம் உருகுது—
> வெள்ளம் பெருகுது (வேணு)
>
> குழல் ஒலிக்குது—
> கழல் இழுக்குது
> உடல் குழையுது—
> உணர்வு விழுது (வேணு)
>
> ஓசைக் கேக்குது—
> ஆசை வீங்குது
> நாலும் கெட்டது—
> நான் தலைப்பட்டது (வேணு)

என்று பாடிக் குதித்து ஆடுங்கள்.

கலை விருந்து

சென்னையிலே கிறிஸ்துமஸ் விழாவின் போது தான் சென்னை மியூஸிக் அகாடமியின் வருஷாந்திர விழா நடைபெறுவது வழக்கமாகி விட்டது! இம் மாதம் 23-ந் தேதி முதல் அகாடமியின் 21-வது ஆண்டு விழா ஆரம்பமாகி 1948, ஜனவரியுடன் முடிவடைகிறது. மாணவ மாணவிகளுக்குத் தனித் தனியாக சங்கீதப் போட்டி வைத்திருக்கிறார்கள். வாய்ப்பாட்டு, வீணை, பிடில் ஆகிய மூன்று பிரிவுகளாக போட்டி வைத்துள்ளனர். தமிழ் சங்கீதப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளுபவர்கள் தேவாரம், திருப்புகழ், ராமாயண பதம், அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ணபாரதி, சுப்பிரமணிய அய்யர் பாடல்கள் முதலியவற்றிலிருந்து குறைந்தது இருபது பாடல்களேனும் பாட வேண்டுமாம். சங்கீதப் போட்டியை பத்து பகுதியாக பிரித்துள்ளனர். பதினைந்து வயதுக்குக் குறையாத, சங்கீதத்தையே தொழிலாகக் கொள்ளாத அமெச்சூர்காரர் தான் ஷ போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளத் தகுதியுள்ளவர்கள். வருஷா வருஷம் மியூசிக் அகாடமியார் இம்மாதிரி போட்டி ஏற்படுத்திப் பரிசளிப்பது சங்கீதத்துக்கு அவர்கள் செய்யும் பெருந் தொண்டாகும்.

இவ் வருஷத்துத் தலைவராக திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீமான் செம்மங்குடி சீனுவாசய்யர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். ஆண்டு தோறும் இம் மாதிரி தலைவரைத் தேர்ந்தெடுப்பதுமன்றி அவர்களுடைய அனுபவத்தையும், ஞான சம்பத்தையும் மியூஸிக் அகாடமியார் பெறுவது போற்றற்குரிய செயலாகும். புகழுக்குப் பாத்திரமாகப் போகும் வருங் கால இளம் வித்வான்களுக்கு, சகல விதத்திலும் அகாடமியார் ஊக்கமூட்டி வருவதையும், குறிப்பிடாமல் இருக்க முடியாது.

தவிரவும் இவ் வருஷத்து விழாவில் பங்கெடுத்துக் கொள்ள பிரபல சங்கீத வித்வான்களை ஏற்பாடு செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. இளம் வித்வான்களுக்கு நல்ல சந்தர்ப்பமும் கொடுக்கப் பெற்றிருக்கிறது. கிறிஸ்துமஸ் விழாவின் அகாடமியார் அளிக்கும் சங்கீத விருந்தை வரவேற்பது மட்டும் இன்றி அனைவரும் அனுபவிக்கவும் வேண்டும் என்றே சொல்லுகிறோம்.

பரத நாட்டியம்

பேபி ராஜாமணி

வழுவூர் ஸ்ரீ ராமையா பிள்ளை அவர்களின் சிஷ்யை பேபி ராஜாமணி அரங்கேற்றம் நவம்பர் மாதம் 24-ந் தேதி நடைபெற்றது. டிசம்பர் பதின்மூன்றாந் தேதி யன்று மீண்டும் செயின்ட் மேரிஸ் ஹாலில் விமரிசையாக ராஜாமணியின் நடனம் நடைபெற்றது குழந்தை ராஜாமணி தன் மழலை முகத்தில், பரத நாட்டியத்தின் முக்கியமான பாவம் ததும்ப அழகாக ஆடுகிறார். நாளாவட்டத்தில் இன்னும் கலை வளர்ச்சியும் பேரும் புகழும் பெற்று ஒரு "புகழ் மணி"யாக விளங்குவாள் என எதிர்பார்க்கிறோம். குழந்தைக்கு எங்கள் மனமார்ந்த ஆசிகள்.

197645

Printed and Published by Vai. Govindan at Shakti Press., Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras. Editor: S. VISALAKSHI.

அட! இதென்ன 'ரிப்பன்' அடிக்கடி தகருர் பண்ணுதே……

சக்தி

பொங்கல் மலர்

அழகிய படங்கள்
அறிஞரின் கட்டுரை,
கவிதைகளுடன்
தயாராகிறது

விற்பனையாளரிடம்	தபால்மூலம்
ரூ. 1-8	ரூ. 1-12

சக்தியின் வருஷ சந்தா	இரண்டு வருஷங்களுக்கு
ரூபாய் ஆறு	ரூபாய் பதினொன்று

சக்தி காரியாலயம்

சென்னை—14

Printed by Shakti Press Ltd., Madras 14

9/4/99